## කර්මාන්ත සහ ව්‍යවසායකත්ව සංවර්ධන අමාත්‍යාංශය
## கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு
## Ministry of Industry and Entrepreneurship Development

# 2025

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT

# 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**
**செலவினத் தலைப்பு இலக்கம் :149**

இந்த அறிக்கை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

# பொருடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | v |
| அத்தியாயம் 01 : நிறுவனத்தின் சுயவிபரத்தை செயல்படுத்துவதன் சுருக்கம் | 1 - 6 |
| அத்தியாயம் 02 : முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் | 7 - 76 |
| அத்தியாயம் 03 : முழுமையான நிதியியல் செயலாற்றுகை | 77 - 98 |
| அத்தியாயம் 04 : செயலாற்றுகை குறிகாட்டிகள் | 99 - 102 |
| அத்தியாயம் 05 : நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை | 103 - 106 |
| அத்தியாயம் 06 : மனிதவள விபரங்கள் | 107 - 154 |
| அத்தியாயம் 07 : இணக்கப்பாட்டு அறிக்கை | 155 - 162 |
| இணைப்பு | i |

# முன்னுரை

2020.08.28 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் தேவைப்பாட்டுக்கு அமைவாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் 2025ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முதலாவது அத்தியாயம் அமைச்சின் நிறுவனத்தின் சுயவிபரத்தை செயல்படுத்துவதன் சுருக்கத்தினை வெளிப்படுத்துகின்றது. அதற்கமைவாக, இந்த அத்தியாயம் தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள், நிறுவனத்தின் கட்டமைப்புடன் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் வரும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களின் விபரங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த அறிக்கையின் இரண்டாவது அத்தியாயம் அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள், கூட்டுத்தாபனங்கள், தொழில்முயற்சி நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களின் ஊடாக செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கினை அறிக்கையிடுகின்றது.

அதன் மூன்றாம் அத்தியாயம் அமைச்சின் 2025ஆம் ஆண்டின் முழுமையான நிதியியல் செயலாற்றுகையை வெளிப்படுத்துகின்றது. அமைச்சின் வருடாந்த செயற்த்திட்டத்திற்கு சமாந்தரமாகவுள்ள அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகளின் முன்னேற்றம் நான்காம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் ஐந்தாம் அத்தியாயம் அமைச்சின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவினை வெளிப்படுத்துவதுடன், அதற்காக அமைச்சு வழங்கிய பங்களிப்பினையும் உள்ளடக்கியுள்ளது.

அமைச்சின் மனித வள விபரங்களை ஆறாம் அத்தியாயம் கொண்டுள்ளது. இந்த அத்தியாயத்தில் பதவியணி மற்றும் மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் சுருக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இணக்க அறிக்கைகள் ஏழாம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த சுற்றநிருபத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாதிரியில் குறிப்பிட்டவாறு எதிர்பார்க்கும் செயலாற்றுகை பற்றிய இணக்க அறிக்கை ஏழாம் அத்தியாயத்தின் ஊடாக

# அத்தியாயம் 01

## நிறுவனத்தின் சுயவிபரத்தை செயல்படுத்துவதன் சுருக்கம்

## 1.1 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்

### தொலைநோக்கு

“இலங்கையில் நிலைபேறான மற்றும் அனைவருக்கும் நன்மைகளை வழங்கும் வளர்ச்சிக்காக உலகளாவிய போட்டித்தன்மையுள்ள தேசிய கைத்தொழில் தளத்தை நிறுவுதல்”

### செயற்பணி

**“கூர்மையான தொழில்நுட்பம், அறிவு மற்றும் புதுமையான சிந்தனை கொண்டமைந்த உகந்த சூழலை உருவாக்குவதன் ஊடாக பன்முகப்படுத்தப்பட்ட, உயர் பெறுமதி சேர்க்கப்பட்ட, புத்தாக்க கைத்தொழில் தயாரிப்பு, பசுமை நடைமுறைகளைப் பயன்படுத்தல், உயர் சந்தை அணுகல் சந்தர்ப்பங்கள் மற்றும் அனைவருக்கும் நன்மைகளை வழங்கும் கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு ஊக்குவித்தல்”**

### நோக்கங்கள

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில், தொழில்துறையின் பங்களிப்பை 2024 ஆம் ஆண்டின் 26.7% இலிருந்து, 2030 ஆம் ஆண்டளவில் 28% ஆக உயர்த்துதல்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில், உற்பத்தித் துறையின் பங்களிப்பை 2024 ஆம் ஆண்டின் 16.4% இலிருந்து 2030 ஆம் ஆண்டளவில் 20% ஆக உயர்த்துதல்.
3. தேசிய பொருளாதாரத்தில் தொழில்முனைவோர் பங்களிப்பை, 2023 ஆம் ஆண்டின் 3.2% இலிருந்து 2030 ஆம் ஆண்டளவில் 10% ஆக உயர்த்துதல்.
4. 2024 ஆம் ஆண்டில் ருளுனு 12.7 பில்லியனாக இருந்த பொருள் ஏற்றுமதியை 2030 ஆம் ஆண்டிற்குள் ருளுனு 28 பில்லியனாக உயர்த்துதல்.
5. தொழில்துறை நோக்கங்களுக்கான நில அளவையை, 2023 ஆம் ஆண்டின் 0.01% இலிருந்து 2030 ஆம் ஆண்டளவில் 1% ஆக உயர்த்துதல் (சர்வதேச விதிமுறை 3%).

## 1.2 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபடம



## 1.2 நிறுவன ஒழுங்கமைப்பு வரைபடம்



## 1.3 அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் பிரிவுகள்

### பிரிவுகள

1. கொள்கை அபிவிருத்திப் பிரிவு
2. கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு
3. துறைசார் அபிவிருத்திப் பிரிவு
   - 3.1 அபிவிருத்திப் பிரிவு 1
   - 3.2 அபிவிருத்திப் பிரிவு 2
   - 3.3 அபிவிருத்திப் பிரிவு 3
4. கைத்தொழில் பதிவுப் பிரிவு
5. கருத்திட்ட முகாமைத்துவ அலகு
6. அரச தொழில்முயற்சி மற்றும் மறுசீரமைப்பு பிரிவு
7. பாரம்பரியத் தொழில்கள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் பிரிவு
8. தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரிவு
9. திட்டமிடல் பிரிவு
10. நிர்வாகப் பிரிவு
11. கணக்கு மற்றும் பெறுகைப் பிரிவு
12. பொறியியல் பிரிவு
13. உள் கணக்குப் பிரிவு

### கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்

1. புடவைத் திணைக்களம் **(DTI)**
2. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை **(IDB)**
3. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை **(NEDA)**
4. கஹட்டகஹ கிரபைட் லங்கா கம்பனி லிமிடட் **(KGLL)**
5. லங்கா பீங்கான் கூட்டுத்தாபனம் (செங்கல் மற்றும் ஓடுகள் பிரிவு) **(CCC)**
6. இலங்கை கனிய மணல் கம்பனி லிமிடட **(LMSL)**
7. வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் **(NPCL)**
8. லங்கா லேலன்ட் லிமிடட் **(LLL)**
9. வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனி **(LPL)**
10. வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி **(NSL)**
11. இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம **(SLCC)**
12. வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி **(PCCL)**
13. வரையறுக்கப்பட்ட பி.சீ.சீ லங்கா கம்பனி **(BCC)**
14. தேசிய வடிவமைப்பு மத்தியநிலையம் **(NDC)**
15. இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் **(SLITA)**
16. இலங்கை கைப்பணி கைத்தொழில் சபை (லக்சல) **(SLHB)**
17. தேசிய கைப்பணிப் பேரவை **(NCC)**
18. வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல **(LSL)**
19. தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை **(NGJA)**
20. இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் **(GJRTI)**
21. சிறிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரிவு
22. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் **(SCRI)**
23. தேசிய உற்பத்தித்திறன செயலகம் **(NPS)**
24. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை **(SLEDB)**
25. வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கம்பனி **(KSCL)**
26. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
27. கல்லோயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி
28. புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் **(GSMB)**

# அத்தியாயம் 02

## முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

## 2.1 கொள்கை அபிவிருத்திப் பிரிவு

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு உகந்த சூழலை உருவாக்குதல் மற்றும் கைத்தொழில் துறையை "கைத்தொழில் 4.0" (Industry 4.0) மட்டத்திற்கு உயர்த்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் "தேசிய கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை'' தயாரிக்கப்பட்டுள்ளது.

- தேசியத் திட்டமிடல் திணைக்களத்திடம் (Department of National Planning) இந்த வரைவுக் கொள்கையைச் சமர்ப்பித்த பின்னர், அவர்களிடமிருந்து பெறப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில், நில மேலாண்மை என்பது கைத்தொழில் அபிவிருத்தியைப் பாதிக்கும் ஒரு முக்கிய பிரச்சினை என்பது கண்டறியப்பட்டது. இந்த வரைவுக் கொள்கையில் அது உள்வாங்கப்படாததால், அந்த விடயம் சேர்க்கப்பட்டதுடன், தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப இக்கொள்கை ஆவணத்தில் உரிய திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- இந்தத் தேசியக் கொள்கையின் மூலோபாயத் திட்டம் ஏற்கனவே காலாவதியாகியுள்ளதால், அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் ஏனைய அனைத்துப் பங்குதாரர்களின் பங்களிப்புடன் அது தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. அத்திருத்தப் பணிகள் நிறைவடைந்தவுடன், அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அவை சமர்ப்பிக்கப்படும்.

**எதிர்காலத் திட்டங்கள்**

**தேசிய கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.**

- தேசியக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையின் ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமானது, தற்போதைய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- தேசியக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக, அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கும் ஏனைய அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய அமைச்சு எதிர்பார்க்கின்றது.

## 2.2 கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- அமைச்சானது தீவு முழுவதும் 20 மாவட்டங்களில் மின்சாரம், நீர் மற்றும் வீதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் 1,093.82 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்துள்ளதுடன், 35 கைத்தொழில் பேட்டைகளையும் நிறுவியுள்ளது.

- 06 புதிய கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- அந்த 35 கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் 5,666.56 மில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளது. அத்துடன், குறித்த கைத்தொழில் பேட்டைகளில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காகத் தனியார் துறையினர் 76,300.81 மில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளனர்.

- கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 432 வர்த்தக ரீதியிலான கைத்தொழில்கள் இயங்கி வருவதுடன், 24,451 வேலைவாய்ப்புகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

- இந்த வருடத்தில், கைத்தொழில் பேட்டைகளில் வெற்றிடமாக உள்ள நிலப்பகுதிகள் 23 புதிய முதலீட்டாளர் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

- ஆடை மற்றும் புடவை உற்பத்திக்கு விசேடமான ஏறாவூர் கைத்தொழில் வலயம்.

  கழிவுநீர் அகற்றல் கருத்திட்டம் 100% நிறைவடைந்துள்ளது.

  மின்சார விநியோகப் பணிகள் 100% நிறைவடைந்துள்ளன.

  அணுகு வீதி அபிவிருத்தி முதலாம் கட்டம் 100% மற்றும் இரண்டாம் கட்டம் 100% நிறைவடைந்துள்ளன.

  நீர் வழங்கலுக்கான குழாய் அமைக்கும் பணிகள் 100% நிறைவடைந்துள்ளன.

  தரைக்கீழ் நீர்நிலைத் தொட்டி அமைக்கும் பணிகள் 45% நிறைவடைந்துள்ளன.

- நாலந்தா, மாகந்துர (மேற்கு), வெலியோயா, களுத்துறை, உலுப்பனை, உடுகாவ, கரந்தெனிய மற்றும் கொலன்னாவ போன்ற தற்போதுள்ள கைத்தொழில் பேட்டைகளில் நீர், மின்சாரம் மற்றும் வீதி அபிவிருத்தி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தல்.

- புதிய கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ள இங்கிரிய, வாழைச்சேனை, பரந்தன், ரைகம (இரண்டாம் கட்டம்), அமுதபொல, தம்புள்ளை, ரைகம (முதலாம் கட்டம்) மற்றும் கட்டுநாயக்க போன்ற கைத்தொழில் பேட்டைகளில் நீர், மின்சாரம் மற்றும் வீதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

**சவால்கள்**

- கைத்தொழில் பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ள அரச நிறுவனங்களின் தாமதங்கள்.
- கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்குப் பொருத்தமான காணியைக் கண்டறிவதில் உள்ள சிரமங்கள்.
- பெரும்பாலான முதலீட்டாளர்கள் மேல் மாகாணத்தில் நிலங்களைப் பெற்றுக்கொள்ளவே விரும்புகின்றனர். இருப்பினும், மேல் மாகாணத்தில் கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்குப் பொருத்தமான நிலங்களைக் கண்டறிவது கடினமாக உள்ளது.
- கொழும்பிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு மூலப்பொருட்களையும் முடிவுற்ற பொருட்களையும் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு அதிகமாகும். எனவே, முதலீட்டாளர்கள் ஏனைய பகுதிகளில் நிலங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவதில்லை.

**எதிர்கால இலக்குகள்**

- புதிய முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிதல்.
- கைத்தொழிலாளர்களை பசுமைத் தொழிற்றுறையை நோக்கி வழிநடத்துதல்.
- தற்போதுள்ள கைத்தொழில பேட்டைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- இங்கிரிய, வாழைச்சேனை, பரந்தன், ரைகம (இரண்டாம் கட்டம்), கட்டுநாயக்க, அழுதபொல, தம்புள்ளை, சந்தமல்கம போன்ற அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கைத்தொழில் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பூர்த்தி செய்தல்.
- வருடத்திற்குள் கைத்தொழில் பேட்டைகளில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்காக குறைந்தது 30 புதிய திட்டங்களுக்குப் பொருத்தமான நிலங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- குறைந்தது 20 முதலீட்டாளர்களுக்காகப் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- 2027 ஆம் ஆண்டளவில் புளியங்குளம் மற்றும் கம்புருபிட்டிய ஆகிய கைத்தொழில் பூங்காக்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

# 2.3 துறைசார் அபிவிருத்திப் பிரிவு

## அபிவிருத்தித் துறை I

### முன்னேற்றம்/ வெற்றிகள்

- Profood / Propack சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2025 ஆனது 50 வெளிநாட்டுத் தொழில் கண்காட்சியாளர்கள் உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்புடன் சுமார் 350 கண்காட்சி கூடாரங்களைக் (Stalls) கொண்டு நடத்தப்பட்டது. இதில் 12 சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிலதிபர்களுக்காக சலுகைக் கட்டணத்தின் கீழ் 10 கூடாரங்களைக் கொண்ட ஒரு விசேட கண்காட்சி மண்டபமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இக்கண்காட்சியை சுமார் 25,000 பார்வையாளர்கள் பார்வையிட்டதுடன், பல்கலைக்கழகங்களின் புதிய கண்டுபிடிப்புகளை வணிகமயமாக்குவதற்கும் (Commercialization) இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

- Lanka Pack 2025 சர்வதேசக் கண்காட்சியானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்புடன் 160 கண்காட்சி கூடாரங்களைக் (Stalls) கொண்டு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதில் சுமார் 6,000 பார்வையாளர்கள் கலந்துகொண்டதுடன், பொதியிடல் (Packaging) தொடர்பான இயந்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்துவதற்கும் இது ஒரு சிறந்த தளமாக அமைந்தது.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை (SMEs) மேம்படுத்துவதற்காக ISO -9001, ISO-14001, ISO-22000, ISO-50001 ஆகிய சர்வதேசத் தரச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு கைத்தொழில்களுக்கு வசதிகள் அளிக்கப்பட்டன. இதற்கமைய, தெரிவு செய்யப்பட்ட 33 கைத்தொழில் நிறுவனங்கள் இச்சான்றிதழ் செயல்முறையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளன.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) திட்டத்திற்காக 27 கைத்தொழில் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில், அவற்றுள் 09 நிறுவனங்கள் சான்றிதழ் வழங்கும் செயல்முறையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளன.

- பதப்படுத்தப்பட்ட உணவு உற்பத்திகள், பொதியிடல் உற்பத்திகள், பால் சார்ந்த உற்பத்திகள், வாசனைத் திரவியங்கள் சார்ந்த உற்பத்திகள் மற்றும் தென்னை நார் சார்ந்த உற்பத்திகள் ஆகிய கைத்தொழில்களின் வரி அமைப்புகளில் (Tax Structures) மாற்றங்களை மேற்கொள்வதற்குத் தேவையான அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- திட்வா (Ditwar) சூறாவளியினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான அடிப்படைப் பின்னணியை அமைப்பதற்கான ஒத்துழைப்புகளை வழங்குதல்

**சவால்கள்**

- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைப் போட்டித்தன்மையை எதிர்கொள்ளக் கூடிய, தரமான மற்றும் பாதுகாப்பான உணவு உற்பத்திகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டுக் கைத்தொழில்களை ஊக்குவித்தல்.
- உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வழங்குதல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சிகளை அளித்தல்.
- உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வழங்குதல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சிகளை அளித்தல்.
- உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கான வசதிகளை அளித்தல் மற்றும் அவசியமான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் சிக்கல்களைத் தீர்த்தல்.

**எதிர்கால இலக்கு**

- பதப்படுத்தப்பட்ட உணவுத் துறையில் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- உள்நாட்டு மதிப்புச் சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரித்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கு உயர்தர தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்.
- உயர்தரம் வாய்ந்த மற்றும் விளைத்திறனுடன் பொதி செய்கின்ற பொருட்களை உற்பத்தி செய்ய பொதி செய்யும் துறையை ஊக்குவித்தல்.
- உற்பத்தித் துறைகளின் உற்பத்தித்திறனையும் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் செயல்திறனையும் அதிகரிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.
- சந்தைகளின் போட்டித்தன்மை மற்றும் நிலைத்தன்மையை அதிகரிப்பதன் மூலமும், அந்தத் தொழில்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலமும் வருமானம் மற்றும் வேலை உருவாக்கும் திறனை அதிகரிப்பதற்கான மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துதல்.
- தேசிய ரீதியாக சர்வதேச கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் உள்நாட்டு தொழில்துறைகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் இந்தத் தொழில்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்த உதவுதல்.
- தொழில்துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பற்றி விவாதித்து அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க ஆலோசனைக் குழுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து ஆலோசனையைப் பெறுதல்.
- நிரல் அமைச்சு, திறைசேரி, வர்த்தக சபை, பிற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு மற்றும் அதன் மூலம் தொழில்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்துதல்.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து உள்நாட்டு மற்றும் சர்வதேச கண்காட்சிகளை ஏற்பாடு செய்து, அந்தத் தொழில்களுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளைத் தயார்படுத்துவதற்கு உதவுதல்.

- தொழில் வழங்குபவர்கள் தங்கள் ஊழியர்களிடமிருந்து எதிர்பார்க்கும் திறன்களுக்கும், ஊழியர்கள் கொண்டிருக்கும் உண்மையான திறன்களுக்கும் இடையிலான திறன் இடைவெளியைக் (ளுமடைட புயி) குறைப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

## அபிவிருத்தித் துறை II

### முன்னேற்றம் / வெற்றிகள்

- புதிதாக உற்பத்தி செய்யப்படும் படகுகளைச் செலுத்துவதற்குத் தேவையான வசதிகளுடன் கூடிய படகு செலுத்துமிடத்தின் நிர்மாணப் பணிகள் பேருவளை மீன்பிடித் துறைமுகத்திற்கு அருகில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவு செய்யப்படவுள்ளது. இத்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நன்மைகளாகப் படகு உற்பத்தித் துறையின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு, வேலை வாய்ப்புக்கள் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு இது பங்களிப்புச் செய்வதைக் குறிப்பிடலாம்.

- மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 08 மர வேலைப்பாட்டுக் கலைஞர்களுக்கு NVQ மட்டம் 4 பயிற்சி வேலைத்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது. மரப்பயன்பாடு தொடர்பான அத்தியாவசிய தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதும், மரவேலை இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான நடைமுறைத் திறன்களை அதிகரிப்பதும் இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

- சர்வதேச சந்தையில் நுழையும் புதிய தொழில்துறைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், புதிய தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளும் தொழில்துறைகளை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதி மற்றும் கடல்சார் சுற்றுலாவினூடாக (Nautical Tourism) வெளிநாட்டுச் செலாவணி வருவாயை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் படகு உற்பத்தித் துறைக்கான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை நடத்துவதற்கு நிதி அனுசரணை வழங்கப்பட்டது. (2025 இல் நடத்த திட்டமிடப்பட்டிருந்த இக்கண்காட்சி பல்வேறு காரணங்களினால் 2026 ஜனவரியில் நடைபெற்றது)

### சவால்கள்

- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் போட்டியை எதிர்கொள்ளக்கூடிய தரமான தயாரிப்புகளுக்கு உள்நாட்டு தொழில்களை ஊக்குவித்தல்.

- குறைந்த விலையிலான தரம் குறைந்த பொருட்கள் உள்நாட்டு சந்தைக்கு வருவதைக் கட்டுப்படுத்துவதற்கும், அதன் மூலம் கைத்தொழில் நிறுவனங்கள் எதிர்நோக்கும் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு வழங்குகின்ற உள்நாட்டுத் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலமும், ஆய்வக சோதனை வசதிகளை வழங்குவதன் மூலமும் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்.

- நாட்டின் தற்போதைய பாதகமான பொருளாதார நிலைமை, புதிய வரிக் கொள்கைகள் மற்றும் அதிகரித்து வரும் எரிசக்தி செலவுகள் காரணமாக தொழில்துறை நிறுவனங்கள் எதிர்கொள்ள வேண்டிய தாக்கத்தைக் குறைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

**எதிர்கால இலக்கு**

- வெளிநாட்டுச் சந்தைகளை அணுகுவதற்கு அவசியமான சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரச் சான்றிதழ்கள் மற்றும் தரப் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உள்நாட்டு கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அதற்கான நிதி உதவியை வழங்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- பேருவளை மீன்பிடித் துறைமுக வளாகத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும், புதிதாக உற்பத்தி செய்யப்படும் படகுகளைச் செலுத்துவதற்குத் தேவையான வசதிகளைக் கொண்ட படகு செலுத்துமிடத்தின் நிர்மாணப் பணிகளை 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு செய்தல்.

- இலங்கையில் வாகன இலத்திரனியல் (யுரவழஅழவளைந நுடநஉவசழனைஉள) மற்றும் சிப் உற்பத்தி (ஊாip ஆயரெகயஉவரசiபெ) ஆகிய துறைகளை ஒரு பலமான ஏற்றுமதித் துறையாக மாற்றுவதற்கு அரசாங்கம் மற்றும் தனியார் துறையினர் இணைந்து ஒரு விரிவான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## அபிவிருத்தித் துறை III

### முன்னேற்றம் / வெற்றிகள்

- 2007 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் தோல் மற்றும் காலணி கண்காட்சி, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (டீஆஐஊர்) நடைபெற்றது. இதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காலணி மற்றும் காலணி சார்ந்த உற்பத்தியாளர்களின் 262 விற்பனைக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

- அழகுசாதனப் பொருட்களுக்கான “ர்ரஅயெ சுநிநயவ ஐளௌரடவ ீயவஉா“ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல், மூலக்கூற்று உயிர்வேதியியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ஐடீஆடீ) ஓர் ஆய்வகத்தை நிறுவுவதற்கு 10.28 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2025 ஆம் ஆண்டில் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, ஆய்வக நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- கைத்தொழிலாளர்களின் சிறந்த செயற்திறனைப் பாராட்டுவதற்காக, அமைச்சின் ஒத்துழைப்புடன் “ஊஊஊஐ யுஉாநைஎநசள யுறயசனள 2025“ விருது வழங்கும் நிகழ்வு 2025.10.23 அன்று நடைபெற்றது.

- உற்பத்திக் கைத்தொழில்களுக்கான “வணிகத் தொடர்ச்சித் திட்டம்“ (அனர்த்த முகாமைத்துவத் திட்டம்), அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வளப்பங்களிப்புடன் 2025.07.25 அன்று சுமார் 40 கைத்தொழிலாளர்களின் பங்குபற்றலுடன் மேலதிகப் பட்டப்படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் (ீஐஆ) நடைபெற்றது.

**எதிர்கால இலக்கு**

- 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் காலணி மற்றும் தோல் பொருட்கள் விற்பனை கண்காட்சியை 2026 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு, கைத்தொழில் அமைச்சின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- ஆண்டுதோறும் நடத்தப்படும் 'CNCI Achievers Award' விருது வழங்கலுக்காக 2026 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- கைத்தொழிலாளர்களுக்காக "வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவம" (அனர்த்த முகாமைத்துவத் திட்டம்) குறித்த விழிப்புணர்வுத் திட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- கொழும்பு பல்கலைக்கழகத்தில் அழகுசாதனப் பொருட்களுக்கான 'Human Repeat Insult Patch' பரிசோதனை ஆய்வக வசதியை நிறுவும் பணிகள் 3 ஆண்டுகளில் நிறைவடையவுள்ளதால், அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

## 2.4 கைத்தொழில் பதிவுப் பிரிவு

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- கைத்தொழில் அமைச்சின் கீழ் 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை 4,107 உற்பத்தித் தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- கைமுறை முறையை ஒன்லைன் (இணையவழி) முறைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதற்கான கொள்முதல் செயல்முறை நிறைவடைந்துள்ளதுடன், "சயன்ஸ் லேண்ட் இன்பர்மேஷன் டெக்னாலஜி (பிரைவேட்) லிமிடெட்" (Science Land Information Technology (Pvt) Ltd) நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அத்தொழில்நுட்ப முறையை அபிவிருத்தி செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்திஇ கைத்தொழில்களைப் பதிவு செய்யும் செயல்முறையை வினைத்திறனுடனும் விரைவாகவும் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>சவால்கள்</u>**

- நாட்டில் இயங்கிவரும் பெரும்பாலான தொழிற்சாலைகள், ஒழுங்குமுறை அமைப்புகள் இல்லாத காரணத்தினால் கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. இது கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதில் ஒரு முக்கிய தடையாக அமையக்கூடும்.
- கைத்தொழிலாளர்கள் அமைச்சில் தங்களைப் பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் அல்லது அது குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தவறும்பட்சத்தில், ஒரு வலுவான தரவுத்தளத்தைப் (Database) பராமரிப்பதில் அது சிக்கலாக அமையக்கூடும்.

- 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத் திருத்தத்தில், வினைத்திறனான கைத்தொழில் பதிவுச் செயல்முறையை உறுதிப்படுத்துவதற்காக வலுவான சட்ட ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**எதிர்கால இலக்குகள்**

- அமைச்சின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துவதற்காக இணையவழி (Online) வணிகப் பதிவு முறையை நிறுவுதல்.
- பிரதேச செயலகங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஊடாகக் கைத்தொழில் பதிவுகளை ஊக்குவித்தல்.
- இணையவழி (Online) கைத்தொழில் பதிவு முறையின் வினைத்திறனையும் பயனர் அனுபவத்தையும் மேம்படுத்தல்.
- பிராந்திய மற்றும் மத்திய அலுவலகங்களுக்கு இடையிலான சிறந்த ஒருங்கிணைப்பின் ஊடாக, விண்ணப்பங்களைச் செயலாக்குதல் மற்றும் அனுமதி வழங்குவதில் ஏற்படும் தாமதங்களைக் குறைத்தல்.
- மேம்பட்ட முடிவெடுத்தல் பணிகளுக்காகத் தரவு முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்துதல்.
- பதிவுச் செயல்முறைகளுடனான இணக்கப்பாட்டை மேம்படுத்துவதற்காக, பங்குதாரர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்துதல்.

## 2.5 கருத்திட்ட முகாமைத்துவ அலகு

கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் திட்ட முகாமைத்துவ அலகு (PMU), இரண்டு கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

1. சிறு மற்றும் குறுந்தொழில் முன்னோடி மற்றும் முயற்சியாண்மை மேம்பாட்டுத் திட்டம் III - சுழற்சி நிதி (SMILE III Revolving Fund)
2. சூழல்நேயத் தீர்வு சுழற்சி நிதிக் கடன் திட்டம் II (E-Friends II)

**I. சிறு மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முன்னோடி மற்றும் முயற்சியாண்மை மேம்பாட்டுத் திட்டம் III - சுழற்சி நிதி (SMILE III Revolving Fund)**

SMILE III சுழற்சி நிதியமானது (Revolving Fund), புதிய நிறுவனங்களை நிறுவுவதற்கும் அல்லது உற்பத்தித்திறன் மற்றும் செயல்பாட்டு மட்டத்தை அதிகரிப்பதற்கும் அல்லது தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் குறைந்த வட்டி விகிதக் கடன்களை வழங்குகின்றது. அத்துடன், இக்கடன் திட்டமானது சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளின் (SME) நிறுவன ரீதியான திறன் மற்றும் தயாரிப்பு மேம்பாட்டிற்கும் (Product Development) வழிவகுக்கின்றது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுடன் கலந்தாலோசித்து, பின்வரும் நோக்கங்களுடன் இக்கடன் திட்டம் 2012 மே மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் (SMEs), புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கோ அல்லது பொருளாதார ரீதியாகவும் நிதி ரீதியாகவும் லாபகரமான திட்டங்களை விரிவாக்கம் செய்வதற்கோ அவர்களுக்கு நிதி ரீதியாக உதவி செய்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் (SMEs), முகாமைத்துவ, கணக்கியல் மற்றும் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்குத் தேவையான மூலதனத்தை வழங்குதல்.
- இடைநிலை நிதி நிறுவனங்களின் (Intermediary Financial Institutions) நிறுவன ரீதியான திறன்களை வலுப்படுத்துதல்.

இத்திட்டமானது 10 இடைநிலை நிதி நிறுவனங்களின் (PCIs) ஊடாக முயற்சியாளர்களுக்குத் துணைக்கடன்களை வழங்குகின்றது. அவையாவன: இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நேஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, சனச அபிவிருத்தி வங்கி மற்றும் DFCC வங்கி.

**முன்னேற்றம் / வெற்றிகள்**

**மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில், திட்ட முகாமைத்துவ அலகானது (PMU) 298 துணைத் திட்டங்களுக்காக (Sub-projects) 2,045 மில்லியன் ரூபாயை விடுவித்துள்ளது.**

- **ஆண்டுக்கான ஒதுக்கீடு - 4,000 மில்லியன் ரூபா**
- **செலவினம் - 2,045 மில்லியன் ரூபா**

## II. சூழல்நேயத் தீர்வு நிதியத் திட்டம் II (E-Friends II) சுழற்சி நிதிக் கடன் திட்டம்

சூழல்நேயத் தீர்வு நிதியத் திட்டம் II (E-Friends II) ஆனது கழிவு குறைப்பு, வள மீட்பு, எரிசக்தி சேமிப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கைத்தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காக குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களை வழங்குகின்றது. இத்திட்டமானது தேசிய சுற்றுப்புறச்சூழல் சட்டத்தினால் (National Environmental Act) நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு முறைகள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்குவதற்கும் கைத்தொழில்களுக்கு உதவுகின்றது.

இத்திட்டமானது 11 பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (PCIs) ஊடாக முயற்சியாளர்களுக்குத் துணைக்கடன்களை வழங்குகின்றது. அவையாவன: இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நேஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி, DFCC, LOLC மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி.

இக்கடன் திட்டம் நிதி அமைச்சுடன் கலந்தாலோசித்து 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**முன்னேற்றம் / வெற்றிகள்**

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில், திட்ட முகாமைத்துவ அலகானது (PMU) 51 துணைத் திட்டங்களுக்காக (Sub-projects) 498 மில்லியன் ரூபாயை விடுவித்துள்ளது.

- ஆண்டுக்கான ஒதுக்கீடு - 1,500 மில்லியன் ரூபா
- செலவினம் – 498 மில்லியன் ரூபா

**சவால்கள்**

- இந்த இரண்டு கடன் திட்டங்களுக்கு இணையாக, சிறு மற்றும் குறுந்தொழில் முயற்சியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன், குறைந்த வருடாந்த வட்டி விகிதங்களைக் கொண்ட மேலும் பல கடன் திட்டங்கள் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.
- நவீன தொழில்நுட்பத்துடன் இற்றைப்படுத்தப்படாமை.

**எதிர்கால இலக்கு**

2025.12.16 திகதியிடப்பட்ட අමප/25/2335/804/285 இலக்கமிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க, அனைத்து நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கடன் திட்டங்களையும் ஒரே கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைப்பதன் மூலமும், அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமும், மேற்கூறிய இரண்டு கடன் திட்டங்களும் 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

## 2.6 பொது நிறுவனங்கள் மற்றும் மறுசீரமைப்பு பிரிவு

### பொது நிறுவனங்கள பிரிவு

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- 1000 இளைஞர் வர்த்தக முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யும் தேசிய திட்டம் (4 i - திட்டம்)

- கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இணைந்து நடைமுறைப்படுத்தும் 1000 இளைஞர் வர்த்தக முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யும் தேசிய திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 17 மாவட்டங்களை (கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகல், கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, அநுராதபுரம், பொலன்னறுவை, வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு) உள்ளடக்கி 504 வர்த்தக முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

- தெரிவு செய்யப்பட்ட இந்த வர்த்தக முயற்சியாளர்களுக்கான ஆரம்ப விழா 2025.10.22 அன்று கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சியான்மை அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சரின் தலைமையில், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இத்திட்டத்தின் முதலாம் கட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட வர்த்தக முயற்சியாளர்களின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டதுடன்.
- இந்த இளைஞர் வர்த்தக முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்து ஏற்றுமதி சந்தை வரை வணிக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான பணிகள் இந்த அமைச்சு மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் எரகம, மஹியங்கனை, உஸ்வெவ மற்றும் ஒட்டுசுட்டான் தொழிற்சாலைகளை அரச - தனியார் பங்களிப்பின் கீழ் நடாத்திச் செல்லல்

- 2025 மே மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் எரகம, மஹியங்கனை, உஸ்வெவ மற்றும் ஒட்டுசுட்டான் தொழிற்சாலைகளை அரச-தனியார் பங்களிப்பின் (PPP) கீழ் நடத்துவதற்குக் கொள்கைவளவிலான அனுமதி கிடைத்துள்ளதுடன், அதற்குப் பொருத்தமான அரச-தனியார் பங்களிப்பு மாதிரியை அடையாளம் காண்பதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு தொழிற்சாலைகளும் அமைந்துள்ள பிரதேசங்களிலுள்ள களிமண் படிவுகள் பற்றிய ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- இத்தொழிற்சாலைகளின் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டதன் பின்னர், உரிய தரப்பினரிடம் முறையாகக் கையளிப்பதற்கும், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும், அவ்வூழியர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் மகா திறைசேரியின் இணக்கப்பாட்டுடன், புதிய கூட்டுப் பங்காண்மை நிறுவனத்திற்கு அவர்களின் விருப்பத்தின் பேரில் அலகிடுதல் அல்லது பொருத்தமான ஓய்வூதிய முறையொன்றைப் பரிந்துரைப்பதற்கான உரிய அமைச்சரவை மரபுத்தொடர் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- இவ்வமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ், இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பங்கதெனிய, யட்டியன, வேஉட மற்றும் எலயாபத்துவ ஆகிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளில் தொழிற்பேட்டைகளை (Industrial Parks) நிறுவுவதற்கும், பிங்கிரிய தொழிற்சாலையை அரச-தனியார் பங்களிப்பின் கீழ் நடத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2025.12.31 ஆம் திகதி அமைச்சரவை மரபுத்தொடர் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- 2026 ஜூன் மாதம் கொழும்பில் ஸ்ரீலங்கா ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படவிருக்கும் ”லங்கா EXPO 2026” சர்வதேச வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக, ஒரு செயல்பாட்டுக் குழுவை நியமித்து, மாதாந்தம் குழுக்கூட்டங்களை நடத்துவதுடன் அதன் முன்னேற்றங்களை ஆராய்தல்.

**சவால்கள்**

- கனிம வள இருப்புக்கள் தொடர்பான சேகரிக்கப்பட்ட தரவுகள் இல்லாமை.
- அரசு காணிகளில் உள்ள சட்டவிரோத கட்டுமானங்கள் மற்றும் குடியேற்றவாசிகள் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தடைகள் ஏற்படல்.
- அரச தொழிற்சாலைகள் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணையாக இக்காலத்திற்கு ஏற்ப புதுப்பிக்கப்படாமை.

**எதிர்காலத் திட்டங்கள்**

- தொழில்துறைகள் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலின் கீழ், ஏனைய அரச அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள நிறுவனங்களின் முழுமையான அனுசரணை மற்றும் ஒத்துழைப்புடன், ஸ்ரீலங்கா ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் "ஸ்ரீலங்கா நுஜீமு 2026" என்ற பெயரிலான சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2026 ஜூன் மாதம் 18, 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் (BMICH) நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 1000 இளம் தொழில்முனைவோரை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தை (4 i - திட்டம்) 2026 ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்தின் எரகம, மஹியங்கனை, உஸ்வெவ, பிங்கிரிய மற்றும் ஒட்டுசுட்டான் தொழிற்சாலைகளை அரச-தனியார் பங்களிப்பின் (PPP) கீழ் நடத்துவதற்குத் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- இவ்வமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ், இலங்கை பீங்கான் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பங்கதெனிய, யட்டியன, வேஉட மற்றும் எலயாபத்துவ ஆகிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளில் தொழிற்பேட்டைகளை) நிறுவுவதற்காக உரிய பிரிவினரிடம் ஒப்படைத்தல்.

**மறுசீரமைப்பு பிரிவு**

**முன்னேற்றம் / அடைவுகள்**

- **இலங்கை பொஸ்பேட் நிறுவனத்தினால் அகழ்ந்தெடுக்கப்படும் ரொக் பொஸ்பேட்டிற்கு (Rock Phosphate) பெறுமதி சேர்த்தல் செயற்திட்டத்தை அரச-தனியார் பங்களிப்பு (PPP) முறையின் கீழ் நடைமுறைப்படுத்துதல்.**

i. இச்செயற்திட்டம் தொடர்பாக 2024.12.06 அன்று சமர்ப்பிக்கப்பட்ட கூட்டு அமைச்சரவைப் பத்திரத்திற்கு (Joint Cabinet Memorandum) அமைவாக, mkp/24/2160/810/004 எனும் இலக்கத்தைக் கொண்ட 2024.12.18 திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, இச்செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கொள்கை ரீதியான அனுமதி (Policy Approval) கிடைத்துள்ளது.

ii. இச்செயற்திட்டம் தொடர்பாக 2025.03.19 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக, அமி/25/0476/810/013 எனும் இலக்கத்தைக் கொண்ட 2025.04.07 திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, கௌரவ சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு பணிக்கப்பட்டது. அதற்கமைய, சட்டமா அதிபரின் அனுமதி (Clearance) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

iii. இச்செயற்திட்டம் தொடர்பாக 2025.07.21 அன்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைவாக, அமி/25/1305/810/013 – I எனும் இலக்கத்தைக் கொண்ட 2025.08.04 திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, விருப்பங்களை (Aspirations/Expressions of Interest) கோருவதற்கும் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அனுமதி கிடைத்துள்ளது.

iv. அதற்கமைய, 2025.08.17 அன்று இச்செயற்திட்டத்திற்கான அபேட்சை வெளிப்பாடுகளை (EOI) கோருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

v. அதற்கமைய, நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் 14 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினால் அபேட்சை வெளிப்பாடுகள் (EOI) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

vi. செயற்திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கான (RFP) ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

- **அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகமற்ற நிறுவனங்களை மீளாய்வு செய்வது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்**

அரசாங்கத்திற்குச் சொந்தமான வர்த்தகமற்ற நிறுவனங்களை மீளாய்வு செய்வது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இணங்க, இந்த அமைச்சின் கீழ் உள்ள பின்வரும் நிறுவனங்களை மறு சீரமைப்பதற்காக (Restructuring) அதிகாரிகள் குழுக்கள் நியமிக்கப்பட்டு, அதற்கான செயற்திட்டங்கள் (Action Plans) தயாரிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவற்றின் முன்னேற்றங்கள் உரிய காலப்பகுதிக்குள் பிரதமர் அலுவலகத்திற்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளன.

1. இலங்கை புடைவை மற்றும் ஆடை உற்பத்தி நிறுவனத்தை (SLITA) பட்டங்களை வழங்கும் நிறுவனமாக தரம் உயர்த்துவதற்கும், திறைசேரியில் (Treasury) தங்கியிருக்காமல் சுயாதீனமாக இயங்குவதற்குமான ஒரு மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

    - மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்காக பிரதான குழு உட்பட 6 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
    - மேற்குறிப்பிட்ட குழுக்களின் கூட்டங்கள் தனித்தனியாக நடைபெற்று வருவதுடன், அக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் இறுதி அறிக்கையைத் தயாரித்து, மூலோபாயத் திட்டத்தை (Strategic Plan) வரைவு செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB), தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) மற்றும் அமைச்சின் சிறு முயற்சிகள் அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டு, அவற்றை ஒன்றிணைத்து மிகவும் பலமிக்க ஒரு தனி நிறுவனமாக நிறுவுதல்.

    - நிறுவனங்களை ஒன்றிணைக்கும் செயல்முறை மற்றும் நிறுவனக் கட்டமைப்பு தொடர்பான எண்ணக்கருப் பத்திரத்திற்கு (Concept Paper) அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.
    - ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருவதுடன், மனித வளம், டிஜிட்டல் மாற்றம், சட்டம் மற்றும் நிதி ஆகிய துறைகளுக்கான நான்கு ஆலோசகர்களை (Consultants) பணியமர்த்துவதற்கு நிதி உதவிகளை வழங்குவதற்கும், அந்த ஆலோசனைக் குழுவை நியமிப்பதற்கும் அவ்வங்கி நடவடிக்கை எடுத்து வருகின்றது.

3. தேசிய அருங்கலைகள் சபை, தேசிய வடிவமைப்பு மத்திய நிலையம் மற்றும் இலங்கை கைவினைப் பொருட்கள் சபை (லக்ஸல) ஆகியவற்றின் செயற்பாடுகள் ஒரே குறிக்கோளை நோக்காகக் கொண்டுள்ளதால், அந்த அனைத்துப் பணிகளையும் மிகவும் வினைத்திறனுடன் முன்னெடுக்கக் கூடிய வகையில் அவற்றை ஒரே நிறுவனமாக மாற்றுதல்.

    - வரைவு செய்யப்பட்டுள்ள புதிய சட்டமூலமானது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு (Legal Draftsman's Department) மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
    - ஒருங்கிணைப்பு அறிக்கையின் ஆரம்ப வரைவு (Rough Draft) பிரதான குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, அக்குழுவினரால் வழங்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய, குழு அறிக்கையைத் திருத்தியமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

4. இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை (GJRTI), தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் (NGJA) ஆராய்ச்சிப் பிரிவாக நிறுவுவதற்குத் தேவையான கட்டமைப்பு ரீதியான மறு சீரமைப்புகளை (Structural Reforms) முன்னெடுத்தல்.

    - ஒருங்கிணைப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதுடன், அது 2026.01.31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

5. "இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது (EDB), 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை 45 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இந்த இலக்கினுள் 28 பில்லியன் அமெரிக்க டாலர்களைப் பொருட்களின் ஏற்றுமதி (Merchandise Exports) மூலம் ஈட்டிக்கொள்வதற்குத் தேவையான மூலோபாயத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதால், அதற்கேற்ப அவசியமான நிறுவன ரீதியான மறு சீரமைப்புகளை (Institutional Reorganization) முன்னெடுத்தல்.

- தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் (National Export Development Plan) பூர்த்தி செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர், திருத்தப்பட்ட மறுசீரமைப்புத் திட்டம் (Revised Restructuring Plan) தயாரிக்கப்படவுள்ளது

6. கஹட்டகஹ சுரங்கத்தில் உள்ள கிராபைட் இருப்புக்களை ஆய்வு செய்தல், கிராபைட் அகழ்வாராய்ச்சி மற்றும் பதப்படுத்துதல் தொழில்கள் உட்பட கிராபைட்டுக்கான பெறுமதி சேர் திட்டத்திற்காக விருப்பம் தெரிவிப்பதற்கான பிரேரணைகளை (Expression of Interests – EOI) அழைப்பதற்கான நாளிதழ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

7. பரந்தனில் காஸ்டிக் சோடா∴குளோரின் (Caustic soda/Chlorine) திட்டத்திற்கான ஆலோசனைச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக விருப்பம் தெரிவிப்பதற்கான பிரேரணைகள் (EOI) கோரப்பட்டு முடிவடைந்துள்ளதுடன், முன்மொழிவுக்கான கோரிக்கைகளை (RFP) கோரும் செயல்முறை தற்போது செயல்பாட்டில் உள்ளது.

8. குறுஞ்சாத்தீவு (ஆனையிறவு - வடக்கு) உப்பளத்தை அரச - தனியார் பங்களிப்பு முறையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக தகைமை வெளிப்பாட்டிற்கான (EOI) அழைப்பு விடுக்கப்பட்டு, கள விஜயம் மற்றும் முதலீட்டாளர்களுடனான சந்திப்பு என்பன நடத்தப்பட்டுள்ளன. தற்போது வினவல்களுக்கான பதில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

9. லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் அகழ்வாராய்ச்சி செய்யப்படும் கனிப்பொருள் மணலுக்கான பெறுமதி சேர் திட்டத்தை அரச-தனியார் பங்களிப்பின் கீழ் செயல்படுத்துவதற்காக திட்டக் குழுவை நியமிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **உள்நாட்டுச் சர்க்கரைத் தொழில்துறையை மேம்படுத்துதல்**

i. உள்நாட்டுச் சர்க்கரைத் தொழில்துறையை மேம்படுத்துவது தொடர்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழுவினால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை, 2025.06.04 அன்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ii. உள்நாட்டுச் சர்க்கரைத் தொழில்துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து உணவுப் பாதுகாப்புக் கொள்கை மற்றும் பாதுகாப்புக்கான குழுவிற்கு (Food Policy and Security Committee) அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சவால்கள்**

- திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்பத் திறன்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

- இறக்குமதி செய்யப்படும் சர்க்கரை மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை ஆகியவற்றிற்கு விதிக்கப்பட்டுள்ள வரி முரண்பாடுகள்.

**எதிர்காலத் திட்டங்கள்**

- இலங்கை பொஸ்பேட் நிறுவனத்தினால் அகழ்ந்தெடுக்கப்படும் ரொக் பொஸ்பேட்டிற்கு (Rock Phosphate) பெறுமதி சேர்க்கும் செயற்திட்டத்தை அரச-தனியார் பங்களிப்பு (PPP) முறையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக, திட்ட முன்மொழிவுகளைக் கோரி (RFP) தகுந்த முதலீட்டாளர் ஒருவரைத் தெரிவு செய்தல்.

- அமைச்சின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களை மறுசீரமைக்கும் (Restructuring) நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- லங்கா சர்க்கரை நிறுவனம் (Lanka Sugar Company Private Limited) பெல்வத்தை வளாகத்தில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களை சுற்றுலா ஈர்ப்பு மையங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தை அரச-தனியார் பங்களிப்பு (PPP) முறையின் கீழ் முன்னெடுப்பதற்கான அபேட்சை வெளிப்பாடுகளை (EOI) கோருதல்.

- பின்வரும் திட்டங்களுக்காக 2026 ஆம் ஆண்டிற்குள் முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

    i. குறுஞ்சாத்தீவு (ஆனையிறவு - வடக்கு) உப்பளத்தை அரச - தனியார் பங்களிப்பு முறையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பது தொடா்பான பிரேரணை.

    ii. கஹட்டகஹ சுரங்கத்தில் உள்ள நரம்பு கிராபைட் (மின்னிரன்) இருப்புக்களை ஆய்வு செய்தல், கிராபைட் அகழ்வாராய்ச்சி மற்றும் பதப்படுத்துதல் தொழில்கள் உட்பட கிராபைட்டுக்கான பெறுமதி சேர் திட்டத்திற்காக விருப்பம் தெரிவிப்பதற்கான பிரேரணைகளை (நுழிசநளளழைெ ழக ஐவெநசநளவள – நுழுஐ) அழைத்தல்.

iii. லங்கா மினரல் சான்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தினால் அகழ்வாராய்ச்சி செய்யப்படும் கனிப்பொருள் மணலுக்கான பெறுமதி சேர் திட்டத்தை அரச-தனியார் பங்களிப்பின் கீழ் செயல்படுத்துவதற்கு தகைமை வெளிப்பாட்டிற்கான (நுழுஐ) அழைப்பு விடுத்தல்

- அத்துடன், பரந்தனில் கோஸ்டிக் சோடா.ஃ.குளோரின் (ஊயரளவவைஉ ளழனய.ஃ.ஊாடழசஉைெ) திட்டத்திற்காக 2027 ஆம் ஆண்டில் பொருத்தமான முதலீட்டாளரொருவரைத் தெரிவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

- தேசிய கனிமக் கொள்கையைத் தயாரித்து அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று, அக்கொள்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும், அதற்கு இணையாக கனிப்பொருட்களுக்கான உரிமங்களை வழங்கும் போது பயன்படுத்த வேண்டிய நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைத் (ளுழுீ) தயாரித்து, அதற்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- 2009 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருள் சட்டத்தைத் திருத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று, அச்சட்டத்திற்குத் தேவையான காலோசித திருத்தங்களை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.7 பாரம்பரியத் தொழில்கள், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் பிரிவு

### பாரம்பரிய கைத்தொழில் பிரிவு

**முன்னேற்றம் / வெற்றிகள்**

கைத்தறி மற்றும் புடைவைக் கைத்தொழில் ஊக்குவிப்பு - ரூபா மி. 20 (2025)

**01. பத்திக் மற்றும் கைத்தறி புடைவைக் கைத்தொழில்களுக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம்**

❖ பத்திக் மற்றும் நெசவுத் தொழில் துறை அபிவிருத்திக்காக உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, மூலிகை எச்சங்கள் மூலம் இயற்கை சாயங்களை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சு, தேசிய வடிவமைப்பு மையம் மற்றும் இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTEC) ஆகியவற்றுடன் இணைந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டமொன்றை முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சியின் முடிவுகள் நவம்பர் 21 முதல் 23 வரை கண்டி சிட்டி சென்டரில் (KCC) தேசிய வடிவமைப்பு மையத்தினால் நடத்தப்பட்ட கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. (உண்மையான செலவு - ரூபா மி. 1.3264

**02. ஏற்றுமதி சார் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான திறன் மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் – முதலாம் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம்**

❖ இலங்கை நெசவு மற்றும் ஆடை நிறுவனத்துடன் (SLITA) இணைந்து “இலங்கையின் தையல்காரர்களின் பாரம்பரிய திறன்களை உலகளாவிய சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்காக“ தொழில்நுட்ப, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முறைத் திறன்கள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, 430 பயனாளிகளுக்கு NVQ 3 / 4 மட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**03. பத்திக், கைத்தறி மற்றும் ஆடைத் தொழில்துறை ஊக்குவிப்பு**

i. **புத்தாக்கம், உற்பத்தி பல்வகைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்துதல் தொடர்பான 03 மாகாண மட்ட செயலமர்வுகள் நடாத்துதல்**

உள்நாட்டு நெசவுத் தொழில் துறையின் பத்திக் மற்றும் கைத்தறி துறைகளை மேம்படுத்தவும், ஏற்றுமதி சார் உற்பத்திப் பொருளாதாரமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு, அமைச்சு, புடவை கைத்தொழில் திணைக்களம், மாகாணக் கைத்தொழில்/ நெசவுத் திணைக்களங்கள்,

தேசிய தொழில் முயற்சி அதிகாரசபை (NEDA) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) ஆகிய அரச நிறுவனங்கள் இணைந்து புத்தாக்கம், உற்பத்தி பல்வகைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தை போன்ற விடயங்களை உள்ளடக்கிய 03 மாகாண மட்டச் செயலமர்வுகளை தெற்கு, மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் நடாத்தியுள்ளன. இதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகம் வளப்பங்களிப்பு வழங்கியுள்ளது, 280 பேர் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர். (உண்மையான செலவு - ரூபா மி. 1.827)

ii. **கிராமப்புற நெசவுத் தொழில்துறை அபிவிருத்திக்கான செயலமர்வுகளை நடாத்துதல்.**

கம்பஹா மாவட்டத்தின் திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராமப்புற நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களை ஆய்வு செய்து, புத்தாக்கம், புதிய வடிவமைப்புக்கள் மற்றும் மின்னனு சந்தைப்படுத்தல் (E-marketing) தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் வளப்பங்களிப்புடன் செயலமர்வை நடாத்துதல். 80 பயனாளிகள் இதன் மூலம் நன்மையடைந்துள்ளனர். (உண்மையான செலவு - ரூபா மி. 0.163)

iii. **தேசிய மட்டத்திலான சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு வாய்ப்புகளில் பங்குபற்றுதல்**

பாரம்பரியக் கைத்தறித் துறையைப் பாதுகாத்து அதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக, கைத்தறி நெசவுத் துறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் திறமைகளை மாகாண மட்டத்தில் பாராட்டி அவர்களை தேசிய மட்டத்திற்கு இட்டுச் செல்லும் நோக்கில் புடவை கைத்தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ரன்சலு - தேசியக் கைத்தறி ஆடை கண்காட்சி, விற்பனைச் சந்தை மற்றும் விருது வழங்கல் விழாவிற்கான பங்களிப்பை வழங்குதல். (உண்மையான செலவு - ரூபா மி. 4.85)

iv. **கைத்தறி நெசவுத் தொழில்துறை தொடர்பான வடிவமைப்பு ஆல்பம் மற்றும் மாதிரிப் புத்தகங்களை அச்சிடல்**

இலங்கைக்கே உரிய தனித்துவமான பாரம்பரியக் கைத்தறி மற்றும் நெசவுத் துறை வடிவமைப்புகளைப் பாதுகாத்து, வருங்கால சந்ததியினருக்குக் கையளிக்கும் நோக்கில், புடவை கைத்ொதழில் திணைக்களத்துடன் இணைந்து கைத்தறி நெசவு வடிவமைப்பு ஆல்பம் மற்றும் மாதிரிப் புத்தகங்களை அச்சிடுவதற்குப் பங்களிப்பு வழங்கப்பட்டது. (உண்மையான செலவு - ரூபா மி. 1.172)

**v. "இலங்கையின் பாரம்பரிய வடிவமைப்புக்களின் மரபுரிமையை மீளுருவாக்கம் செய்தல்"**

இலங்கைக்கு உரித்தான வரலாற்றுச் சிறப்புமிக்க வடிவமைப்புக்கள் மற்றும் பாரம்பரியக் கலைகளை வருங்கால சந்ததியினருக்குக் கையளிப்பதையும், உலகளாவிய சமூகத்தின் பயன்பாட்டிற்காக அந்த வடிவமைப்புகளைத் தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்திப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு தேசிய வடிவமைப்பு மையத்தினால் (National Design Centre) இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாகப் பாரம்பரிய வடிவமைப்புகளைப் பாதுகாப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் புகைப்படமெடுத்தல் என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**<u>வெளிநாட்டுத் திறன் மேம்பாட்டு வேலைத்திட்டங்கள்</u>**

கௌரவ அமைச்சரின் தலையீட்டின் கீழும், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முழுமையான அனுசரணையுடனும், உள்நாட்டு கைத்தறி மற்றும் விசைத்தறித் துறையில் ஈடுபட்டுள்ள 30 கலைஞர்கள் விசேட திறன் மேம்பாட்டு வேலைத்திட்டமொன்றில் பங்கேற்றனர். இவ்வேலைத்திட்டம் 2025 நவம்பர் 09 முதல் 15 வரை இந்தியாவின் கோயம்புத்தூரில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச நெசவு மற்றும் முகாமைத்துவக் கல்லூரியில் (SVPISTM) நடைபெற்றது

**பாரம்பரிய மற்றும் கிராமப்புறக் கைத்தொழில் ஊக்குவிப்புத் திட்டம் - ரூபா மி. 100**

நடைமுறைப்படுத்தும் நிறுவனம்: தேசிய கைவினைக் கவுன்சில்

**01. கட்டுபெத்த மர வடிவமைப்பு மற்றும் புத்தாக்க மையத்தின் அபிவிருத்திப் பணிகள்**

மர மற்றும் மரம் சார்ந்த உற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்வதற்கும், கலைஞர்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு, தேசிய கைவினைக் கவுன்சிலுக்குச் சொந்தமான கட்டுபெத்த மர வடிவமைப்பு மற்றும் புத்தாக்க மையத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (உண்மையான செலவு - ரூபா மி. 6.172)

**02. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தலஊக்குவிப்பு வேலைத்திட்டம்**

பாரம்பரிய மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் தமது உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கும், பாரம்பரிய கைவினைத் துறையை மேம்படுத்துவதற்கும் அமைச்சும், தேசிய கைவினைக் கவுன்சிலும் இணைந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தலஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை நடத்தின.

மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் 15 சந்தைப்படுத்தலஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. (மத்திய மாகாணம், கொழும்பு-02, பதுளை, இரத்தினபுரி, குளியாப்பிட்டிய, யாழ்ப்பாணம், அனுராதபுரம், கண்டி, பொலன்னறுவை, மட்டக்களப்பு, காலி, கேகாலை, வவுனியா, திருகோணமலை). (உண்மையான செலவு - ரூபா மி. 3.52)

**வெளிநாட்டு சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்கள்**

இலங்கையின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் பாரம்பரியக் கைவினைப் பொருட்களை ஊக்குவித்தல், கலைஞர்களுக்கு சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்குதல், இலங்கை மற்றும் இந்திய கலாசார அம்சங்களை மேம்படுத்துதல் மற்றும் இரு நாட்டு கைவினைஞர்களுக்கிடையில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்கும் நோக்கில் தேசிய கைவினைக் கவுன்சில், சுவாமி விவேகானந்தா கலாசார மையம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து இந்தோ-இலங்கை (Indo – Sri lanka) சர்வதேச கைவினைப் பொருட்கள் கண்காட்சியை நவம்பர் 13 முதல் 16 வரை ஹேவ்லாக் சிட்டி மோல் (Havelock City Mall) வளாகத்தில் நடாத்தியுள்ளன. (உண்மையான செலவு - ரூபா மி. 8.3)

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைப்படுத்தல் வேலைத்திட்டங்களின் ஒட்டுமொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 517 ஆகும்.

- பாரம்பரியக் கைவினைஞர்களுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குவதன் மூலமும், அவர்களின் படைப்புகளை நியாயமான விலையில் கொள்வனவு செய்வதன் மூலமும், சந்தைப்படுத்தல் காட்சிக்கூடங்கள் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு பாரம்பரியக் கைவினைப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் பல்லேகலை மற்றும் காலி “சிப்னாரா“ (Sipnara) ஆகிய 02 சந்தைப்படுத்தல் காட்சிக்கூடங்களில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (உண்மையான செலவு - ரூபா மி. 3.114)

- உள்நாட்டு பாரம்பரிய மற்றும் கலாசார விழுமியங்களைக் கொண்ட கைவினைத் துறையைப் பாதுகாப்பதற்கும், பாரம்பரிய கைவினைக்கலைத் துறையை மேம்படுத்துவதற்கும் மற்றும் அதனை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு, பத்தரமுல்ல "அபே கம" (Ape Gama) வளாகத்திலுள்ள கைவினைப் பொருட்கள் அருங்காட்சியகத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (உண்மையான செலவு - ரூபா மி. 2.655)

**கைவினைப் பரிமாற்ற வேலைத்திட்டம்**

- தேசிய கைவினைக் கவுன்சில், பங்களாதேஷ் பெங்கால் அறக்கட்டளை, பங்களாதேஷ் கைவினைக் கவுன்சில் மற்றும் பங்களாதேஷிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஆகியன இணைந்து பங்களாதேஷ் வளப்பங்காளர்களைக் கொண்டு, 20 உள்நாட்டு ப்ளக்ஸ் (Hana) வடிவடைப்பாளர்களுக்கு கைவினை அறிவு, புதிய வடிவமைப்புகள் மற்றும் வர்ணங்களின் பயன்பாடு தொடர்பான அறிவை வழங்குவதற்காக வதிவிடப் பயிற்சி வேலைத்திட்டமொன்றை நடாத்துதல். (உண்மையான செலவு - ரூபா மி. 0.776)

- அனுபவ ரீதியான சுற்றுலா அணுகுமுறையின் கீழ் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு, சிகிரிய கைவினை மற்றும் கலாச்சார கிராமத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளுதல். (உண்மையான செலவு - ரூபா மி. 30.023)

- நாடு முழுவதிலும் உள்ள சிறந்த கைவினைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகும் கைவினைப் படைப்புகளை தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் பாராட்டுவதற்காக வருடாந்தம் "சில்ப அபிமானி" (Shilpa Abhimani) விருது வழங்கல் விழா நடத்தப்படுகிறது. 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விருது வழங்கல் விழாவிற்கான நிலுவையில் இருந்த செலவினங்களை இவ்வருடத்தில் செலுத்தி முடித்தல். (உண்மையான செலவு - ரூபா மி. 1.378).

**சவால்கள்**

i. பாத்திக் மற்றும் நெசவுத் தொழில்துறை அபிவிருத்திக்காக உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, மூலிகை எச்சங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை சாயங்கள் (Natural Pigments) வர்த்தக ரீதியாக அறிமுகப்படுத்துதல்.

ii. நவீன தலைமுறையினரை பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் மற்றும் நெசவுத் துறைகளின் பால் ஈர்த்தல்.

iii. பாரம்பரியக் கைத்தொழில் துறையினூடாக மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் ஏற்றுமதி வருமானத்திற்கான பங்களிப்பை அதிகரித்தல்.

**<u>எதிர்கால இலக்குகள்</u>**

i. பாத்திக் மற்றும் கைத்தறித் துறையின் அபிவிருத்திக்கு அவசியமான தரமான மூலப்பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதில் நிலவும் சிரமங்களைக் குறைப்பதற்காக, அமைச்சு, லங்கா சலுசல வரையறுக்கப்பட்ட நிறுவனம் மற்றும் தொழில்துறைத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து நெசவுத் தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

ii. 2025 ஆம் ஆண்டில் தேசிய வடிவமைப்பு மையத்தினால் (NDC) நடைமுறைப்படுத்தப்பட்ட “இலங்கையின் பாரம்பரிய வடிவமைப்புக்களின் மரபுரிமையை மீளுருவாக்கம் செய்தல்“ எனும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

iii. பாரம்பரியக் கைவினைப் பொருட்கள் துறையின் அபிவிருத்திக்காக, மூலப்பொருட்களின் இருப்பு மற்றும் கைத்தொழில் விரிவாக்கத்தைக் கண்டறிவதற்கும், கலைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களை வெளிக்கொணர்வதற்கும் தற்போதுள்ள நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

iv. கம்பஹா மாவட்டத்தின் திவுலபிட்டிய பிரதேசத்தை மையமாகக் கொண்டு, கிராமப்புற நெசவுத் தொழில்துறை அபிவிருத்திக்காக பிரதேச மட்டத்தில் தொழில் தொகுப்பு மேம்பாடு அபிவிருத்தி (Cluster Development) நடுத்தர வணிகங்களை ஒரே இடத்தில் ஒன்றிணைத்து மேம்படுத்தல் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

v. தேசிய கைவினைக் கவுன்சில், தேசிய வடிவமைப்பு மையம் (NDC) மற்றும் இலங்கை கைவினைப் பொருட்கள் சபை (Laksala) ஆகிய மூன்று நிறுவனங்களையும் ஒரே பணிப்பாளர் சபை மற்றும் ஒரே கட்டளையின் கீழ் ஒரே நிறுவனமாக ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், இதன் மூலம் கைவினைப் பொருட்கள் துறையை அபிவிருத்தி செய்தல்.

vi. புடவை கைத்தொழில் துறை அபிவிருத்தி மற்றும் அவற்றுக்கு மிகவும் பயனுள்ள வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மாகாணக் கைத்தொழில் திணைக்களங்கள் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து எதிர்காலத்தில் செயற்படுவதற்காக புடவை கைத்தொழில் தொழில்துறைத் திணைக்களத்தை மீளமைப்பதற்கு (Restructuring) தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

## இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் பிரிவு

### முன்னேற்றம் / வெற்றிகள்

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை நிறுவுவது தொடர்பான கட்டமைப்புச் சீர்திருத்தங்களை அடையாளப்படுத்தும் அறிக்கையின் ஆரம்ப வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

- இரத்தினக்கல் அகழ்வு உரிமங்களை வழங்குவதற்கும், அவை தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும் புதிய முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டில், இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் மற்றும் வைர ஏற்றுமதி மூலம் 374 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டது.

- இரத்தினக்கல் அகழ்வு உரிமங்களை வழங்குவதற்கு எதிராகக் கிடைக்கப்பட்ட 54 பொது முறைப்பாடுகள் மற்றும் உரிமங்கள் வழங்கப்படாமைக்கு எதிராகக் கிடைக்கப்பட்ட 14 மேன்முறையீடுகள் தொடர்பில் ஆய்வுகள் நடாத்தப்பட்டு, உரிய விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- 10 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிகளில் 154 இலங்கை கைத்தொழிலாளர்கள் பங்குபற்றியுள்ளனர்.

- இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் பணியாற்றுவதற்காக 1338 மாணவர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.
- புதிய இரத்தினக்கல் அகழ்வாராய்ச்சியின் கீழ், மூன்று பிரதேசங்களில் உள்ள படிவுகள் அடையாளங்காணப்பட்டு வரைபடமாக்கப்பட்டுள்ளன

**சவால்கள்**

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள புதிய வரிகள் காரணமாக கைத்தொழிலாளர்கள் சோர்வடைதல் / ஊக்கமிழத்தல்.

- இலங்கை இரத்தினக்கற்களுக்கான ஒரு சர்வதேச வர்த்தக மையமாக இன்னும் மாறவில்லை.
- இரத்தினக்கல் வளங்களை நிலைபேறான முறையில் முழுமையாகப் பயன்படுத்த முடியாமை.
- வெளிநாட்டுச் செலாவணியானது முறையான வழிமுறைகளின் ஊடாக நாட்டிற்குள் உள்வருவதில்லை.
- இரத்தினக்கல் வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதற்கான தேசிய கொள்கை இல்லாமை.
- இரத்தினக்கற்களைப் பட்டை தீட்டுதல் மற்றும் மெருகூட்டுதல் ஆகிய வேலைகளுக்குத் தேவையான திறன்மிக்க தொழிலாளர்கள் இல்லாமை.
- பயிற்சி பெற்றவர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களுக்கு ஏற்றவாறு சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முறையான வழிமுறை கைத்தொழில் துறையில் இல்லாமை. இதன் காரணமாக, இத்துறைக்கு வரும் பயிற்சியாளர்கள் மத்தியில் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**எதிர்கால இலக்குகள்**

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் திருத்தப் பணிகளைப் பூர்த்தி செய்தல்.

- இரத்தினக்கல் தரத்திலான குவார்ட்ஸ் (Quartz) ஏற்றுமதி தொடர்பான ஒழுங்குவிதிகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையிலான பல்வேறு கட்டணங்கள் தொடர்பான வர்த்தமானியைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை நிறுவுவது தொடர்பான அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் இறுதி செய்தல்.
- இரத்தினக்கல், ஆபரணங்கள் மற்றும் வைரத் துறையிலான ஏற்றுமதி வருமானத்தை 500 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்தல்.
- இரத்தினக்கல் அகழ்வு உரிமங்கள் தொடர்பான பொது முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சிகளுக்கு இலங்கை கைத்தொழிலாளர்களைக் கவர்ந்து இழுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையிலான பாடநெறிகளுக்காக சுமார் 1500 மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்.

  - மலவத்து ஓயா மற்றும் மகா ஓயா ஆகிய பகுதிகளில் உள்ள இரத்தினக்கல் படிவுகள் குறித்து அகழ்வாராய்ச்சி முன்னெடுத்தல்.

  - இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் பணச் சலவை மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னின்று செயற்படுதல்.

## 2.8 முயற்சியான்மை அபிவிருத்திப் பிரிவு

**முன்னேற்றம் / சாதனைகள்**

- நிறுவனங்களை ஒன்றிணைத்தல் மற்றும் இலங்கையின் தொழில்துறை மாற்றங்கள் மற்றும் புத்தாக்க அதிகாரசபையை (ITIA-SL) நிறுவுதல் :

  ஒருங்கிணைந்த மற்றும் எதிர்காலத்தை நோக்கிய நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB), தேசிய முயற்சியான்மை அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு (SEDD) ஆகியவற்றை ஒன்றிணைத்து, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு 17.03.2025 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இது தொடர்பாக, இலங்கையின் தொழில்துறை மாற்றங்கள் மற்றும் புத்தாக்க அதிகாரசபையை (ITIA-SL) நிறுவுவதற்கான கருத்துப்பத்திரம் (Concept Paper) 29.12.2025 அன்று அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) ஆதரவுடன், இந்த ஒன்றிணைப்புச் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பங்குதாரர்களின் ஈடுபாட்டு நடவடிக்கைகளும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒன்றிணையவுள்ள மூன்று நிறுவனங்களின் அதிகாரிகள், முக்கிய அரச முகவர் நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் கல்வியியலாளர்களை உள்ளடக்கிய நான்கு கருப்பொருள் வேலைக்குழுக்கள் சட்டம், டிஜிட்டல் மாற்றம், மனித வளம் மற்றும் பங்குதாரர்களின் ஈடுபாடு, நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பணிகளை முன்னெடுத்து வருகின்றன. ITIA-SL சட்டமூலத்தை வரைவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) கொள்கையை உருவாக்குதல;

  சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் ஆஸ்திரேலிய தூதரகம் ஆகியவற்றின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் (SME) மேம்பாட்டிற்கான ஒரு சுமுகமான கட்டமைப்பை வழங்குவதற்காக தேசிய SME கொள்கையை உருவாக்கும் பணியை அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) உத்திக் கட்டமைப்பை உருவாக்குதல்

  சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) மேம்பாட்டுத் தலையீடுகளுக்கான மூலோபாய வழிகாட்டலை வழங்குவதற்காக பதினொரு தூண்களைக் (Eleven Pillars) கொண்ட ஒரு விரிவான SME மேம்பாட்டு உத்திக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பானது

முறையான சவால்களுக்குத் தீர்வுகாண்பதுடன், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் போட்டித்தன்மைமிக்கதாகவும், வளர்ச்சியை நோக்கியதாகவும் மற்றும் ஏற்றுமதித் தயார்நிலை கொண்டதாகவும் மாறுவதற்கு ஏதுவான, தேசிய அளவில் இணக்கமான ஒரு சுற்றுச்சூழல் அமைப்பை வளர்க்கிறது.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) ஆலோசனைக் குழுவை நிறுவுதல் :

  சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) மேம்பாடு குறித்த கொள்கை ஆலோசனை பொறிமுறையாகவும், பங்குதாரர்களின் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்காகவும் SME ஆலோசனைக் குழுவொன்று நிறுவப்பட்டது. இந்த ஆண்டில் ஐந்து கூட்டங்கள் நடைப்பெற்றிருந்தது.

- தேசிய ஒழுங்குமுறை சீர்திருத்தச் செயல் திட்டம் (National Regulatory Reform Action Plan - NRAP)

  ஒழுங்குமுறைச் சூழலை முறைப்படுத்தவும், வணிகத்திற்கான தடைகளை நீக்கவும் மற்றும் மிகவும் இணக்கமான மற்றும் சாதகமான ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் மூலம் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் (SME) போட்டித்தன்மையை வலுப்படுத்தவும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் (ADB) இணைந்து தேசிய ஒழுங்குமுறை சீர்திருத்தச் செயல் திட்டத்தை (NRAP) உருவாக்குவதை அமைச்சகம் தொடங்கியுள்ளது. விரிவான பங்குதாரர்களின் கலந்தாலோசனைகள் மூலம் ஒழுங்குமுறைச் சவால்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், தேசிய ஒழுங்குமுறை சீர்திருத்தச் செயல் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- வணிகப் பெயர் பதிவை எளிமைப்படுத்துதல்: வணிகப் பதிவை முறைப்படுத்தவும், நிர்வாகத் தடைகளை நீக்கவும் மற்றும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் (SME) வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கவும் கிரைசலிஸ் (Chrysalis) நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டுதலொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- தேசிய அடைகாப்பக மாதிரியொன்றை (National Incubator Model) அபிவிருத்தி செய்தல் :

  தேசிய நிறுவன சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்கும், புத்தாக்க அடிப்படையிலான தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கும் ஏற்றவகையில், ஆரம்பக்கட்ட மற்றும் ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு (start-ups) ஆதரவளிப்பதற்காக தேசிய அடைகாப்பக மாதிரியொன்றை (national incubator model) அபிவிருத்தி செய்யும் பணிகள் தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (NEDA) இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) ஆலோசனைச் சேவைகளை தொழில்முறைப்படுத்துதல்.

  இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்துடன் (SLIM) இணைந்து நடத்தப்பட்ட சான்றளிக்கப்பட்ட உறவுமுறை அதிகாரி (Certified Relationship Officer) திட்டத்தின் முதல் தொகுதியை 53 சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு (SEDD) அதிகாரிகள் வெற்றிகரமாக முடித்துள்ளதுடன், 70 தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) அதிகாரிகளுக்கான வர்த்தகநாம முகாமைத்துவத் திட்டம் (Brand Management Program) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

  இந்த முயற்சிகள், அபிவிருத்தி அதிகாரிகளை வணிக ஆலோசனையாளர்களாக மாற்றுவதற்கும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) ஆலோசனை மற்றும் ஆதரவு சேவைகளின் தரம் மற்றும் தாக்கத்தை வலுப்படுத்துவதற்கும் வடிவமைக்கப்பட்டுள்ளன

**சவால்கள்**

- ஒருங்கிணைந்த சேவை வழங்கல் மற்றும் தடையற்ற ஒருங்கிணைப்பைத் தடுக்கும் துண்டிக்கப்பட்ட நிறுவன மரபுவழி அமைப்புகள் மற்றும் நடைமுறை செயல்பாடுகள்.
- நிறுவன சீர்திருத்தங்கள் மற்றும் ஒன்றிணைப்புச் செயல்பாட்டின் போது மாற்றத்திற்கான எதிர்ப்பு மற்றும் பயனுள்ள மாற்ற முகாமைத்துவத்திற்கான தேவை.
- நிகழ்நேர நுண்ணறிவுகள், செயல்திறன் கண்காணிப்பு மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான கொள்கை வகுத்தல் ஆகியவற்றைச் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த தேசிய SME தகவல் கட்டமைப்பின்மை.
- நிதி ஒதுக்கீடுகள் மற்றும் திறமையான மனித வளங்களில் உள்ள வரம்புகள் உட்பட வளக் கட்டுப்பாடுகள்.

**எதிர்கால இலக்கு**

- ஜனவரி 2027க்குள் இலங்கையின் தொழில்துறை மாற்றங்கள் மற்றும் புத்தாக்க அதிகாரசபையை நிறுவுவதற்குத் தலைமை தாங்குதல் இதன் மூலம் நாட்டின் தொழில்துறை மாற்றம் மற்றும் முயற்சியாளர் மேம்பாட்டிற்கான ஒரு ஒருங்கிணைந்த தேசிய தளத்தை உருவாக்குதல்.
- ஒருங்கிணைந்த வணிகப் பெயர் பதிவு வழிகாட்டுதலைச் செயல்படுத்துவதை எளிதாக்குவதன் மூலமும், விரைவான, வெளிப்படையான மற்றும் தேசிய அளவில் தரப்படுத்தப்பட்ட பதிவு முறையை உருவாக்குவதற்காக eBR தளத்தை மேம்படுத்துவதன் மூலமும் வணிக நுழைவை மாற்றிமைத்தல் இதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் (MSME) முறைப்படுத்தலை விரைவுபடுத்துவதுடன் வணிகம் செய்வதை எளிதாக்குதலையும் மேம்படுத்துதல்..
- ஒழுங்குமுறைத் தடைகளை நீக்கி, போட்டித்தன்மைமிக்க மற்றும் வணிகத்திற்கு உகந்த சுற்றுச்சூழல் அமைப்பை வளர்ப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து தேசிய ஒழுங்குமுறை சீர்திருத்தச் செயல் திட்டத்தை (NRAP) முடிவு செய்து, அதன் செயலாக்கத்தை ஒருங்கிணைத்தல்.
- சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் (SME) வளர்ச்சி, பெறுமதிச் சங்கிலி ஒருங்கிணைப்பு மற்றும் ஏற்றுமதித் தயார்நிலை ஆகியவற்றை விரைவுபடுத்துவதற்காக, நிதி அணுகல், தொழில் அடைகாத்தல் (incubation) மற்றும் சந்தை இணைப்புகள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த ஆதரவை வழங்குவதன் மூலம், ஒருங்கிணைந்த SME வளர்ச்சிச் சேவைகளை வழங்குவதை எளிதாக்குதல்.
- இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) மற்றும் நிதி வல்லுநர்களுடன் இணைந்து, பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட படிப்புகள் மூலம் உறவுமுறை முகாமைத்துவத் திட்டம் மற்றும் வர்த்தகநாம முகாமைத்துவத் திட்டத்தினூடாக அதிகாரிகளை வணிக ஆலோசனையாளர்களாக மாற்றி, அவர்களின் ஆலோசனைத் திறனை தொழில்முறைப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்
- உள்நாட்டு உற்பத்திகள், வேலைவாய்ப்பு மற்றும் நிலையான தேசிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, புத்தாக்கம், ஒழுங்குமுறை செயற்திறன் மற்றும் சுற்றுச்சூழல் கூட்டாண்மை ஆகியவற்றின் மூலம் அதிக வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி சாத்தியக் கூறுகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதன் மூலம் உலகளாவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் (SMEs) போட்டித்தன்மையை எளிதாக்குதல்.

# 2.9 பொது தொழில்முயற்சிகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள்

## 2.9.1 இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB)

**முன்னேற்றம்/ வெற்றிகள்**

**பௌதீக ரீதியான முன்னேற்றம்**

- தொழில்துறை வளர்ச்சிக்கான சாதகமான சூழலை வலுப்படுத்துவதற்காக மொத்தம் 338 தலையீடுகள் (Interventions) மேற்கொள்ளப்பட்டன.
- வர்த்தகச் சந்தைகள், கண்காட்சிகள், கொள்வனவாளர்-விற்பனையாளர் சந்திப்புகள் மற்றும் முன்கூட்டிய விற்பனை ஒப்பந்தங்கள் உட்பட 1,629 சந்தை சார்ந்த வசதிப்படுத்தல் சேவைகள் வழங்கப்பட்டன.
- ஆற்றல் திறன் நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும், ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும், தயாரிப்பு மற்றும் முறைமைத் தரங்களுடனான இணக்கப்பாட்டை ஆதரிப்பதற்கும் 15,540 தொழில்நுட்பம் சார்ந்த தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- செலவு முகாமைத்துவம், நிதிப் பதிவுகளைப் பேணுதல், இருப்புக்கட்டுப்பாடு, மூலோபாயத் திட்டமிடல், உற்பத்தித்திறன் மேம்பாடு, தொழிலாளர் சட்டங்கள், வரிவிதிப்பு மற்றும் முகாமைத்துவ ஆலோசனை போன்ற துறைகளை உள்ளடக்கிய 4,287 முகாமைத்துவ ஆலோசனை ஈடுபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- கடன் மற்றும் மானியங்களைப் பெற்றுக்கொள்வதுடன், திட்டங்களுக்கான விரிவான ஆவணங்களைத் தயாரித்தல் (மதிப்பீடு, தொழில்நுட்பம், சாத்தியக்கூறு, சந்தைப்படுத்தல் பகுப்பாய்வுகள் மற்றும் வணிகத் திட்டங்கள்) உள்ளிட்ட 471 நிதி வசதிப்படுத்தல் முன்முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்பட்டது.
- தொழில்துறை நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான ஆதரவு வழங்கப்பட்டது, இதன் விளைவாக 34 ஏக்கர் நிலம் தொழில்பேட்டைகளாக (Industrial Estates) அபிவிருத்தி செய்யப்பட்டன.
- தொழில்துறை நடவடிக்கைகளுக்கு ஆதரவாக 582 விசேட பொறியியல் பணிகள் (Specialized Engineering Assignments) பூர்த்தி செய்யப்பட்டன.
- மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் தொழிற்சாலை மதிப்பீடுகள் (Appraisals and Valuations) தொடர்பான தொழில்முறை பட்டயப் படிப்பு (Professional Diploma) 30 பங்கேற்பாளர்களுக்காக வெற்றிகரமாக நடத்தப்பட்டது

**நிதிசார் முன்னேற்றம்**

- 2025 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி முறையே ரூபா 450 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியன் ஆகும். 2025 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, இவ்விரு ஒதுக்கீடுகளிலும் 100% செலவிடப்பட்டுள்ளது.
- மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக மொத்தமாக ரூபா 24.48 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், இத்தொகையில் 100% மூலதன வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாகச் செலவிடப்பட்டுள்ளது.

- மூலதனச் சொத்துக்களைப் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக ரூபா 38.16 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதிக்குள் இத்தொகையில் 100% செலவிடப்பட்டுள்ளது.
- பிரதான மற்றும் சிறு கைத்தொழில் பேட்டைகளைத் தரமுயர்த்துதல் மற்றும் நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் இத்தொகையில் 100% செலவிடப்பட்டுள்ளது.

**சவால்கள்**

- **உள்ளூர் தொழில்துறைகளின் மட்டுப்படுத்தப்பட்ட உலகளாவிய சந்தை ஒருங்கிணைப்பு**
  உள்ளூர் தொழில்துறைகள், குறிப்பாகச் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் (SMEs), சர்வதேசச் சந்தைகளை அணுகுவதில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு ரீதியான தடைகளைத் தொடர்ந்து எதிர்கொள்கின்றன. பலவீனமான ஏற்றுமதி இணைப்புகள், உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் (GVCs) மட்டுப்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரப் பிரதிநிதித்துவங்கள் மற்றும் வர்த்தக மேம்பாட்டு முகவர்களுடனான போதுமான மூலோபாய ஒருங்கிணைப்பு இல்லாமை போன்றவை இதற்குக் காரணங்களாகும். மேலும், தெளிவான ஏற்றுமதி இலக்குகள், பொறுப்புக்கூறல் கட்டமைப்புகள் மற்றும் முறையான கண்காணிப்பு வழிமுறைகள் இல்லாமை என்பன, சந்தை மேம்பாடு, நிலையான வர்த்தக வசதி மற்றும் உள்நாட்டு நிறுவனங்களைச் சர்வதேச அளவில் விரிவுபடுத்துதல் போன்றவற்றை மேலும் கட்டுப்படுத்துகின்றன.

- **தொழில்நுட்பக் கையாள்கை மற்றும் புத்தாக்கத் திறனில் உள்ள பற்றாக்குறை**
  உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் (SMEs) சர்வதேசத் தரங்களை எட்டுவதற்கும் உலகளாவிய ரீதியில் போட்டியிடுவதற்கும் தொழில்நுட்ப இடைவெளிகள் ஒரு முக்கியத் தடையாகக் காணப்படுகின்றன. நவீன இயந்திரங்கள், உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்க ஆதரவு வழிமுறைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் என்பன, முக்கிய தொழில்துறை துறைகளில் உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் பெறுமதி சேர்ப்பைக் கட்டுப்படுத்துகின்றன.

- **ஏற்றுமதிச் சந்தை விரிவாக்கத்திற்கான பலவீனமான நிறுவன ரீதியான ஆதரவு**
  சாதகமான தடையற்ற வர்த்தக உடன்படிக்கைகள் (FTAs) உட்பட, புதிய மற்றும் மூலோபாய ரீதியாக இணைக்கப்பட்ட பொருளாதாரப் பங்களிப்புகள் இல்லாமையானது, ஏற்றுமதிப் பன்முகத்தன்மைக்கான வாய்ப்புகளைக் குறைத்துள்ளது. அத்துடன், சிக்கலான நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை நடைமுறைகள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் (SME) ஏற்றுமதி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தளர்த்துகின்றன.

- **அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் போதாமை**
  கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 450 மில்லியனும், ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 50 மில்லியனும் ஒதுக்கப்பட்டிருந்தன. இருப்பினும், உண்மையான மீண்டெழும் செலவினம் ரூபா 677.103 மில்லியனாகவும், ஏனைய மீண்டெழும் செலவினம் ரூபா 117.927 மில்லியனாகவும் காணப்பட்டதுடன், இவை அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை விட கணிசமாக அதிகரித்துள்ளன. இதன் விளைவாக, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி, மேலதிக மீண்டெழும் செலவினங்களை ஈடுகட்டப் பயன்படுத்தப்பட்டது. இது அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி வளங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

- **மனிதவள இடைவெளி**

  வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப, தொழில்சார் மற்றும் கள மட்ட உத்தியோகத்தர்கள் காரணமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை தற்போது மனிதவள இடைவெளியை எதிர்நோக்குகின்றது. இக்குறைபாடானது, கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு (SMEs) சரியான நேரத்தில் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கும், கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப் பணிகளை மேற்கொள்வதற்குமான சபையின் திறனைக் கட்டுப்படுத்துகின்றது. இதன் விளைவாக, செயல்பாட்டுத் திறன் மற்றும் சேவை வழங்கல் ஆகியவை மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

- **கைத்தொழில் அபிவிருத்திக்கான பற்றாக்குறை நிதி வளங்கள்**

  தொழில்நுட்ப மேம்பாடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் நவீனமயமாக்கல் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) தொடர்ச்சியான நிதி நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், கைத்தொழில் ஆதரவுச் சேவைகளின் விரிவாக்கத்தைத் தடுப்பதுடன், வளர்ந்து வரும் தொழில்துறைத் தேவைகளுக்குப் பதிலளிப்பதற்கான சபையின் திறனையும் கட்டுப்படுத்துகின்றன.

- **கைத்தொழில் நிலக் கிடைப்பனவு, நிலக் கொள்வனவு மற்றும் உட்கட்டமைப்பிலுள்ள தடைகள்**

  காணி கையகப்படுத்தல் தொடர்பான கடுமையான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள், கைத்தொழில் வலயங்களை நிறுவுவதிலும் விரிவாக்குவதிலும் தாமதத்தை ஏற்படுத்துகின்றன. டிஜிட்டல் காணி வங்கி (Digital Land Bank) போன்ற ஒருங்கிணைந்த காணி அடையாளப்படுத்தும் பொறிமுறை இல்லாமையானது, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் புதிய முதலீடுகள் மற்றும் கைத்தொழில் வலய விரிவாக்கங்களை மேலும் கட்டுப்படுத்துகின்றது.

- **மனிதவள அபிவிருத்திக்கான முதலீடுகள் பற்றாக்குறை**

  மனிதவள மேம்பாட்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான திறமையான தொழில்நுட்ப, முகாமைத்துவ மற்றும் தொழில்முனைவோர் திறன்களின் கிடைப்பனவைப் பாதிக்கின்றது. இது உள்ளூர் தொழில்துறைகளுக்குள் உற்பத்தித்திறன் மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் வினைத்திறனான தொழில்நுட்பக் கையாள்கை போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.

**எதிர்கால இலக்குகள்**

- தொழிற்பேட்டைகளுக்கான நிலப்பரப்பை 2025- இல் 363 ஏக்கர் என்பதிலிருந்து 2030- க்குள் 1500 ஏக்கராக அதிகரித்தல்.
- சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் (SME) ஏற்றுமதி அளவை 2025- இல் 5% என்பதிலிருந்து 2030- க்குள் 10% ஆக அதிகரித்தல்.
- இலங்கையின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஏற்றுமதித் துறையின் பங்களிப்பை, 2024- இல் மொத்த ஏற்றுமதியில் 1.75% என்பதிலிருந்து 2030- க்குள் 5% ஆக அதிகரித்தல்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) உற்பத்தித் துறையின் பங்களிப்பை 16.4% -லிருந்து 2030- க்குள் 20% - ஆக அதிகரித்தல்.
- அரசின் மிகவும் திறன்மிக்க மற்றும் ஆக்கபூர்வமான தொழில் துறை சேவை வழங்கும் முகமையாகத் திகழ்வது.
- அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தொழில் துறை நகரியத் திட்டம்.
- 09 தொழில் காப்பகங்களை (Incubators) நிறுவுவதற்கான திட்டம்.
- நாடு முழுவதும் 25 விற்பனை நிலையங்களை நிறுவுதல்.

## 2.9.2 தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (NEDA)

**முன்னேற்றம் / வெற்றிகள்**

**1. ‘உபாதிதாரி வ்யவசாயக உதானய’ (பட்டதாரி முயற்சியாளர் எழுச்சி) திட்டம்**

பல்கலைக்கழக பட்டதாரிகளின் திறன்களை மேம்படுத்தி, அவர்களை வெற்றிகரமான முயற்சியாளர்களாக மாற்றுவதற்காக தேசிய தொழில் முயற்சி அதிகாரசபையினால் (NEDA) இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டல் அலகுகளுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இத்திட்டம், பட்டதாரி முயற்சியாளர்களை உருவாக்குவதற்கும் புதிய வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதற்கும் பங்களிப்பு செய்கிறது. 2025 ஆம் ஆண்டில் 400 பட்டதாரிகளுக்கு முயற்சியாளர் பயிற்சி வழங்கப்பட்டதுடன், தெரிவு செய்யப்பட்ட 30 பட்டதாரிகளுக்குத் தமது வணிகங்களை ஆரம்பிக்கவும் அபிவிருத்தி செய்யவும் நிதி மானியங்கள் வழங்கப்பட்டன. 2026 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தைத் தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்த நாம் எதிர்பார்க்கின்றோம். தனியார் துறை மற்றும் ஏனைய தரப்பினரின் ஆதரவைப் பெற்று, அதிகளவானோரை இத்திட்டத்தில் இணைப்பதே எமது முக்கிய நோக்கமாகும்.

**2. “மேட் இன் ஸ்ரீலங்கா’’ (இலங்கையில் தயாரிக்கப்பட்டது) வர்த்தகக் கண்காட்சிகள்.**

“உள்நாட்டு முயற்சியாளர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் வருடாந்தம் “மேட் இன் ஸ்ரீலங்கா“ (இலங்கையில் தயாரிக்கப்பட்டது) வர்த்தகக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. தரமான மற்றும் தரப்படுத்தப்பட்ட தயாரிப்புகளை உருவாக்கும் உள்நாட்டு முயற்சியாளர்களைத் தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதே இதன் நோக்கமாகும். இத்திட்டத்திற்குப் புதிய பெறுமதி சேர்க்கும் வகையில், 2024 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பகுதிகளை இலக்காகக் கொண்டு “மேட் இன் ஸ்ரீலங்கா“ வர்த்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது. இதன் கீழ், 2024 ஆம் ஆண்டில் “எல்ல“ நகரை மையமாகக் கொண்டு 120 விற்பனைக்கூடங்களுடன் “மேட் இன் ஸ்ரீலங்கா“ வர்த்தகக் கண்காட்சி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இதன் மூலம் உள்நாட்டு முயற்சியாளர்கள் வெளிநாட்டவர்களுடன் வர்த்தகத்தில் ஈடுபடவும், சுற்றுலாத்துறையில் பங்களிப்பு செய்யவும் மற்றும் வெளிநாட்டு வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கவும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அறுகம்பே (Arugam Bay) மற்றும் மிரிஸ்ஸ (Mirissa) வர்த்தக வலயங்களை மையமாகக் கொண்டு 2025 ஆம் ஆண்டில் “மேட் இன் ஸ்ரீலங்கா“ வர்த்தகக் கண்காட்சி 200 இற்கும் மேற்பட்ட விற்பனைக் கூடங்களுடன் நடாத்தப்பட்டது. அத்துடன், இவ்வருடத்தில் (2026) நாவிதன்வெளி, கம்பஹா, ரிதிமாலியத்த, கல்முனை (வடக்கு), அட்டாளைச்சேனை மற்றும் தொடாங்கொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 200 இற்கும் மேற்பட்ட விற்பனைக் கூடங்களுடன் பிராந்திய மட்ட “மேட் இன் ஸ்ரீலங்கா“ வர்த்தகக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

**3. பிராந்திய விருது வழங்கும் விழா**

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கிய தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கும் நோக்கில், தேசிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை (NEDA) தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்கிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள சிறந்த தொழில் முயற்சியாளர்களை அங்கீகரிப்பதும் பாராட்டுவதும் இந்த விருது வழங்கும் விழாவின் நோக்கமாகும். 2025 ஆம் ஆண்டில், மேல், ஊவா, வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் ஐந்து மாகாண தொழில் முயற்சியாளர் விருது விழாக்களுக்கு தேசிய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை ஏற்பாடு செய்திருந்தது. எனினும், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இவ்விருது விழாக்கள் மேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் மாத்திரமே நடத்தப்பட்டன. ஏனைய மாகாணங்களுக்கான விருது விழாக்கள் 2026 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

**4. “இலங்கையில் தயாரிக்கப்பட்டது” (Made in Sri Lanka) இலச்சினையை (Logo) மேம்படுத்தல்.**

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லாமை மற்றும் நுகர்வோர் மத்தியில் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான ஆர்வம் அதிகரித்து வருவதை கவனத்தில் கொள்ளும் விதமாக, தேசிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை ”இலங்கையில் தயாரிக்கப்பட்டது” (Made in Sri Lanka) என்ற இலச்சினையை அறிமுகப்படுத்தியது. தயாரிப்புகளின் உள்நாட்டுத் தன்மையை வெளிப்படுத்துவதன் மூலம், உள்நாட்டு உற்பத்திகளின் சந்தை இருப்பை மேம்படுத்துவதும் விற்பனையை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். 2025 ஆம் ஆண்டில், தேசிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை 50 தொழில்முயற்சியாளர்களுக்கும் 146 தயாரிப்புகளுக்கும் இந்த ”இலங்கையில் தயாரிக்கப்பட்டது” இலச்சினையை வழங்கியுள்ளது.

**5. கிராமப்புற தொழில் முயற்சியாளர்களுக்கான இணையவழி சந்தைப்படுத்தல் திட்டம் (Rural Entrepreneurs’ Online Marketing Program).**

SME Connect (smeconnect.lk) என்பது ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் டெலொய்ட் ஸ்ரீலங்கா (Deloitte Sri Lanka) ஆகியவற்றின் ஆலோசனை ஆதரவுடன் தேசிய தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபையினால் (NEDA) நடத்தப்படும் ஒரு டிஜிட்டல் தளமாகும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான ஒரு முயற்சியாகத் தொடங்கப்பட்ட இது, குறிப்பாகப் பெண்களால் வழிநடத்தப்படும் வணிகங்களை மையமாகக் கொண்டு நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (MSMEs) முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தளம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கிடைப்பதுடன், கையடக்கத் தொலைபேசி ஊடாக இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலும் அமைந்துள்ளது.

இந்தத் தளம் கற்றல், வழிகாட்டல் மற்றும் வலையமைப்பு ஆகிய மூன்று முதன்மை நோக்கங்களில் கவனம் செலுத்துகிறது. இதன் கற்றல் நடவடிக்கைகள் சந்தைப்படுத்தல், நிதி, மனித வளம் மற்றும் செயல்பாடுகள் போன்ற தலைப்புகளை உள்ளடக்கிய பயிற்சி தொகுதிகள், கட்டுரைகள் மற்றும் காணொளிகளை வழங்குகின்றன. இது உங்களை தன்னார்வ நிபுணர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த தொழில்முயற்சியாளர்களுடன் இணைக்க அனுமதிக்கிறது. அத்துடன் இதன் வலையமைப்பு அம்சங்கள், கலந்துரையாடல் மன்றங்கள் (Forums), அரட்டைகள் (Chats), வலைப்பதிவுகள் (Blogs) மற்றும் நிகழ்வுகள் ஆகியவை தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் ஏனையோருடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கின்றன.

## 6. B500 வர்த்தகநாம அபிவிருத்தித் திட்டம்

கிராமப்புற முயற்சியாளர்களை பரந்தளவிலான உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுடன் இணைப்பதன் மூலம் அவர்களை வலுப்படுத்துவதற்காக NEDA நிறுவனம் இணையவழி சந்தைப்படுத்தல் (Online Marketing) முயற்சிகளை ஊக்குவிக்கின்றது. டிஜிட்டல் அறிவை மேம்படுத்துதல், மின்-வணிகத் (E-commerce) தளங்களுக்கான அணுகலை அதிகரித்தல் மற்றும் கிராமப்புறத் தயாரிப்புகளின் நற்பெயரை அல்லது சந்தைப் பார்வையை அதிகரித்தல் ஆகியன இதன் முக்கிய நோக்கங்களாகும். முயற்சியாளர்கள் தமது தயாரிப்புகளை இணையவழியில் விற்பனை செய்வதற்கு வசதிப்படுத்துவதன் ஊடாக, NEDA நிறுவனம் வருமானத்தை ஈட்டிக்கொடுக்கின்றது.

**சவால்கள்**

- **முயற்சியாளர்களிடையே காணப்படும் பலவீனமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள்**
  பல முயற்சியாளர்கள் இடர்களைக் கண்டறிதல், அவற்றைக் குறைத்தல் மற்றும் வணிகத் தொடர்ச்சித் திட்டமிடல் ஆகியவற்றில் போதிய விழிப்புணர்வையும் திறன்களையும் கொண்டிருக்கவில்லை. இது அவர்களது வணிகப் பாதிப்புத் தன்மையை (Business Vulnerability) அதிகரிக்கின்றது.

- **முயற்சியாளர்களினால் கணக்குப் புத்தகங்கள் முறையாகப் பேணப்படாமை**
  குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முயற்சியாளர்கள் முறையான நிதிப் பதிவேடுகளைப் பேணுவதில்லை. இது நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்வது, வரி இணக்கம் மற்றும் முறையான தீர்மானங்களை எடுத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துகின்றது.

- **டிஜிட்டல் இடைவெளி மற்றும் குறைந்த அளவிலான டிஜிட்டல் பயன்பாடு**
  வரையறுக்கப்பட்ட டிஜிட்டல் அறிவு, போதிய உட்கட்டமைப்பு வசதியின்மை மற்றும் குறைந்த விழிப்புணர்வு ஆகியவற்றின் காரணமாக சுமார் 25% சிறு, குறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் (MSMEs) மாத்திரமே இணையவழி வர்த்தகத் (E-commerce) தளங்களைச் செயலில் பயன்படுத்துகின்றன

- **நிதிசார் அறிவு இல்லாமை / நிதிசார் எழுத்தறிவு குறைபாடு**
  முயற்சியாளர்கள் வரிவிதிப்பு, உரிமம் பெறுதல், வணிகப் பதிவு மற்றும் ஒழுங்குமுறை இணக்கம் ஆகியவற்றில் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. இது அவர்களின் செயல்பாட்டு ரீதியான மற்றும் சட்ட ரீதியான சவால்களுக்கு வழிவகுக்கின்றது.

- **சந்தை வரிகள் / ஏற்றுமதி (வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி அறிவு மற்றும் சந்தை அணுகல்)**
  சிறு, குறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகள் (MSMEs), ஏற்றுமதி நடைமுறைகள், தரநிலைகள் மற்றும் சர்வதேச சந்தைகள் குறித்த போதிய அறிவைப் பெற்றிருக்கவில்லை. இதன் விளைவாக, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வர்த்தகத்தில் அவற்றின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகிறது. வரையறுக்கப்பட்ட ஏற்றுமதி அறிவும், ஏற்றுமதித் துறையுடன் போதிய ஒருங்கிணைப்பு இன்மையும் இதில் பாரிய சவால்களாக உள்ளன.

- **பிராந்திய சமமின்மை மற்றும் சீரற்ற அபிவிருத்தி**
  நகர்ப்புறங்களுக்கு வெளியே குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு மற்றும் சேவை இடைவெளிகள் காணப்படுகின்றன. இது கிராமப்புறங்களில் உள்ள நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் பொருளாதார வாய்ப்புகளைக் கட்டுப்படுத்துகின்றது

**எதிர்காலத் திட்டம்**

- **அறிவை வணிகமாக மாற்றுதல் (Brain into Business):** பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறை ஆய்வுகளைத் தொழில்துறையுடன் இணைப்பதன் மூலம் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துவதை வலுப்படுத்துதல். இதன் ஊடாக அறிவு, திறன்கள் மற்றும் எண்ணங்களை நடைமுறைச் சாத்தியமான வணிகங்களாக மாற்றுதல்.

- **அறிவை வணிகமாக மாற்றுதல் (Brain into business):** தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA) பாடநெறிகளை தேசிய தொழில்முனைவோர் மற்றும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களுடன் (SME) இணைத்தல்.

- தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட "மேட் இன் ஸ்ரீலங்கா" (Made in Sri Lanka) இலச்சினையை உருவாக்கி ஊக்குவிப்பதன் மூலம் உள்நாட்டுத் தயாரிப்புகளின் நற்பெயரை மேம்படுத்துதல்.

- இலங்கையின் தயாரிப்புக்களைக் காட்சிப்படுத்துவதற்கும், தொழில் முனைவோரை கொள்வனவாளர்களுடன் இணைப்பதற்கும் மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதற்குமாக வருடாந்த தேசிய மற்றும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் (SME) மற்றும் ஆரம்பநிலை வணிகங்களுக்கு (Startups) புத்தாக்கம், நிதி வசதி, திறன் மேம்பாடு மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றை வழங்கும் ஒரு ஒருங்கிணைந்த சூழலமைப்பைக் கட்டியெழுப்புதல்.

- சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களின் (SME) வர்த்தக முத்திரை (Branding), இலச்சினை மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளுக்கு இடையே தொடர்புகளை ஏற்படுத்துதல்.

- கிராமப்புற மற்றும் நகர்ப்புற சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களுக்கு (SME) அடைக்காப்பக (Incubation) வசதிகளை வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் தேசிய அடைக்காப்பக வசதிப்படுத்தல் முகவர் நிலையத்தை (NIFA) நிறுவுதல்.

## 2.9.3 இலங்கை துணி உற்பத்தி மற்றும் ஆடை நிறுவனம் (SLITA)

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- மொத்த முன்னேற்றம் 83-85% எட்டப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- பயிற்சி வழங்கல், பரிசோதனை சேவைகள் மற்றும் தொழில் துறை ஈடுபாடு ஆகியவற்றில் வலுவான செயல்திறன்.
- டிஜிட்டல் மயமாக்கல், ஆராய்ச்சி வணிகமயமாக்கல் மற்றும் நிலைபேண்தகு முறைமை ஆகியவற்றில் மிதமான முன்னேற்றம்.

**கைத்தொழில் நவீனமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு**

**கலைத்திட்டம் மற்றும் தொழில்துறை 4.0 சீரமைப்பு**

- புதிய பட்டப்படிப்புத் திட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை சார்ந்த கலைத்திட்ட மறுசீரமைப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- சேவை மற்றும் தயாரிப்பு மதிப்பீடுகள் இலக்குகளை விட அதிகரித்துள்ளன.

**தொழில்நுட்ப மேம்பாட்டு முயற்சிகள்**

- தேவையான திட்ட முன்மொழிவுகள் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- தொழில்நுட்பத் திட்டங்களின் பகுதி ரீதியான நடைமுறைப்படுத்தல் நடைபெற்று வருகின்றது.

**தொழில்துறை ஆதரவு தளங்கள்**

- கார்பன் தடம் பற்றிய தரவுத்தள உருவாக்கம் 50% நிறைவடைந்துள்ளது (நடைபெற்று வருகின்றது)
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சான்றிதழ் பிரிவு நிறுவப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது.

**பரிசோதனை மற்றும் சேவைப் பன்முகத்தன்மை**

- விஞ்ஞான அமைச்சின் தேசிய தர உள்கட்டமைப்பு திட்டத்தின் ஊடாக, பரிசோதனை திறன் விரிவாக்கப்பட்டு வருகின்றது.
- மேம்பட்ட பரிசோதனை எல்லைகளின் ஊடாக, மேம்படுத்தப்பட்ட தொழில்துறை ஆதரவு.

**ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் வணிகமயமாக்கல்**

- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க மையம் நிறைவடையும் நிலையில் உள்ளது (75%).
- தொழில்நுட்ப பரிமாற்ற முயற்சிகளில் ஆரம்பக்கட்ட முன்னேற்றம்.
- பல்கலைக்கழக - தொழில்துறை ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டிய அவசியம்

**பணிக்கு மனிதவள மேம்பாடு மற்றும் பயிற்சி**

**பயிற்சிப் பாடநெறிகள்**

- வடிவமைக்கப்பட்ட விசேட பயிற்சிப் பாடநெறிகள் இலக்குகளை விட கணிசமாக அதிகரித்துள்ளன.
- திட்டமிடப்பட்ட பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன, ஆனால் இறுதி இலக்கை விட குறைவாக உள்ளன.
- மெய்நிகர் கற்றல் வழங்கலில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம்.

**மெய்நிகர் கற்றல் வழங்கலில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம்.**

- ஊழியர் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- சர்வதேச பரிமாற்ற ஒத்துழைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (பகுதி ரீதியான முன்னேற்றம்)

**முன்னர் கற்றலை அங்கீகரித்தல் (RPL)**

- 1,000 இலக்கில் 704 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.
- பணியாளர் படையை முறைப்படுத்துவதற்கு இத்திட்டம் பங்களிப்பு செய்கிறது.

**கைத்தொழில இணைப்புகள் மற்றும் துறைசார் ஒருங்கிணைப்பு**

- பரிசோதனை மற்றும் மதிப்பீட்டுச் சேவைகள் வருடாந்த இலக்குகளை விட அதிகரித்துள்ளன.
- தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் இலக்கைத் தாண்டி விரிவுபடுத்தப்பட்டுள்ளன.
- புடைவை மற்றும் ஆடை கற்கைகள் பீடம் வெற்றிகரமாக நிறுவப்பட்டுள்ளது.
- கலாச்சார மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் மிதமான முன்னேற்றத்துடன் நடத்தப்பட்டுள்ளன

**சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் (SME) ஆதரவு மற்றும் சான்றிதழ் சேவைகள்**

- சான்றிதழ் சேவைகள் விரிவாக்கம் நடைபெற்று வருகின்றது (25%)
- சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் (SME) இணக்கப்பாட்டு ஆதரவை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பு.

**நிறுவன வினைத்திறன் மற்றும் டிஜிட்டல் உருமாற்றம்**

- ஊழியர் செயல்திறன் மதிப்பீட்டு முறைமை பகுதி அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- சந்தை தேவைப் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
- வாடிக்கையாளர் விசாரணை கண்காணிப்பு முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர் உறவு மேலாண்மை (CRM) முறைமைச் செயல்படுத்தல் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.
- ஆட்சேர்ப்பு இலக்குகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**நிதி நிலைப்புத்தன்மை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு**

- செயல்பாட்டுச் செலவு குறைப்பு 10% எட்டப்பட்டுள்ளது.
- கொள்முதல் வினைத்திறன் மேம்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
- சுற்றுச் சுவர் புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- ஆய்வுக்கூடம் மற்றும் மாணவர் வசதிகள் விரிவாக்கம் நடைபெற்று வருகின்றது.
- நிலைபேண்தகு எரிசக்தி முயற்சி 50% முன்னேற்றமடைந்துள்ளது.

**பாரிய சாதனைகள்**

- புதிய பட்டப்படிப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- புடைவை மற்றும் ஆடை கற்கைகள் பீடம் நிறுவப்பட்டுள்ளது.
- பரிசோதனை சேவைகள் தொழில்துறை தேவையை விட அதிகரித்துள்ளன.
- தொழில்துறை சார்ந்த விசேட பயிற்சிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.
- சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான சான்றிதழ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.
- கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு மேம்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- செயல்பாட்டுச் செலவு சேமிப்பு எட்டப்பட்டுள்ளது

**கவனம் செலுத்த வேண்டிய துறைகள்**

- கைத்தொழில் 4.0 இற்கு ஏற்ப கலைத்திட்டத்தை முழுமையாக மாற்றுதல்.
- டிஜிட்டல் முறைமைகளை செயல்படுத்துவதை விரைவுபடுத்துதல்.
- ஆராய்ச்சி வணிகமயமாக்கல் மற்றும் கண்டுபிடிப்பு வெளியீடுகளை வலுப்படுத்துதல்..
- மெய்நிகர் கற்றல் மற்றும் சர்வதேச கூட்டாண்மைகளை விரிவுபடுத்துதல்.
- RPL சான்றிதழ் நிறைவு செய்தலை அதிகரித்தல்.
- கார்பன் தடம் பற்றிய தரவுத்தளத்தை இறுதி செய்தல்.

**சவால்கள்**

- பயிற்சி மற்றும் கற்கைகளில் காணப்படும் இடைவெளி - கைத்தொழில தேவைகளுக்கு ஏற்ப பயிற்சித் திட்டங்கள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டும்.
- உலகளாவிய போட்டி - வங்காளதேசம் மற்றும் இந்தியா போன்ற துணி மற்றும் ஆடைத் துறையில் குறைந்த விலையில் உற்பத்தி செய்யும் பிற நாடுகளிடமிருந்து அதிகரித்து வரும் போட்டி.
- அமெரிக்கா போன்ற சில நாடுகளால் ஆடைப் உற்பத்திகளுக்கு அதிக வரி விகிதங்கள் விதிக்கப்பட்டுள்ளன.
- பள்ளி சீருடை சோதனைத் திட்டம் இழப்பு.
- துறையில் தகுதிவாய்ந்த சிறப்பு ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் சிரமம்.

**எதிர்கால இலக்கு**

- தொழில்நுட்பத்தில் இளங்கலை (B-Tech) மற்றும் /பேஷன் டிசைனில் இளங்கலை கற்கைகள் (டீளஉ னை குயளாழைெ னுநளபைெ) என மூன்று பட்டப்படிப்புகளைத் ஆரம்பித்தல்.
- NVQ தரநிலைகளுக்கு ஏற்ப டிப்ளோமாக்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமாக்களைத் தயாரித்தல்.
- நூலகம், கேட்போர்கூடம் மற்றும் பேஷன டிசைன் ஸ்டுடியோவிற்கான புதிய கட்டிட வளாகத்தை மேம்படுத்துதல்.
- பயிற்சி, ஆலோசனை, சோதனை மற்றும் தொழில்நுட்ப சேவைகள் ஆகிய துறைகளில் போட்டிமிக்க சேவைகளை வழங்க சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிறுவன இணைப்புகள் மற்றும் ஒருங்கிணைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல்.
- பரிசோதனைகளை ஏற்பாடு செய்தல், கல்வி மாநாடுகளை நடத்துதல் போன்ற ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்.
- முன்மொழியப்பட்ட ஆய்வக வசதிகளை விரிவுபடுத்துதல்.
- குழந்தைகள் ஆடைகளுக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சான்றிதழை வழங்குதல்.
- தயாரிப்பு மற்றும் செயல்முறை சான்றிதழை வழங்குதல்.
- ஒரு ஆராய்ச்சி அலுவலகத்தை நிறுவுதல்.
- ஒரு கார்பன் தடம் தரவுத்தளத்தை நிறுவுதல்.
- ஒரு நிலையான எரிசக்தி தீர்வை செயல்படுத்துதல்.
- ஒரு இயற்பியல் வகுப்பறையை நிறுவுதல்.
- ஒரு வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவ அமைப்பு (CRM) மற்றும் ஒரு வாடிக்கையாளர் விசாரணை கண்காணிப்பு அமைப்பை நிறுவுதல்.
- சுயநிதி நிறுவனமாக மாற்றம் பெறுதல்.
- இரண்டு பரீட்சை மண்டபங்களை நிறுவுதல்.
- மெய்நிகர் (ஆன்லைன்) பாடநெறிகளை ஆரம்பித்தல்.
- கற்றல் மேலாண்மை அமைப்பில் (LMS) பாடநெறிகளை ஒருங்கிணைத்தல்.

## 2.9.4. தேசிய கைப்பணிச் சபை (NCC)

**முன்னேற்றம் / வெற்றிகள்**

- பதிவு செய்யப்பட்ட புதிய கைவினைஞர்களின் எண்ணிக்கை - 1009
- கைவினைஞர்களுக்கு வழங்கப்பட்ட கைவினைஞர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை - 861
- நிறுவப்பட்ட பிரதேச கைவினைஞர் சங்கங்களின் எண்ணிக்கை - 08
- நிறுவப்பட்ட மாவட்ட கைவினைஞர் சங்கங்களின் எண்ணிக்கை - 25
- நிறுவப்பட்ட மாகாண கைவினைஞர் சங்கங்களின் எண்ணிக்கை - 09
- கைவினைப் பயிற்சி நிலையங்கள் ஊடாக முழு நேரப் பயிற்சி பெற்ற பயிலுநர்களின் எண்ணிக்கை - 569
- குருசில்பி பயிற்சித் திட்டத்தின் ஊடாகப் பயிற்சி வசதிகளைப் பெற்றுக் கொண்ட பயிலுநர்களின் எண்ணிக்கை - 262
- விசேட பயிற்சித் திட்டங்களின் ஊடாகப் பயிற்சி வசதிகளைப் பெற்றுக் கொண்ட பயிலுநர்களின் எண்ணிக்கை - 448
- விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை - 20
- “சில்ப அபிமானி“ மாகாணக் கைவினைப் போட்டி – வெற்றி பெற்ற கைவினைப் பொருட்களின் எண்ணிக்கை - 2540
- ‘‘சில்ப அபிமானி“ தேசியக் கைவினைப் போட்டி – வெற்றி பெற்ற கைவினைப் பொருட்களின் எண்ணிக்கை - 540
- ஏற்றுமதி மட்டத்திற்கு அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை - 24
- சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு வசதிகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை - 129
- அபிவிருத்தி செய்யப்பட்ட கைவினைப் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை - 08
- மனிதவள அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை - 18
- நடைமுறைப்படுத்தப்பட்ட மாகாண / மாவட்ட மட்ட சந்தை மேம்படுத்தல் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு சந்தை மேம்படுத்தல் திட்டங்களின் எண்ணிக்கை - உள்நாட்டு 19, வெளிநாட்டு 01 - மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை - 517
- நடாத்தப்பட்ட கைவினைப் பரிமாற்றத் திட்டங்களின் எண்ணிக்கை - 01
- அபிவிருத்தி செய்யப்பட்ட “லக்சில்ப“ விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை - 02 ( கண்டி - பல்லேகலை, காலி - சிப்னாரா )
- மூலப்பொருள் வசதிகள் வழங்கப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை - 115
- சலுகை அடிப்படையில் கடன் வசதிகள் வழங்கப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை - 127
- ஏனைய நிதி சாராத திட்டங்களின் கீழ் வசதிகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை - 305

**சவால்கள்**

- கைவினைப் பொருட்கள் தொடர்பான மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அதிக விலை.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த கைவினைஞர்களின் விருப்பமில்லாத தன்மை மற்றும் புதிய தொழில்நுட்பத்தை குறைந்தபட்சமாகப் பயன்படுத்துதல்.
- தேசிய மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு ஏற்ற வடிவமைப்புகளை வழங்காமை.
- கைவினைத் துறையில் நுழைவதில் நவீன தலைமுறையினர் பின்வாங்குதல்.
- கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான முறையான திட்டம் இல்லாமை, நிதி வசதிகளைப் பெறுவதில் உள்ள சிரமங்கள்.
- வெளிநாடுகளில் ஒப்பீட்டளவில் கைவினைப் பொருட்களின் குறைந்த விலை.
- கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வெளிநாட்டு சந்தைகளை ஒருங்கிணைப்பதிலுள்ள **பிரச்சனைகள்.**

**எதிர்கால திட்டங்கள்**

- 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைவினைத் துறையின் பங்களிப்பை 50% அதிகரித்தல்
- 2030 ஆம் ஆண்டுக்குள் கைவினைத் துறையில் 4,000 சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்
- 2030 ஆம் ஆண்டுக்குள் கைவினைத் துறையில் 400 **இனம்** மற்றும் பெண் தொழில்முனைவோரை உருவாக்குதல்
- 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதியின் பங்கை 50% அதிகரித்தல்

## 2.9.5 தேசிய வடிவமைப்பு மையம் (NDC)

**முன்னேற்றம்/ வெற்றி**

**புத்தாக்கம், உற்பத்தி மற்றும் கொள்ளளவு அபிவிருத்தி :**

- கைவினைத் துறைக்காக மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை 431 ஆகும். அவற்றில் 126 வடிவமைப்புகள் கைவினைத் துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- பாதுகாத்தல், புத்தாக்கம் மற்றும் கண்காட்சிகளுக்காக விசேட பாரம்பரியக் கைவினைஞர்களை இணைத்துக்கொள்வதற்குத் தேவையான திறன்களை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, பஹல ஹபுவித மற்றும் மவுசாகொல்ல லாக்ஷா (Lacquer) கிராமங்களைச் சேர்ந்த 32 கைவினைஞர்களுக்கு மூலப்பொருள் வசதிகள் வழங்கப்பட்டன.
- 13 கைவினைஞர்களுக்கு 60 எண்ணக்கருக்கள் (Concepts), வடிவமைப்புகள் மற்றும் புத்தாக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 555 பேருக்கு நிறுவனத்திற்குள் பொது வசதிகள் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

- லாக்ஷா (Lacquer) கைத்தொழில் மற்றும் முகமூடித் தயாரிப்பு (Mask) தொடர்பான 02 சந்தை ஆய்வுத் திட்டங்கள் (Market Research Programs) நடத்தப்பட்டுள்ளன.

- 333 பயனாளிகளுக்காக பலப்பிட்டியவில் தேங்காய் நார் சார்ந்த இரு கட்ட வேலைத்திட்டம், கண்டியில் தோல் சார்ந்த வேலைத்திட்டம், யாழ்ப்பாணத்தில் பனை ஓலை மற்றும் ஆபரணங்கள் சார்ந்த இரு வேலைத் திட்டங்கள், அம்பாறையில் ஆடை மற்றும் கேகாலையில் மூங்கில் சார்ந்த வேலைத்திட்டங்கள், அனுராதபுரத்தில் பத்திக் (Batik) வேலைத்திட்டம், மொனராகலையில் பிரம்பு மற்றும் களுத்துறை - ஹொரணையில் தேங்காய் சிரட்டை மற்றும் மரம் சார்ந்த 09 பயிற்சித் திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளுக்கமைய 04 விசேட திட்டங்கள் என மொத்தம் நடத்தப்பட்டுள்ளன.

- புதிய எண்ணக்கருக்களை உருவாக்குவதற்காக கைவினை வடிவமைப்புகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் அனுபவத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் – “We are the Design” / “ஹெடவெட (Haeda Waeda) திட்டம்” எனும் பெயரில் பலபிட்டிய, கண்டி மற்றும் கெகிராவ ஆகிய பகுதிகளில் 04 வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் ஊடாக 447 உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உள்நாட்டு கலைகள் மற்றும் கைவினை அறிவு வழங்கப்பட்டது.

- நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறையில் குறுகிய காலப் பாடநெறிகள் ஊடாக 32 பயனாளிகளுக்கு நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன், 32 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறையினுள் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

- கைவினைத் துறையில் ஈடுபட்டுள்ள 52 பேருக்கு சந்தைப்படுத்தல் (Marketing) தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று நடத்தப்பட்டது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி :**

- பத்திக் (Batik) கைத்தொழிலுக்கான சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இரண்டு உற்பத்தியாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன.

- பனை ஓலை கைவினைப் பொருட்களுக்குப் பயன்படுத்தக்கூடிய பூஞ்சை எதிர்ப்புத் திரவம் (Antifungal Liquid) குறித்து 47 கைவினைஞர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டதுடன், பனை ஓலைகளைக் கிழிப்பதற்கான இயந்திரத்தின; (Palmyra Leaf Splitting Machine) ஆராய்ச்சி முன்மாதிரி (Prototype) கைவினைஞர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு, அதனை மேம்படுத்துவதற்கான களத் தேவைகள் கண்டறியப்பட்டன.

- ‘’உயிரியல் பரிகார முறையைப் (Bioremediation) பயன்படுத்தி பத்திக் (Batik) கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிதல்“ எனும் தலைப்பின் கீழ் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- மூங்கில் தண்ணீர் போத்தல் செயற்திட்டத்தின் ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில், இந்த வடிவமைப்புத் தேவையினைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான ஒரு மாற்று முறையாக, தேசிய வடிவமைப்பு மத்திய நிலையத்தின் (NDC) பயிற்சிப் பட்டறையைப் பயன்படுத்தி, கண்ணாடிப் போத்தல்களுக்கான 09 மூங்கில் வெளிப்பக்க உறைகளின் (Covers) மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (NWS&DB) வண்டல் மண்ணை (Sludge Clay) மஹயால களிமண் பயிற்சி நிலையத்திற்கு வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதுடன், அது கைவினைஞர்களின் பாவனைக்காகத் தயார் செய்து கொடுக்கப்பட்டது. அங்கு 15 கைவினைஞர்களுக்குக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடமிருந்து (IDB) பெற்றுக்கொள்ளப்பட்ட களிமண் விளக்கு தயாரிக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- அம்பாறை பிரதேசத்தில் உள்ள 02 நீர் சுத்திகரிப்பு அலகுகளில் இருந்து அகற்றப்படும் வண்டல் மண்ணை (Sludge Clay) அலங்காரக் கைவினைப் பொருட்களுக்காகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன் போது, குறித்த மூலப்பொருட்கள் உஹனை களிமண் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, 13 கைவினைஞர்களின் பங்களிப்புடன் வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி :**

தாவர எச்சங்களைப் (Herbal Residues) பயன்படுத்தி இயற்கைச் சாயங்களை (Natural Pigments) உற்பத்தி செய்யும் செயல்முறையை இனங்காணல் மற்றும் வணிகமயமாக்கும் செயற்திட்டம்.

- அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட தாவர எச்சங்களிலிருந்து (Herbal Residues) இயற்கைச் சாயங்களைத் தயாரிப்பது தொடர்பான ஆராய்ச்சி முடிவுகளின் அடிப்படையில், கிராம்பு காம்பு எச்சங்களிலிருந்து (Clove Bud/Stem Residue) சாயங்களை உற்பத்தி செய்வதற்குரிய காப்புரிமைக்காக (Patent), கைத்தொழில் அமைச்சு மற்றும் தேசிய வடிவமைப்பு மத்திய நிலையத்தின் (NDC) பெயர்களை உள்ளடக்கி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

- இயற்கைச் சாயங்களைப் (Natural Pigments) பயன்படுத்தி 12 பத்திக் (Batik) துணி மாதிரிகள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**கைவினைத் துறையை ஊக்குவித்தல் :**

- கைவினைத் துறையை ஊக்குவிப்பதற்காக சிங்கள, இந்து சித்திரைப் புத்தாண்டுக்கான விசேட உற்பத்தி வரிசையை (Product Line) அறிமுகப்படுத்தல், லாக்கா (Lacquer) கைத்தொழிலை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் தேவையான காணொளி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் 06 வெவ்வேறு கைவினைத் துறைகள் சார்ந்த மாதிரிப் பலகைகளை (Sample Boards) வடிவமைத்தல்.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்டு 04 புத்தாக்க ஊக்குவிப்பு வேலைத் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், SLITA Runway-2025 உடன் இணைந்து உள்நாட்டு கைவினைத் தயாரிப்புகளை உள்ளடக்கிய ஆடை அலங்கார அணிவகுப்பு (Fashion Show) ஒன்றினை நடத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 43 புதிய வடிவமைப்புகள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், 23 கைவினைஞர்கள் சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

- சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வடிவமைப்புகளின் எண்ணிக்கை 208 ஆகும். சிங்கள மற்றும் சித்திரைப் புத்தாண்டுக்காக விசேட உற்பத்தி வரிசையை (Product Line) அறிமுகப்படுத்தல், லாக்கா (Lacquer) கைத்தொழிலை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் தேவையான காணொளி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் 06 வெவ்வேறு கைவினைத் துறைகள் சார்ந்த மாதிரிப் பலகைகளை (Sample Boards) வடிவமைத்தல்.

- சுற்றுலா ஈர்ப்பை அதிகரிப்பதற்காக நத்தரம்பொத்த (Nattarampotha) கிளை அலுவலக வளாகத்தில் திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், கனடியப் பல்கலைக்கழகமொன்றின் மாணவர்கள் மற்றும் உள்நாட்டு சமூக ஆய்வுகளில் ஈடுபடும் மாணவர்கள் என 30 பேருக்கு நத்தரம்பொத்த பயிற்சிப் பட்டறையைப் பார்வையிடவும், நடைமுறை ரீதியான கைவினை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- பத்திக் (Batik), அலங்கார ஆபரணங்கள், மூங்கில் மற்றும் பிரம்பு, பித்தளை மற்றும் தோல் சார்ந்த 05 கைவினைத் துறைகளைச் சேர்ந்த 44 கைவினைஞர்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- லங்கார“ (Lankara) எனும் பெயரிலான வடிவமைப்புப் பொருட்களின் கண்காட்சியானது, லாக்கா (Lacquer) கலைப்படைப்புகளை மையமாகக் கொண்டு கண்டி சிட்டி சென்டரில் (Kandy City Centre) நவம்பர் 21 முதல் 03 நாட்களுக்கு நடைபெற்றது. இதன்போது 73 லாக்கா வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், லாக்கா கைத்தொழில் குறித்துத் தயாரிக்கப்பட்ட காணொளி ஆவணப்படம் பொதுமக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தப்பட்டது. அத்துடன், 50 கைவினைஞர்களுக்குத் தமது தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

**வடிவமைப்புத் துறைக்கான தரப்படுத்தப்பட்ட பாடநெறிகளை நடத்துதல் :**

- தேசிய வடிவமைப்பு டிப்ளோமா (National Diploma in Design) பாடநெறிக்காக 74 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

- கடந்த வருடத்தில் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த 79 டிப்ளோமாதாரிகளுக்கான சான்றிதழ் வழங்கும் விழா 2025.11.10 அன்று BMICH இல் நடைபெற்றது.

**வடிவமைப்பு ஆலோசனைக் சேவைகள் :**

- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கமைய, “ஸ்ரீலங்கா மித்ர விபூஷண“ (Sri Lanka Mitra Vibhushana) விருதை வடிவமைத்தல் உட்பட 09 வடிவமைப்பு ஆலோசனைக் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**இலங்கையின் பாரம்பரிய வடிவமைப்பு மரபுகளைப் பேணிப் பாதுகாத்தல் :**

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 07 இடங்களுக்குக் கள விஜயங்கள் (Field Visits) மேற்கொள்ளப்பட்டு, அங்கிருந்து 1475 புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அவற்றிலிருந்து முறையான தெரிவுச் செயல்முறையின் ஊடாக இவ்வருடத்திற்காக 25 வடிவமைப்புகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**சவால்கள்**

- ஊழியர் பற்றாக்குறை மற்றும் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சந்தர்ப்பம் இல்லாமை.

**எதிர்கால இலக்குகள்**

- கைவினைத் துறைக்காக 165 வடிவமைப்புத் திட்டங்களை வரைதல் மற்றும் ஆராய்ச்சி ரீதியான பரீட்சார்த்தங்கள் ஊடாக 300 மாதிரிகளை (Samples) பூர்த்தி செய்தல்.
- 280 கைவினைஞர்களுக்காக 14 புதிய வடிவமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பக் கொள்ளளவு அபிவிருத்தி (Capacity Development) வேலைத்திட்டங்களை நடத்துதல்.
- நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறையில் (Workshop) குறுகிய காலப் பாடநெறிகள் ஊடாக 50 பயனாளிகளுக்கு நடைமுறைப் பயிற்சிகளை வழங்குவதற்கும், 20 பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிறுவனத்தின் பயிற்சிப் பட்டறையினுள் புத்தாக்கம் (Innovation) மற்றும் தொழில்நுட்ப விழிப்புணர்வை (Technology Awareness) வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 200 கைவினைஞர்களுக்கு, வடிவமைப்பதில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான அறிவை மேம்படுத்துவதற்காக 04 விசேட வேலைத்திட்டங்களை நடத்துதல்.
- 50 பாடசாலை மாணவர்களின் வடிவமைப்பு தொடர்பான தேடலறிவு மற்றும் சிந்தனைத் திறனை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடத்துதல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் மூலப்பொருட்கள் / செயல்முறைகள் / இயந்திரங்கள் சார்ந்த 02 மேம்படுத்தல்களை முன்னெடுத்தல்.
- 150 கைவினைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள், செயல்முறைகள் மற்றும் மூலப்பொருட்கள் குறித்த விழிப்புணர்வை வழங்குதல்.
- 02 சந்தை ஆய்வுத் திட்டங்களை (Market Research Programs) முன்னெடுத்தல்.
- கைவினைத் துறையை மேம்படுத்துவதற்காக 06 விளம்பரப்படுத்தல் / ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.
- 20 புதிய வடிவமைப்புகளைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் 20 கைவினைஞர்களைச் சந்தை வாய்ப்புகளுடன் இணைத்தல்.
- சந்தைக்கு 200 புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்.
- கைவினைத் துறையில் ஈடுபட்டுள்ள 50 பேருக்கு சந்தைப்படுத்தல் (Marketing) தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்கான 02 வேலைத்திட்டங்களை நடத்துதல்.
- நினைவுச் சின்னங்களை அடிப்படையாகக் கொண்ட வடிவமைப்புப் போட்டியொன்றை நடத்துதல் மற்றும் அதன் ஊடாக 50 உயர்தர வடிவமைப்புகளைச் சமூகமயப்படுத்துதல்.
- சணல் மற்றும் தும்பர (Dumbara) வடிவமைப்புகள் சார்ந்த 40 கைவினைஞர்களுக்கு வடிவமைப்பு குறித்த விழிப்புணர்வை வழங்குவதற்காக கலந்துரையாடல் தொடர் வேலைத்திட்டங்களை நடத்துதல் மற்றும் அதனைச் சமூகமயப்படுத்துதல்.
- சணல் மற்றும் தும்பர (Dumbara) வடிவமைப்புகள் சார்ந்த 200 கலைப்படைப்புகளை வெளியிடுவதை அடிப்படையாகக் கொண்டு, “லங்கார“ (Lankara) - 2026 வடிவமைப்புப் பொருட்களின் கண்காட்சியை நடத்துதல் மற்றும் வெற்றிபெற்ற நினைவுச் சின்னங்களின் (Souvenirs) உற்பத்தி வரிசையை அறிமுகப்படுத்துதல்.
- வடிவமைப்புத் துறைப் பாடநெறிகளுக்காக 130 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.
- 05 ஆலோசனைக் சேவைகளை முன்னெடுத்தல்.

## 2.9.6 இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (GJRTI)

**முன்னேற்றம்/ வெற்றி**

- அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள மாணிக்கக்கல் படிவுகள் மற்றும் அவற்றின் இருப்பிடங்களை நவீன விஞ்ஞான மற்றும் துல்லியமான வழிமுறைகள் ஊடாக இனங்காண்பதற்காக, முப்பரிமாண புவி இரசாயன மற்றும் புவி இயற்பியல் மாதிரிகளை (Three-Dimensional Geochemical and Geophysical models) உருவாக்குவதற்கு களனி மற்றும் தெதுரு ஓயா ஆற்றுப் படுக்கைகளை அண்மித்து ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- இதன் மூலம் மாணிக்கக்கல் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக, தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபையுடன் இணைந்து நிறுவப்பட்ட குழுவின் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- குறையுள்ள மற்றும் குறைந்த பெறுமதியுள்ள மாணிக்கக்கற்களின் பெறுமதியை அதிகரிப்பதற்காக, கதிர்வீச்சு சிகிச்சை உள்ளிட்ட தொழில்நுட்ப ரீதியிலான சிகிச்சைகளை தீவிரப்படுத்துதல் மற்றும் அத்தகைய சிகிச்சை செய்யப்பட்ட மாணிக்கக்கற்களை வேறுபடுத்தி இனங்காணும் வழிமுறைகளை முன்வைத்தல்.
- ஆராய்ச்சி ஆய்வகங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, முறையான தரச்சான்றிதழ் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- கடந்த காலத்தில் இலங்கையை அண்மித்து முத்துத் தொழில் பிரபல்யமாகக் காணப்பட்டதுடன், மீண்டும் இந்நாட்டில் முத்து வளர்ப்பு தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வொன்றை மேற்கொள்ளல்.
- ஆபரணத் தயாரிப்பிற்காக நானோ - வண்ணத் தங்கக் கலப்புலோகம் (Nano-colour gold alloy) ஒன்றினை அறிமுகப்படுத்துதல்.
- இலங்கையின் பாரம்பரிய ஆபரண வடிவமைப்புகள் குறித்த விபரப்பட்டியல் (Catalog) ஒன்றினைத் தயாரித்தல்.
- மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்களை மதிப்பீடு செய்யும் செயல்முறைக்கு தரப்படுத்தப்பட்ட அங்கீகாரத்தை (Standard Accreditation) பெற்றுக்கொள்வதற்காக, செயற்கை நுண்ணறிவு (AI) தரவரிசைப்படுத்தல் கருவிகளை நிறுவுதல்.
- ஆராய்ச்சித் திட்டங்களினூடாகக் கண்டறியப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை வர்த்தகமயமாக்குவதற்காக, 2025 சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டை நடத்துதல் மற்றும் கெவுடா (Geuda) வெப்ப சிகிச்சை தொடர்பான ஆராய்ச்சி நூலொன்றைத் தயாரித்தல்.
- மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலுடன் தொடர்புடைய புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள பாடநெறிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் ஊடாக, இரத்தினக்கல்லியல் (Gemmology) பாடத்திற்கான NVQ 4 / 5 தரச்சான்றிதழ் மட்டத்தைத் தயாரித்து முடித்தல் மற்றும் மாணிக்கக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் பாடத்திற்காக NVQ மட்டம் - 5 வரையான பாடநெறிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- பிரித்தானிய இரத்தினக்கல்லியல் சங்கத்தின் (Gem-A) அங்கத்துவத்தைப் பெறுவதற்கான தகைமைகளை வழங்கும் ஆரம்ப மற்றும் டிப்ளோமா பாடநெறிகளை ஆரம்பிப்பதன் மூலம், இக்கைத்தொழிலில் சர்வதேச தகைமைகளைப் பூர்த்தி செய்து தொழில்சார் நிபுணர்களாக மாறுவதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.

- மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழில் தொடர்பான அடிப்படைச் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா தகைமைகளைப் பெறும் மாணவர்களுக்காக, சப்ரகமுவ, மொரட்டுவ, ஊவா வெல்லஸ்ஸ மற்றும் திறந்த பல்கலைக்கழகம் ஆகிய ஏனைய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பட்டப்படிப்பு மட்டத்திலான பாடநெறிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.

- சிறிய அளவிலான மாணிக்கக்கற்களைத் துல்லியமாக வெட்டுவதற்கான புதிய பயிற்சிப் பிரிவு மற்றும் பாடநெறிகளை ஆரம்பிப்பதன் ஊடாக, இந்நாட்டில் சிறிய மாணிக்கக்கல் வெட்டும் தொழில்நுட்பத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- மாணவர் கற்றல் முகாமைத்துவ முறைமையினை (Learning Management System - LMS) அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- வருடாந்தம் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்க முடிந்தமையின் ஊடாக, 1383 பயிற்சியாட்களை பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஆண்டின் இறுதியில் நிறைவுபெறாத பாடநெறிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, 295 மாணவர்கள் வெற்றிகரமாக பாடநெறிகளை முடித்து கைத்தொழில்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர்.

- துறையிலுள்ள கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பயிற்சி நிறுவனங்களுடன் தொடர்புகளை மேம்படுத்துவதன் மூலம் பயிற்சி வாய்ப்புகளை விரிவுபடுத்தல்.

- மாணிக்கக்கற்களை இனங்காணல், மாணிக்கக்கல் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல், தங்க ஆபரணத் தரப்படுத்தல், முத்திரை பதித்தல் (Hallmarking), போலித் தங்க ஆபரணங்களை இனங்காணல் மற்றும் தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் வழிமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை வங்கித் தொகுதியை மையமாகக் கொண்டு நடத்துவதன் மூலம், இக்கைத்தொழிலுக்குத் தேவையான சரியான அறிவை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

**சவால்கள்**

- நிபுணர்களின் தட்டுப்பாடு - உயர் ஆய்வு முறைகள் குறித்த நிபுணத்துவம் கொண்ட போதுமான பயிற்சி பெற்ற இரத்தினக்கல்லியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் பற்றாக்குறை.

- ஊழியர் சம்பளம் - உயர் திறமை கொண்ட இரத்தினக்கல்லியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களைப் பணியமர்த்துவதும் அவர்களைத் தக்கவைத்துக்கொள்வதும் பாரிய நிதித் தேவையை ஏற்படுத்தக்கூடும்.

- நுகர்வுப் பொருட்கள் மற்றும் பயன்பாடுகள் - ஆய்வக நுகர்வுப் பொருட்கள், பரிசோதனைகளுக்காகத் தொடர்ச்சியாக மாணிக்கக்கற்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நவீன உபகரணங்களை இயக்குவதற்கான அதிக பயன்பாட்டுக் கட்டணங்கள்.

- பயிற்சிச் செலவுகள் - தொழில்நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்து பயணிப்பதற்காக, பணியாளர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு என்பன செலவுகளை அதிகரிக்கின்றன.

- உபகரணங்களின் அதிக செலவு - நிறமாலைமானிகள் (Spectroscopes), நுண்ணோக்கிகள் (Microscopes) மற்றும் லேசர் அமைப்புகள் போன்ற மேம்பட்ட மாணிக்கக்கல் பகுப்பாய்வு மற்றும் சோதனை உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பராமரித்தல் அதிக செலவுமிக்கதாகும்.

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் - புதுமையான ஆராய்ச்சித் திட்டங்களுக்குப் போதுமான நிதி மற்றும் பணியாளர்களை ஒதுக்குவதில் உள்ள சிரமம்.
- தாழில்நுட்ப மேம்பாடுகள் - இரத்தினக்கல்லியல் ஆராய்ச்சி முன்னேற்றங்களுடன் இணைந்து பயணிப்பதற்கு, தொடர்ச்சியான மேம்படுத்தல்களை மேற்கொள்வது அதிக செலவுமிக்கதாகும்.

- தொழில்நுட்ப சவால்கள் - மாணிக்கக்கற்களின் தோற்றம், சிகிச்சைகள் அல்லது புதிய தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சிகளுக்கு அதிக காலம் மற்றும் வளங்கள் தேவைப்படலாம்.

- நுகர்வுப் பொருட்கள் மற்றும் பயன்பாடுகள் - ஆய்வக நுகர்வுப் பொருட்களைத் தொடர்ச்சியாகக் கொள்வனவு செய்தல், பரிசோதனைகளுக்கான மாணிக்கக்கற்கள் மற்றும் நவீன உபகரணங்களை இயக்குவதற்கான அதிக பயன்பாட்டுக் கட்டணங்கள்.

- அளவீட்டுத் திருத்தம் மற்றும் பராமரிப்பு - உணர்திறன் மிக்க உபகரணங்களைத் தொடர்ச்சியாக அளவீட்டுத் திருத்தம் (Calibration) செய்தல், சேவை ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் என்பன தொழில்நுட்ப ரீதியாக மிகவும் கடினமான பணிகளாகும்.

- மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழிலின் நவீன சர்வதேச சந்தை தேவைகளுக்கு ஏற்ப, கல்வி சார் ஊழியர்களுக்கு இத்துறையிலான நவீன அறிவு மற்றும் தொழில்நுட்பம் குறித்த அறிவு அல்லது பயிற்சி இல்லாமை.

- பாடவிதானம் தொடர்பான அனுபவமும் தேர்ச்சியும் கொண்ட பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் இல்லாமை.

- பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி திட்டங்கள் போதாமை.

- சர்வதேச மட்டத்திலான பயிற்சி கொள்கைகள் மற்றும் சான்றிதழ் கட்டமைப்புகள் பற்றிய அறிவைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதனால், அது தொடர்பான அறிவும் பயிற்சியும் கொண்ட ஊழியர்கள் இல்லாமை.

- பயிற்சிப் பிரிவுகள் (பணிமனைகள்) மற்றும் உபகரணங்கள் காலாவதியானவையாகவும் போதாதவையாகவும் இருத்தல்.

- பயிற்சி அலகுகளுக்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) வசதிகள் (ஸ்மார்ட் வகுப்பறைகள், பாவனையாக்க மென்பொருள் - Simulation Software) பற்றாக்குறையாக இருத்தல்.

- கைத்தொழிற்துறைக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான மூலதனம் போதாமை.

- கிராமப்புற மற்றும் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியிலிருந்து வரும் பயிற்சியாளர்களுக்கு, பொருளாதாரத் தடைகள் காரணமாக பாடநெறிகளில் தொடர்ந்து தங்கியிருப்பதில் சிரமம் காணப்படல்.

- இளைஞர்களிடையே இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை மீதான ஈர்ப்பு குறைவடைந்துள்ளதோடு, பாடநெறிகளை ஊக்குவிப்பதற்கான மேலதிக வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதற்கான போதுமான நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை.

- பாடநெறிகள் முடிந்த பின்னர் வேலைவாய்ப்பு / வியாபார வாய்ப்புகள் குறித்த போதுமான வழிகாட்டல்கள் கிடைக்காமை.

- பயிற்சி நெறி நடத்துனர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களின் பெறுபேறுகள் மற்றும் தரத்தை (வேலைவாய்ப்புத் திறன், உற்பத்தித்திறன்) அளவிடுவதற்கான மதிப்பீட்டு முறைகள் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமை - Monitoring & Evaluation System) மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படல்.

**எதிர்கால இலக்குகள்**

- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை தொடர்பான முறையான கல்வியை வழங்குவதற்காக தரப்படுத்தப்பட்ட பாடநெறிகளை நடத்துதல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை தொடர்பான பட்டப்படிப்பிற்கான பாடத்திட்டங்களை உருவாக்குதல்.
- பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை தொடர்பான பட்டத் தகைமை மற்றும் குபுயு தகைமையை வழங்குவதற்கான பாடநெறிகளை ஆரம்பித்தல். (இப்பாடநெறி 2025 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது).
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறை தொடர்பான தொழில்நுட்ப வேலைத்திட்டங்களை (பணிமனைகளை) நடைமுறைப்படுத்துதல்.
- 2024 - 2025 கல்வியாண்டிற்கான சான்றிதழ் வழங்கும் விழாவை நடத்துதல்.
- நவீன விஞ்ஞான முறைகள் மூலம் புதிய இரத்தினக்கல் படிவுகளைக் கண்டறிவதன் ஊடாக இரத்தினக்கல் அகழ்வு அளவை அதிகரித்தல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறைக்காக சர்வதேச மட்டத்திலான ஆராய்ச்சி கூடமொன்றை நிறுவுதல்.
- இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிற்துறைக்காக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சந்தையொன்றை உருவாக்குதல்.
- நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக பெறுமதி குறைந்த இரத்தினக்கற்களுக்கு பெறுமதி சேர்த்தல்.
- சர்வதேச மட்டத்திலான இரத்தினக்கல் ஆராய்ச்சி கூடமொன்றை நிறுவுதல்.
- சுரங்க உரிமையாளர்களுக்கு சர்வதேச இரத்தினக்கல் விலைகள் மற்றும் தரநிலைகள் குறித்த தகவல்களை வழங்கும் செயல்முறையை ஏற்படுத்துதல்.
- குறுகிய கால (Short-term), மாலை மற்றும் வார இறுதி (Evening & Weekend) பயிற்சி நெறிகளை விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.
- டிஜிட்டல் / கலப்பு கற்றல் முறைகளை (Digital / Blended Learning Models - இணையவழி + செய்முறை) அதிகளவில் உள்ளடக்கி பாடநெறிகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- சுயதொழில் மற்றும் நுண் தொழில் மேம்பாடு (Self-employment & Micro-enterprise Development) போன்ற தொழில்முயற்சி தொடர்பான பயிற்சி தொகுதிகளை பாடநெறிகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.
- NVQ மற்றும் சர்வதேச பயிற்சி கட்டமைப்புகளுடன் (Training Frameworks) பயிற்சி பாடநெறி உடன்படிக்கைகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி திட்டங்களை வருடாந்தம் நடைமுறைப்படுத்துதல்.

- பயிற்றுவிப்பாளர்களுக்கோ சர்வதேச வெளிப்பாடு மற்றும் கைத்தொழிற்துறை இணைப்புகளை (International Exposure and Industry Attachments) வழங்குதல்.
- பாடநெறி நிபுணர்கள் மற்றும் கைத்தொழிற்துறை நிபுணர்களை வருகைதரு பயிற்றுவிப்பாளர்களாக (Visiting Trainers) இணைத்துக்கொள்ளுதல்.
- பயிற்சி அலகுகள் மற்றும் உபகரணங்களை நவீனமயமாக்கல்.
- கைத்தொழிற்துறை இணைப்புத் திட்டங்களை (Industry Linkage Programmes - தொழிற்பயிற்சிகள், உள்ளகப்பயிற்சிகள்) பலப்படுத்துதல்.

## 2.9.7 ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை (EDB)

**ஏற்றுமதித் துறையின் ஒட்டுமொத்த செயல்திறன்**
**முன்னேற்றம்**

- உலகளாவிய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதித் துறை நிலையான வளர்ச்சியையும் பின்னடைவுகளைத் தாங்கும் திறனையும் வெளிப்படுத்தியது.
- மொத்த ஏற்றுமதி வருவாய் 17,320.25 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டதுடன், இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.97% வருடாந்த வளர்ச்சியாகும்.
- பொருள் ஏற்றுமதி 13,581.37 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை வளர்ச்சியடைந்ததுடன் (6.34% அதிகரிப்பு), இது இதுவரை பதிவான மிக உயர்ந்த வருடாந்தப் பெறுமதியாகும்.
- சேவை ஏற்றுமதி 4.64% இனால் வளர்ச்சியடைந்து 3,788.88 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது.
- தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்முறை மேலாண்மை (ICT/BPM), கட்டுமானம், நிதிச் சேவைகள் மற்றும் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலிச் சேவைகள் (Logistics) ஆகிய துறைகள் இந்த வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய சேவைத் துறைகளாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய ஏற்றுமதி வருவாய் இலக்கில் 95% க்கும் அதிகமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- இந்த வளர்ச்சிக்கு தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த தயாரிப்புகள் பலத்த பங்களிப்பை வழங்கியதுடன், இத்துறையின் வருவாய் வரலாற்றில் முதன்முறையாக 1 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டியது.

**ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சரவை (EDCM)**

ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சரவைக் கூட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டன (2025 ஜனவரி 27 மற்றும் ஆகஸ்ட் 12).

முதலாவது ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.

- "Made in Sri Lanka" தயாரிப்புகளை வாங்குவதை ஊக்குவிப்பதற்காக, விமான நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வரி (VAT) திரும்பப்பெறும் முறையை (Reimbursement system) மீண்டும் நிறுவுதல்.
- மனித உழைப்பால் மேற்கொள்ளப்படும் கைமுறைப் பரிசோதனைகளுக்கு (Manual checks) மாற்றாக, கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்றுமதித் தயாரிப்புகள் பரிசோதிக்கப்படுவதை தானியங்கிமயமாக்குவதன் (Automation) முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
- இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் புகையிரத எஞ்சின்களை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில், அவற்றின் உள்நாட்டுப் பரிசோதனை நடவடிக்கைகளை இலகுபடுத்துதல்.
- ஏற்றுமதித் துறையின் செலவினங்களைக் குறைப்பதற்காக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
- ஏற்றுமதி இலக்குகளை அடைவதற்காக தொழிலதிபர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் ஆதரவளிக்கும் வகையில் செஸ் (CESS) நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை முறைப்படுத்துவதற்காக, முதலீட்டு வசதியளிப்புக் குழுவொன்றை (Investment Facilitation Committee) நிறுவுவதன் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
- துல்லியமான மதிப்பீட்டு முறைகளுடன் (Assessment methodologies), இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான ஏற்றுமதி ஊக்குவிப்புகளை (Export incentives) வழங்குதல்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இலத்திரனியல் உபகரணங்களை ஏற்றுமதி செய்பவர்களுக்கான மூலப்பொருள் இறக்குமதியின் போது, சுங்கவரிச் சலுகைகளை வழங்குதல்.
- சேவை ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்காக, வங்கிப் பிணைமுறி எல்லைகளை (Bank guarantee limits) அதிகரித்தல்.
- உயர் வினைத்திறனுக்காக (Efficiency) ஏற்றுமதித் துறையின் தரவு அமைப்புகளை (Data systems) டிஜிட்டல்மயமாக்குவதற்கு முன்னுரிமை அளித்தல்.

இரண்டாவது ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள்

- ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக சுதந்திர துறைமுக சேவை நடவடிக்கைகளை (Free Port Service Operations) அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தைக் கண்டறிதல் மற்றும் தற்போதுள்ள "மத்திய ஒழுங்குமுறைச் சட்டம்" (Hub Regulation Act) என்பதைத் திருத்துவதற்கு முதலீட்டுச் சபைக்கு (BOI) அறிவுறுத்துதல்.
- திருகோணமலை துறைமுகத்தை வர்த்தக கப்பற்துறை மையமாக அபிவிருத்தி செய்தல்.
- மதிப்புக்கூட்டல் (Value addition) மற்றும் மறுஏற்றுமதிக்காக (Re-export) சில மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக, முதலீட்டுச் சபையில் (BOI) பதிவுசெய்யப்பட்டுள்ள ஏனைய வாசனைத்திரவிய ஏற்றுமதி நிறுவனங்களின் சாத்தியக்கூறுகளை ஆராய்தல்.
- கோழி வளர்ப்பு தயாரிப்புகளின் (Poultry products) ஏற்றுமதிக்கு இணையாக, அவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் இறக்குமதி வரிகளை நீக்கும் முறையொன்றை நடைமுறைப்படுத்துதல்.
- சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தேயிலைக் கன்றுகளை மறுவடிவமைப்பு (Infill) செய்வதற்காக, சலுகைக்காலத்துடன்கூடிய குறைந்த வட்டி கடன் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

**தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தை (NEDP) 2025-2029 தயாரித்தல்.**

- 2025 வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் 2025-2029 தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம் (NEDP) ஒரு தேசிய முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டது.
- இந்த தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்கான தலைமைத்துவம் மற்றும் பொறுப்பு.
- ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிடம் (EDB) ஒப்படைக்கப்பட்டது.
- ஏற்றுமதி போட்டித்திறனை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) கொள்கை அடிப்படையிலான கடன் வழங்கும் (PBL) திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொழில்நுட்ப உதவியுடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது.
- அரச நிறுவனங்கள், தனியார் துறை, கல்வித்துறையினர் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களின் பங்கேற்புடன் 2025 அக்டோபர் 2 முதல் 10 வரை கண்டியில் நடைபெற்ற பிராந்திய அமர்வு உட்பட பரந்த அளவிலான பங்குதாரர்களின் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- இந்த ஆலோசனைக் கூட்டங்களில் முன்னுரிமைத் துறைகள், சந்தை இணைப்புகள், வர்த்தகத் தடைகள் மற்றும் கொள்கை மற்றும் நிறுவன சீர்திருத்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.
- தொழில்நுட்பக் குழு கூட்டங்கள், இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மற்றும் முன்னணி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டங்கள் மூலம் கூடுதல் முன்மொழிவுகளும் தரவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன.
- 2030 ஆம் ஆண்டளவில் 36 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி இலக்கை அடைவதையும், மீளெழுச்சியுடைய, உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டம் 2026 இன் தொடக்கத்தில் இறுதி செய்யப்பட உள்ளது.

**ஏற்றுமதி மேம்பாடு, திறன் மேம்பாடு மற்றும் சந்தைப் பிரவேச முன்முயற்சிகள்**

- 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முக்கிய சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் 142 க்கும் மேற்பட்ட இலங்கை நிறுவனங்கள் (66 க்கும் மேற்பட்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைகள் உட்பட) பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை வழங்கியது.
- Gulfood, Biofach, IFE (ஐக்கிய இராச்சியம்), Foodex Saudi, Seafood Expo Global, SIAL Canada, Japan IT Week மற்றும் Thaifex Anuga Asia ஆகியன அவற்றுள் சில முக்கிய உலகளாவிய வர்த்தகக் கண்காட்சிகளாகும்.
- இந்த சர்வதேச தலையீடுகள் மூலம் சந்தைப் பிரவேசம், உலகளாவிய தெரிவுநிலை மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் விரிவடைந்தன.
- உள்நாட்டில், கொம்பிலாஸ்ட் இறப்பர் கண்காட்சி 2025 (Complast Rubber Expo 2025) மற்றும் காலணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சி 2025 (Footwear & Leather Fair 2025 - பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்) போன்ற கண்காட்சிகளின் மூலம் ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை வர்த்தகத்தை ஊக்குவித்தது.

- காலணி மற்றும் தோல் பொருட்கள் கண்காட்சியின் (Footwear & Leather Fair) ஊடாக 38 புதிய வணிக உறவுகள் கட்டியெழுப்பப்பட்டதுடன், 1.9 மில்லியன் ரூபாய் விற்பனையும் மற்றும் 26,900 பார்வையாளர்களின் ஈர்ப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- திறன் மேம்பாட்டு முன்முயற்சிகளின் கீழ், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிலதிபர்கள் மற்றும் பெண் தொழிலதிபர்களுக்காக தாய்லாந்து, ஜெர்மனி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு சர்வதேச அவதானிப்புப் பயணங்கள் (International observation tours) ஏற்பாடு செய்யப்பட்டன.

- கிழக்கு மாகாண மன்றம் (Eastern Province Forum) போன்ற பிராந்திய திட்டங்களின் ஊடாக, 250 க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களின் ஏற்றுமதித் தயார்நிலை மற்றும் திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கப்பட்டது.

- கைவினைப்பொருட்கள் மற்றும் வாழ்க்கைமுறைத் துறைகளுக்காக (Handicrafts and lifestyle) நடத்தப்பட்ட விழிப்புணர்வுத் திட்டங்களின் ஊடாக, ஏற்றுமதி, பொதியிடல், மின்-வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலி அமைப்புகள் (Supply systems) குறித்து 100 சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிலதிபர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்பட்டது.

- EDB-JICA மற்றும் ஜெர்மனியின் இறக்குமதி மேம்பாட்டு மையம் (Import Promotion Desk) போன்ற மூலோபாய கூட்டாண்மைகளின் ஊடாக, சந்தைப் பிரவேசம், பயிற்சி, வணிக உறவுகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் புத்தாக்க ஆதரவு ஆகியன சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைகளுக்கு வழங்கப்பட்டன.

- ஏற்றுமதியாளர்களுக்கு வசதியளிக்கும் நடவடிக்கைகளின் கீழ் 37 பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கிய ஏற்றுமதியாளர்கள் மாமன்றம் (Exporters' Forum) மற்றும் சிறந்த பங்களிப்பைப் பாராட்டி பங்காளர்களின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்திய 26 வது ஜனாதிபதி ஏற்றுமதி விருது விழா ஆகியன பிரதானமானவையாகும்.

**சவால்கள்**

- நவீன உலகளாவிய வர்த்தக இயக்கவியலுக்கு இணங்காத காலாவதியான நிறுவனக் கட்டமைப்பு.
- அரசு நிறுவனங்களுக்கு இடையே உள்ள பலவீனமான ஒருங்கிணைப்பு மற்றும் பணிகளின் மேலெழுதல்.
- போதியளவற்ற மனிதவளத் திறனும் தற்போதைய ஊழியர்கள் மீதான அதிகப்படியான பணிச்சுமையும்.
- வரம்புக்குட்பட்ட டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் தானியங்கி அமைப்புகளின் பற்றாக்குறை.
- இணையற்ற ஏற்றுமதியாளர்களின் தரவுத்தளம் இல்லாமை மற்றும் பலவீனமான தரவு மேலாண்மை.
- சந்தை நுண்ணறிவுத் தகவல் மற்றும் ஆராய்ச்சித் தரவுகளுக்கான போதிய அணுகல் இல்லாமை.
- அதிக உற்பத்திச் செலவு மற்றும் மூலப்பொருள் விலை உயர்வு காரணமாக போட்டித்திறன் குறைதல்.
- புத்தாக்கம், தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) முதலீடுகளின் குறைந்த மட்டம்.
- ஏற்றுமதி தயாரிப்புகளில் மட்டுப்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டல்.
- சர்வதேச தரநிலைகள், சான்றிதழ்கள் மற்றும் நிலையான தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள சிரமம்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் (SME) குறைந்த ஏற்றுமதித் தயார்நிலை மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பு.

- டிஜிட்டல் கட்டண தளங்கள் மற்றும் மின்-வணிக (e-commerce) உள்கட்டமைப்புகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல்.
- பிராந்திய ஏற்றுமதி நாடுகளுடன் (உதாரணமாக: வியட்நாம், இந்தியா, பங்களாதேஷ்) நிலவும் கடுமையான போட்டி.
- ஏற்றுமதி தேவையைப் பாதிக்கும் உலகளாவிய பொருளாதார மந்தநிலை.
- வழங்கல் சங்கிலிகள் மற்றும் வர்த்தக ஓட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும் புவிசார் அரசியல் பதற்றங்கள்.
- செலாவணி மாற்று விகிதத்தின் ஸ்திரமற்றதன்மை மற்றும் நிலையற்ற பொருளாதார நிலைமைகள்.
- விவசாய மற்றும் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகள் மீதான பருவநிலை மாற்றத்தின் தாக்கம்.
- வர்த்தக வசதியளிப்பு அமைப்புகளில் உள்ள திறமையின்மை காரணமாக ஏற்படும் தாமதங்கள் மற்றும் அதிக பரிவர்த்தனை செலவுகள்.

**எதிர்கால இலக்குகள்**

- 2030 ஆம் ஆண்டளவில் 36 பில்லியன் அமெரிக்க டாலர் ஏற்றுமதி வருவாயை ஈட்டும் தேசிய இலக்குடன், ஏற்றுமதி மேம்பாட்டுச் சபையின் (EDB) திட்டங்களை சீரமைத்தல்.
- அமெரிக்க டாலர் 1 பில்லியன் ஏற்றுமதி வருவாயை ஈட்டும் நோக்கில், 450 மில்லியன் ரூபாய் முதலீட்டில் ”Sri Lanka Expo 2026” கண்காட்சியை ஏற்பாடு செய்தல்.
- வடிவமைப்புத் துறையில் (Creative Industry) உலகளாவிய ரீதியிலான 10 இலங்கை வர்த்தக நாமங்களை (Brands) அபிவிருத்தி செய்வதற்காக ”Creative Sri Lanka 2030” திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அமெரிக்க டாலர் 50 மில்லியன் ஏற்றுமதி வருவாயை இலக்காகக் கொண்டு, ”தேசிய ஏற்றுமதி வர்த்தக நாம அபிவிருத்தித் திட்டம்” (National Export Brand Development Programme) என்பதைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல்.
- பிரதான வர்த்தக மற்றும் புத்தாக்கக் கருப்பொருள்களின் கீழ் நடத்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் (ADB) இணைந்து 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ”தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தை” (NEDP 2025–2029) இறுதி செய்தல்.
- 2026 ஆம் ஆண்டில் கொள்கை ரீதியிலான மூன்று கூட்டங்களுடன், ஏற்றுமதி மேம்பாட்டு அமைச்சரவையை (EDCM) கூட்டுதல்.
- ஏற்றுமதியாளர்களின் திறன்களை வலுப்படுத்துவதற்காக, ஏற்றுமதியாளர்களை அறிவூட்டும் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் 50 க்கும் மேற்பட்டவற்றை நடத்துதல்.
- வர்த்தகக் கண்காட்சிகள், வணிகத் தூதுக்குழுக்கள், B2B பேச்சுவார்த்தைகள் மற்றும் ஜனாதிபதி ஏற்றுமதி விருது விழா ஆகியவற்றைத் தொடர்ச்சியாக நடத்துவதன் மூலம் உலகளாவிய சந்தைப் பிரவேசத்தை விரிவுபடுத்தல்.

- இலங்கையின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்முறை மேலாண்மை (ICT/BPM) துறையிலுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைகளுக்கும் மற்றும் ஆரம்பநிலை நிறுவனங்களுக்கும் (Startups) பரந்த அளவிலான ஆதரவை வழங்குவதன் மூலம், EDB–JICA ஒத்துழைப்புத் திட்டத்தை 2026 ஆம் ஆண்டு வரை முன்னோக்கி நகர்த்துதல்.
- சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழிலதிபர்களின் கூடுதல் பங்களிப்புடன், உலகளாவிய வர்த்தகக் கண்காட்சிகளில் இலங்கையின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்துதல்.
- ஐரோப்பிய சந்தைப் பிரவேசத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்காக, EDB மற்றும் ஜெர்மனியின் இறக்குமதி மேம்பாட்டு மையத்திற்கு (IPD) இடையில் நிலவும் கூட்டாண்மையை வலுப்படுத்தல்.
- புதிய புவியியல் பிராந்தியங்கள் மற்றும் தயாரிப்பு வகைகளின் ஊடாக, சந்தை பன்முகப்படுத்தல் முயற்சிகளை விரிவுபடுத்தல்.
- இலக்கு வைக்கப்பட்ட ஏற்றுமதி ஆலோசனைகள் மற்றும் பயிற்சித் திட்டங்களின் ஊடாக, பெண்களினால் வழிநடத்தப்படும் வணிகங்களை அதிகளவில் வலுவூட்டல்.

## 2.9.8 சிறிய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரிவு (SED)

**முன்னேற்றம**

2025 ஆம் ஆண்டிற்கான இளைஞர் வலுவூட்டல் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகளின் கீழ், 125,650 நபர்களுக்குச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் 82% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான இளைஞர் வலுவூட்டல் திட்டத்தின் (Youth Empowerment Programme) பல்வேறு அங்கங்களின் கீழ் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் பின்வருமாறு.

- 26,345 நபர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் ஆதரவு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த குறிப்பிட்ட அங்கத்தின் கீழ; 71% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.
- தொழில்முனைவோர் மேம்பாட்டிற்குத் தேவையான சேவைகள் 2,893 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் 73% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.
- 6,135 நபர்களுக்கு தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டுள்ளது, இதன் மூலம் 100% முழுமையான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.
- 7,703 தொழில்முனைவோருக்கு சந்தை இணைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் 97% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

- 6,398 நபர்களுக்கு கணக்கியல், கிரயப்பரிசீலனை (Costing) மற்றும் நிதிசார் அறிவு மேம்பாட்டு சேவைகள் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் 93% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது
- 3,163 தொழில்முனைவோருக்கு வணிகத் தொடர் நடவடிக்கைகள் (Business follow-up) மற்றும் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் 93% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது
- Business Level Up" திட்டத்தின்கீழ், வணிக மேம்பாட்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட 3,190 தொழில்முனைவோர், இந்த நிறுவனத்தினால் பராமரிக்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் (SME) தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**நிதி முன்னேற்றம**

- 2025 ஆம் ஆண்டிற்கான மூலதன ஒதுக்கீடு 221.000 மில்லியன் ரூபா ஆகும். 31.12.2025 நிலவரப்படி, நிதி முன்னேற்றம் 138.525 மில்லியன் ரூபா ஆகக் காணப்படுவதுடன், இது 63% நிதி முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான மீண்டெழுந்த ஒதுக்கீடு (Recurrent Allocation) 927.500 மில்லியன் ரூபா ஆகும். 31.12.2025 நிலவரப்படி, நிதி முன்னேற்றம் 861.378 மில்லியன் ரூபா ஆகக் காணப்படுவதுடன், இது 93% நிதி முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான மூலதன ஒதுக்கீட்டின் கீழ், இளைஞர் வலுவூட்டல் திட்டத்திற்கு (Youth Empowerment Programme) 150.00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 31.12.2025 அன்றைய நிலவரப்படி, நிதி முன்னேற்றம் 107.549 மில்லியன் ரூபா ஆகும், இது 75% நிதி முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கிறது.

- தொழில்முனைவோர் விழிப்புணர்வு மற்றும் ஊக்கமூட்டும் திட்டங்களுக்காக 3.327 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் சேவைகளுக்காக 26.436 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- தொழில்முனைவோருக்குத் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் உள்ளிட்ட உற்பத்தி மேம்பாடு தொடர்பான சேவைகளுக்காக 27.128 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- சந்தை இணைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் சந்தை மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக 34.565 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- வணிகத் திட்டங்களைத் தயாரித்தல், கணக்கியல், கிரயப்பரிசீலனை (Costing) மற்றும் நிதிசார் அறிவு மேம்பாடு போன்ற சேவைகளுக்காக 8.130 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- வணிக ஆலோசனை மற்றும் தொடர் கண்காணிப்புச் சேவைகளுக்காக (Business advisory and follow-up activities) 1.388 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

**சவால்கள்**

- பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மட்டங்களில் தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதற்கான தொழில்முனைவோர் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளும் சிரமங்கள்.
- மாவட்ட மட்டத்திலான சந்தைப்படுத்தல் மையங்களை நிறுவுவது சந்தை அணுகலை மேம்படுத்துவதற்கு மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாக இருந்தாலும், பொருத்தமான இடங்கள் இல்லாமை மற்றும் அதிக செலவுகள் போன்ற சவால்கள் எதிர்கொள்ளப்படுகின்றன.
- வங்கிகள் ஊடாக சலுகை வட்டி விகிதங்கள் மற்றும் தளர்த்தப்பட்ட பிணைத் தேவைகளை வழங்கும் விசேட கடன் திட்டம் (Special Loan Scheme) ஒன்றின் பற்றாக்குறை தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் பெரும் சவாலாக உள்ளது.
- தயாரிப்புத் தரச் சான்றிதழ்கள் (Quality certifications) மாதிரிப் பரிசோதனைகள் (Sample testing) மற்றும் ஆய்வகப் பரிசோதனைகள் (Laboratory testing) போன்ற சேவைகளுக்காகத் தொழில்முனைவோர் அதிகச் செலவுகளைச் சுமக்க வேண்டியுள்ளதுடன், இதற்கெனச் சலுகை அடிப்படையிலான எவ்வித வழிமுறைகளும் தற்போது நடைமுறையில் இல்லை.
- குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், தொழில்முனைவோருக்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதற்குப் பொருத்தமான நிறுவனங்கள் மற்றும் வளப்பாளர்கள் (Resource persons) பற்றாக்குறை நிலவுகிறது.
- வழக்கமான வணிகத் தொடர் நடவடிக்கைகளுடன் (Follow-ups) கூடிய தொடர்ச்சியான வணிக ஆலோசனைச் செயல்முறையை முன்னெடுப்பதற்குப் போதுமான போக்குவரத்து வசதிகள் இல்லாமை ஒரு பெரும் சவாலாக உள்ளது.
- அர்சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து (NGOs) கிடைக்கும் மானியங்கள் மற்றும் வளங்களை, தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களின் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான திறமையான வழிமுறை (Mechanism) இல்லாமை ஒரு முக்கிய சவாலாக உள்ளது.

**எதிர்கால இலக்குகள**

- 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட “Business Level UP” வேலைத்திட்டத்தை, அவசியமான மேம்படுத்தல்களுடன் 2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- Business Level UP வேலைத்திட்டத்திற்கு இணையாக, "Business Online" திட்டத்தின் கீழ் இணையவழி (Online) நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில், தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கான முதன்மைத் திட்டமான (Flagship Programme) தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்“ (Entrepreneurship Development Program) கீழ் 18 பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது 08 நாட்கள் தங்கியிருந்து பயிலும் (08-day residential programme) ஒரு விசேட பயிற்சியாகும்.

- தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை (சான்றிதழ் வழங்கல், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், மாதிரிப் பரிசோதனை, பொதியிடல் போன்றவை) வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தொழில்முனைவோரின் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக பௌதீக (Physical) மற்றும் இணையவழி (Online) சந்தைப்படுத்தல் வசதிகளை ஒழுங்கமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- ஏற்றுமதித் திறனுள்ள வணிகங்களை (Export potential) சர்வதேசச் சந்தைக்குத் தயார்படுத்துவதற்காக ஒரு விசேட வேலைத்திட்டத்தை (Special Programme) நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தொழில்முறைத் துறைகளின் அடிப்படையில் தயாரிப்பு மேம்பாட்டு நடவடிக்கைகள் (Product Development) மற்றும் கொள்வனவு-விற்பனையாளர் சந்திப்புகளை (Buyer–Seller Meetings) ஒழுங்கமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வங்கிகளுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கும், தொழில்முனைவோரிடையே நிதிசார் அறிவு (Financial literacy) மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்ட வணிகங்களுக்குத் தொடர்ச்சியான வணிக ஆலோசனைச் சேவைகளை (Business Advisory Services) வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- உள்நாட்டு, மாவட்ட மற்றும் தேசிய மட்டத்திலான தொழில்முனைவோர் மேம்பாட்டுக் குழுக்களை (Entrepreneurship Development Committees) ஒருங்கிணைப்பதன் மூலம் வணிக ரீதியான சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- வணிக மேம்பாட்டிற்காக அந்தந்த துறைகளுடன் தொடர்புடைய அலுவலர்களின் திறன்களை (Capacity Building) மேம்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் (Regulate) மற்றும் கண்காணிப்பதற்கும் (Monitor) தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 2.9.9 சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் (SRI)

**முன்னேற்றம்**

சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் (SRI) 2025 ஆம் ஆண்டுக்கான விசேட திட்டத்தின் கீழ், எட்டு பிரதான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அறுபத்து மூன்று (63) நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், பின்வரும் முன்னேற்றங்கள் எட்டப்பட்டுள்ளன :

- SL 2007 தொடரைச் சேர்ந்த இரண்டு புதிய கரும்பு இனங்கள் (SL 07 3498 மற்றும் SL 07 3505) வணிக ரீதியான பயிர்ச்செய்கைக்காக வெளியிடப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகளுக்காக விதைப் பெருக்க (Seedcane Multiplication) வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் ஆய்வுகளின் ஊடாக மொத்தம் 45 கரும்பு இனங்கள் (Accessions) சேகரிக்கப்பட்டதுடன், மேலதிக நடவடிக்கைகளுக்காக அவற்றை விதைப் பெருக்கம் செய்யும் (Multiplication) வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- தெனியாய, என்சல்வத்தையிலுள்ள கரும்பு இனப்பெருக்க நிலையத்தில் 1,745 கரும்பு இனங்கள் (Accessions) இரட்டை நிலப்பகுதிகளில் (Duplicate plots) களத்திற்கு வெளியேயான (Ex-situ) முறையில் பாதுகாத்து பராமரிக்கப்படுகின்றன. அத்துடன், 73 வணிக மற்றும் வணிக ரீதியான பயன்பாட்டிற்கு நெருக்கமான கரும்பு இனங்களைக் கொண்ட விதைப் பண்ணை பராமரிக்கப்படுவதுடன், உடவலவ சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தில் 950 கரும்பு இனங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

- பீல்ட் லான்டர்ன் (Field lantern) மற்றும் கரைசல் இனப்பெருக்க (Marcoting) நுட்பங்களைப் பயன்படுத்தி மொத்தம் 700 கரும்பு இனக்கலப்புகள் (Crosses) மேற்கொள்ளப்பட்டன. இவை சர்க்கரை மற்றும் கரும்பு விளைச்சலை அதிகரிப்பதையும், கரிப்பூட்டை நோய் (Smut), இலைக்கருகல் நோய் (Leaf scald) மற்றும் வெண்இலை நோய் (White leaf disease) போன்ற நோய்களுக்கு எதிரான எதிர்ப்புத் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட வழிநடத்தப்பட்ட இனக்கலப்புகளாகும். இதன்போது பெறப்பட்ட உண்மை விதைகள் (True seeds) பதப்படுத்தப்பட்டு, – 20 °ஊ குளிரூட்டப்பட்ட நிலையில் சேமிக்கப்பட்டுள்ளன.

- SL 2021 மற்றும் SL 2022 தொடர்களின் முதலாவது தெரிவு நிலைக்கான (Selection Stage 1) நாற்றுமேடை நடவடிக்கைகள் மற்றும் பயிர் தாபித்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- SL 2022 தொடரின் இரண்டாம் கட்டத் தெரிவுக்காக (Stage 2) உயர்தரமான கரும்புத் தாவரங்களை (Clones) தெரிவு செய்யும் நோக்குடன், முதலாம் கட்டத்தில் (Stage 1) 42,055 நாற்றுகள் (Seedlings) பராமரிக்கப்பட்டன.

- SL 2021 தொடரின் முதலாம் கட்டத் தெரிவிலிருந்து (Stage 1) 1,515 கரும்புத் தாவரங்கள் (Clones) தெரிவு செய்யப்பட்டதுடன், அவை தெரிவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு (Stage 2) முன்னகர்த்தப்பட்டுள்ளன.

- தெரிவுத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில் (Stage 3), SL 2020 தொடரின் 443 கரும்புத் தாவரங்களும் (Clones) மற்றும் SL 2019 தொடரின் 300 கரும்புத் தாவரங்களும் பராமரிக்கப்பட்டன.

- ஆரம்ப கட்ட விளைச்சல் பரிசோதனைகளுக்காக (Preliminary Yield Trials) SL 2018 தொடரின் 211 கரும்புத் தாவரங்களும் (Clones), மற்றும் மீள்முறை விளைச்சல் பரிசோதனைகளுக்காக (Replicated Yield Trials) SL 2016 மற்றும் SL 2015 தொடர்களின் 70 கரும்புத் தாவரங்களும் விதைப் பெருக்க நிலப்பகுதிகளில் (Multiplication Plots) பராமரிக்கப்பட்டன.

- மீள்முறை விளைச்சல் பரிசோதனைகளின் (Replicated Yield Trials) கீழ் SL 2014, SL 2013 மற்றும் SL 2012 தொடர்களைச் சேர்ந்த 126 கரும்புத் தாவரங்கள் (Clones) பராமரிக்கப்பட்டன.

- உடவலவ ஆராய்ச்சி நிலையத்தில் மதிப்பீடுகள் நிறைவு செய்யப்பட்ட SL 2010/11, SL 2009, SL 2008, SL 2007, SL 2006 மற்றும் SL 2005 ஆகிய தொடர்களைச் சேர்ந்த 120 கரும்புத் தாவரங்கள் (Clones), வணிக ரீதியாக வெளியிடப்படுவதற்கு முன்னர் தொழிற்சாலை மட்டத்திலான மேலதிக மதிப்பீடுகளுக்காக விதைப் பெருக்க நிலப்பகுதிகளில் (Multiplication plots) பராமரிக்கப்பட்டன.
- பாரிய அளவிலான விதைப் பெருக்க நடவடிக்கைகளுக்கு முன்னர், பல்வேறு கரும்பு பயிரிடப்படும் பகுதிகளில் இறுதி கட்ட மதிப்பீடுகள் (Final-stage evaluations) தொடரப்பட்டன. இதில் 2010/11 தொடரைச் சேர்ந்த 19 இனங்களும், 2009 தொடரைச் சேர்ந்த 22 இனங்களும், SL 2006 தொடரைச் சேர்ந்த 23 இனங்களும் மற்றும் SL 2005 தொடரைச் சேர்ந்த 24 இனங்களும் உள்ளடங்கியிருந்தன.
- சர்க்கரைத் தொழில்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், ஒவ்வொரு தொடரிலிருந்தும் (Series) தெரிவு செய்யப்பட்ட கரும்புத் தாவரங்களின் (Clones) அவதானிப்பு நிலப்பகுதிகளைத் (Observation plots) தொழிற்சாலை இடமமர்வுத் தளங்களில் நிறுவி பராமரித்தல்.
- இறக்குமதி செய்யப்பட்ட இனங்களிலிருந்து (Imported varieties) தெரிவு செய்யப்பட்ட கரும்புத் தாவரங்கள் (Clones), மேலதிக அவதானிப்புகள் மற்றும் அடுத்தகட்ட தீர்மானங்களை எடுப்பதற்காகத் தொழிற்சாலை இடமமர்வுத் தளங்களில் (Industry sites) பராமரிக்கப்பட்டன.
- கரும்பு மரபணுத் தொகுப்பிலுள்ள (Germplasm) சுமார் 470 கரும்பு இனங்கள் நுண்-முறை பெருக்கத்திற்கு (Mericlonning) உட்படுத்தப்பட்டதுடன், தூய்மையான விதைப் உற்பத்திக்காக 1,600 இளம் நாற்றுகள் (Plantlets) உருவாக்கப்பட்டுள்ளன.
- சீனா மற்றும் வியட்நாமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 52 கரும்பு இனங்களின் மூலக்கூற்றுப் பண்பாக்க (Molecular Characterization) நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- ஐந்து கரும்பு இனங்களிலிருந்து கேலஸ் தாவரங்கள் (Calli clones) உருவாக்குவது பூர்த்தி செய்யப்பட்டதுடன், PEG பரிகாரங்கள் (PEG treatments) மூலம் வரட்சிக்கான எதிர்ப்புத் திறனைப் பகுப்பாய்வு செய்யவும் மற்றும் தெரிவுத் திட்டத்தில் உயர்தரமான தாவரங்களைத் தெரிவு செய்யவும் மொத்தம் 3,063 இளம் நாற்றுகள் (Plantlets) உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- முளைப்பதற்கு முந்தைய நிலையில் (Pre-emergent stage), குறிப்பாக அகன்ற இலைகளைக் கொண்ட களைகள் மற்றும் கோரைப்புற்களைக் (Sedges) கட்டுப்படுத்துவதற்கு Sulfentrazone 50% SC எனும் புதிய களைநாசினி வினைத்திறன் மிக்கது என அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ட்ரோன் (Drone) இயந்திரங்களைப் பயன்படுத்தி முளைப்பதற்கு முந்தைய களைநாசினிகளைத் தெளிப்பதற்கான மிகச்சிறந்த அளவுருக்களை (Parameters) அடையாளம் காணுதல்.
- SL 96 128 கரும்பு இனத்தின் அறுவடை தாமதமாவதால் சர்க்கரையின் தரத்தில் ஏற்படும் பாதிப்புகளை அடையாளம் காணுதல்.
- கல்-ஓயா பிளான்டேஷன் பிஎல்சி (Gal-Oya Plantation PLC) நிறுவனத்தில் வணிக ரீதியாகப் பயிரிடப்படும் கரும்பு இனங்களின் முதிர்ச்சி முறைகளை (Maturity patterns) அடையாளம் காணுதல்.
- வழக்கமான நடுகை முறையுடன் (Standard planting method) ஒப்பிடும்போது, இரட்டை வரிசை நடுகை முறையின் (Dual row planting system) கீழும் SL 96 128 கரும்பு இனம் சமமான விளைச்சலைத் தருகின்றது என அடையாளம் காணப்பட்டுள்ளது.
- பரிந்துரைக்கப்பட்ட முகாமைத்துவ நடைமுறைகளின் கீழ், சேதனக் கரும்புச் செய்கையில் (Organic sugarcane cultivation) ஆரம்பப் பயிர்ச் செய்கையிலிருந்து (Plant crop) இரண்டாவது மறுதாம்புப் பயிர்

(Ratoon 2) வரை கரும்பு விளைச்சலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படவில்லை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த மண் ஆய்வு, பகுப்பாய்வு, விளைச்சல் மதிப்பீடு மற்றும் டிஜிட்டல் வரைபடமாக்கல் (Digital Mapping) ஊடாக செவனகல (Sevanagala) நாற்றுமேடைப் பகுதிக்கான GIS அடிப்படையிலான மண் மற்றும் நாற்றுமேடை முகாமைத்துவ முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.
- வணிக ரீதியான கரும்புச் செய்கைக்கான பொருத்தமான சேதன அடிப்படையிலான (Organic-based) தாவர போசணை ஆய்வின் கீழ், மூன்றாவது மறுதாம்புப் பயிரின் (3rd ratoon crop) களப் பரீட்சார்த்தப் பராமரிப்பு, தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- SL 96 128 மற்றும் Co 0775 கரும்பு இனங்களில் நீண்டகால உரப் பயன்பாட்டுத் தாக்கங்கள் (Long-term fertilizer effect) குறித்த களப் பரீட்சார்த்தப் பராமரிப்பு மற்றும் அறுவடை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- கரும்பு ஆலை கொதிகலன் சாம்பலில் (Boiler ash) இருந்து தயாரிக்கப்பட்ட நைதரசன் செறிவூட்டப்பட்ட கார்பன் உரத்தின் (Nitrogen-enriched carbon fertilizer) போசணை வெளியீட்டுப் பகுப்பாய்வு, உர உற்பத்தி, பரீட்சார்த்தத் தாபிப்பு, பராமரிப்பு மற்றும் இலை மாதிரி சேகரிப்பு உள்ளிட்ட சாடி மற்றும் கள மட்டத்திலான மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- கரும்புச் சக்கை (Bagasse) அடிப்படையிலான கொதிகலன் சாம்பலை மண்ணை வளப்படுத்தும் ஊக்கியாகப் (Soil Amendment) பயன்படுத்துவது தொடர்பான பயிர் போசணை ஆலோசனைக் சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- நுண்ணூட்டச் சத்து உரமான துத்தநாக சல்பேட்டை (Zinc Sulphate - $ZnSO_4$) பயன்படுத்துவது தொடர்பான பயிர் போசணை ஆலோசனைக் சுற்றறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- எத்திமலே பிளான்டேஷன்ஸ் (Ethimale Plantations) நிறுவனத்தின் வத்தேகம பகுதியில் மண் இரசாயனப் பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டு டிஜிட்டல் மண் வரைபடங்கள் (Digital Soil Maps) உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாற்றுமேடை மற்றும் வணிக ரீதியான கரும்புச் செய்கைக்கான இடைக்கால மண் போசணை மதிப்பீடுகள் மற்றும் உரப் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- கல்-ஓயா பிளான்டேஷன் (Gal-Oya Plantation) நிறுவனத்தின் ஹிங்குராணை - மேற்கு வலயம், தீகவாபி வலயம், கல்மடுவ வலயம், வாரிப்பத்தஞ்சேனை மற்றும் நீத்தா வலயத்தின் ஒரு பகுதி ஆகியவற்றில் கள மட்டத்திலான மண் ஆய்வுகள் (Soil Survey) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
- கரும்புத் தண்டுத் துளைப்பானைக் (Internode borer) கட்டுப்படுத்துவதற்காக எரியந்தஸ் (Erianthus - காட்டு கரும்பு) தாவரத்தைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வின் மூலம், 'IND 8180' எனும் எரியந்தஸ் இனம் இப்புழுவினால் அதிகம் பாதிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இது ஒரு கவர்ச்சிப் பயிராக (Trap crop) பரிந்துரைக்கப்படுவதுடன், 'MOL 4503' எனும் இனம் இப்புழுவிற்கு எதிராக அதிக எதிர்ப்புத் திறனைக் கொண்டிருப்பதால், எதிர்ப்புத் திறன் கொண்ட கரும்பு இனங்களை உருவாக்குவதற்கான இனப்பெருக்க நடவடிக்கைகளில் ஒரு பெற்றோர் தாவரமாக (Parental line) பரிந்துரைக்கப்படுகிறது.
- கரும்புத் தண்டுத் துளைப்பானின் (Internode Borer - INB) பாதிப்பு கரும்பின் வளர்ச்சி, விளைச்சல் மற்றும் சாற்றின் தரக் காரணிகளில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த ஆய்வின் மூலம், இப்புழுக்களின் தொற்று கரும்பின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் சாற்றின் தரத்தையும் கணிசமாகக் குறைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- கரும்புத் தண்டுத் துளைப்பான் (INB) மற்றும் வெண்இலை நோயைப் (WLD) பரப்பும் பூச்சிகளைக் (Vector) கட்டுப்படுத்துவதற்கு B. bassiana எனும் பூச்சி நோய்க்காரணி பூஞ்சைக்காளான் (Entomopathogenic fungi) ஒரு வெற்றிகரமான உத்தியாகும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கறையான்கள் மற்றும் வெண்இலை நோயைப் (WLD) பரப்பும் ஒரு கடத்தியான இளஞ்சிவப்பு மாவுப்பூச்சிகளைக் (Pink mealy bug) கட்டுப்படுத்துவதற்கு Metarhizium எனும் பூச்சி நோய்க்காரணி பூஞ்சைக்காளான் (Entomopathogenic fungi) ஒரு வெற்றிகரமான உத்தியாகும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கரும்பு நடுகையின் போது கறையான் (Termite) பாதிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு, பூச்சிக்கொல்லித் தன்மை கொண்ட தாவர இலைகளைப் (Pesticidal plant leaves) பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பெலட் (Pellet) வடிவிலான கலவை ஒரு வெற்றிகரமான முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- செயலாக்கத் தொழில்நுட்பப் (Processing Technology - PT) பிரிவின் ஒத்துழைப்புடன், எலுமிச்சைப் புல் (Lemongrass) மற்றும் கரும்புச் சக்கையைப் (Bagasse) பயன்படுத்தி நுளம்பு விரட்டித் திரியொன்று (Incense stick) வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளது.
- இளம் கரும்புச் செய்கையில் தண்டுத் துளைப்பான்களைக் (Moth borer) கட்டுப்படுத்துவதற்கு நுரடிழசநடடயை இனத்தைச் சேர்ந்த பூச்சிகள் (Euborellia spp.) ஒரு வினைத்திறன் மிக்க இரைகௌவி (Predator) என்பது கள மட்டத்திலான ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- கரும்புப் பீடை முகாமைத்துவத்திற்காக இரசாயனமற்ற உத்திகளை உருவாக்குதல்: இதன்படி, நீர் சார்ந்த சாற்றுடன் (Aqueous extract) ஒப்பிடுகையில், புகையிலை இலை மற்றும் விதை நொதித்தல் சாறானது (Fermented leaf and seed extract), கரும்புப் பஞ்சு அசுவினிகளைக் (Sugarcane woolly aphid) கட்டுப்படுத்துவதில் கணிசமான உயர் வினைத்திறனைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.
- 21 வணிக ரீதியான கரும்பு இனங்களுக்கிடையே வெண்இலை நோய்க்கான (WLD) மாறுபட்ட தன்மைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் SL 04 624 இனம் இந்நோய்த்தாக்கத்தின் கீழ் அதிக மாறுபாட்டைக் காட்டியதுடன், SL 00 603 மற்றும் SLI 121 ஆகிய இனங்கள் மிகக் குறைந்த மாறுபாட்டை (அதிக எதிர்ப்புத் திறன்) வெளிப்படுத்தின.
- சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் (SRI) ஆய்வுகளின் படி, SL 2015 மற்றும் SL 2016 தொடர்களைச் சேர்ந்த கரும்பு இனங்களுக்கு கரிப்பூட்டை நோய் (Smut) மற்றும் இலைக்கருகல் நோய்க்கு (LSD) எதிரான எதிர்ப்புத் திறனை அடையாளம் காண்பதற்கான நோய் பரிசோதனைகள் (Disease Screening) முன்னெடுக்கப்பட்டன. அத்துடன், SL 2012, 2013 மற்றும் 2014 தொடர்களுக்கான வெண்இலை நோய் (WLD) பரிசோதனைகளும், உடவலவ ஆராய்ச்சி நிலையத்தின் சுலுவு 2013 களப் பரீட்சார்த்தத்தின் கீழான நோய் பரிசோதனைகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- தரப்படுத்தப்பட்ட கரும்பு இனங்களில் நோய் பரவல் குறித்த ஆய்வின் போது, SL 00 652, SL 96 128, SL 7103, SL 89 1673 மற்றும் SL 95 4033 ஆகிய இனங்களில் வெண்இலை நோயின் (WLD) தாக்கம் அதிகமாக (20மூ இற்கும் மேல்) காணப்பட்டது. SL 98 2524, SL 90 6237, SL 83 06 மற்றும் SLI 121 ஆகிய இனங்களில் நடுத்தர அளவிலான நோய் பாதிப்புகள் காணப்பட்ட அதேவேளை, SL 00 95, SL 86 13, SL 92 4997, SL 95 4430, SL 00 603, SL 92 5588, SL 71 30, SL 96 328, SL 88 116, SL 00 354, SL 04 624 மற்றும் SL 95 4443 ஆகிய இனங்களில் நோய் பாதிப்புகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

- கரும்புச் சாற்றை அடிப்படையாகக் கொண்ட வைன் (Wine) தயாரிப்பிற்கான சூத்திரவாக்கம் (Formulation) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- உயர்தர மதுசார (Alcohol) உற்பத்திக்காக 22 ஈஸ்ட் இனங்கள் (Yeast strains) பிரித்தெடுக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. அவற்றுள் அதிகப்பட்ச மதுசார விளைச்சலாக 7.37 ± 0.06% பதிவாகியுள்ளது.
- கரும்புச் சாற்றைப் பாதுகாப்பதற்கான (Preservation) தொழில்நுட்ப முறைகளை அடையாளம் காணுதல்.
- புதினா (Mint) சுவையூட்டப்பட்ட கரும்பு வெல்லம் (Jaggery) உருவாக்கப்பட்டதுடன், அதன் பௌதிக-இரசாயனப் பண்புகள் (Physiochemical characteristics) பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.
- பேக்கரி தயாரிப்புகளுக்காக கரும்புச் சக்கை (Bagasse) கலந்த மாவை (Flour formulation) உருவாக்குவதற்கான ஆரம்பக் கட்ட ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
- சேதனப் பயிர்ச்செய்கை முறைகள் (Organic cultivation) உயர்தர கரும்பு வெல்ல (Jaggery) உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த ஆய்விற்கான களப் பரீட்சார்த்தம் (Field trial) நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டது.
- கரும்பு வெல்ல (Jaggery) உற்பத்திக்காகக் கரும்புச் செய்கை நிலமொன்று நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டது.
- செவனகல (Sevanagala) கரும்புச் செய்கை நிலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட மண் மற்றும் வேர் மாதிரிகளில் இருந்து நைதரசன் நிலைப்படுத்தும் (Nitrogen-fixing) மற்றும் பொஸ்பரஸ் கரைக்கும் (Phosphorus solubilising) பக்றீரியாக்கள் பிரித்தெடுக்கப்பட்டு, அவற்றின் உயிர்-இரசாயனப் பண்பாக்கங்கள் (Biochemical characterisation) முன்னெடுக்கப்பட்டன.
- SL 96 128, SL 03 983 மற்றும் SL 03 354 ஆகிய கரும்பு இனங்களின் அறுவடைக்குப் பிந்தைய தரம் குறைதல் (Post-harvest deterioration) குறித்த ஆரம்பக் கட்ட ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.
- SL 96 128 கரும்பு இனத்தின் தண்டுப் பகுதியின் வெவ்வேறு துண்டுகளில், அறுவடைக்குப் பிந்தைய மொத்தக் கரையக்கூடிய திண்மங்களின் (Brix) மாற்றங்கள் குறித்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.
- கல்-ஓயா பிளான்டேஷன்ஸ் (Gal-Oya Plantations) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட சேதனப் பெலட் உரங்களை (Organic pellets) இடுவதற்காக, நான்கு சக்கர டிராக்டரில் பொருத்தப்பட்ட பெலட் உரமிடும் கருவியின் (Pellet fertilizer applicator) கள மட்டத்திலான மதிப்பீடுகள் முன்னெடுக்கப்பட்டன.
- பெல்வத்தை மற்றும் செவனகல லங்கா சுகர் கம்பனி லிமிடெட் (Lanka Sugar Company Limited) நிறுவனத்தில் தற்போதுள்ள சுடுநீர் சுத்திகரிப்பு (Hot Water Treatment - HWT) நிலையத்தின் துல்லியம் மற்றும் முறையான செயல்பாட்டை உறுதி செய்வதற்காகத் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டு விலைகளின் அடிப்படையில் கரும்புச் செய்கையின் செலவினங்கள் மற்றும் வருமானங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, ஒரு ஹெக்டயருக்கான சராசரிச் செய்கைச் செலவானது செவனகல (Sevanagala) நீர்ப்பாசன மற்றும் மானாவாரிப் பிரிவுகளுக்கு முறையே ஷரூபா 777,463 மற்றும் ரூபா 600,455 ஆகவும், பெல்வத்தைக்கு (Pelwatte) ரூபா 435,466 ஆகவும், ஹிங்குராணைக்கு (Hingurana) ரூபா 568,673 ஆகவும் மற்றும் எத்திமலேக்கு (Ethimale) ரூபா 388,303 ஆகவும் காணப்பட்டது. செவனகலையில் ஒரு ஹெக்டயருக்கான வருடமொன்றிற்கான சராசரி நிகர வருமானம் முறையே நீர்ப்பாசன மற்றும் மானாவாரிப் பிரிவுகளின் கீழ் ரூபா 230,037 மற்றும் ரூபா 107,045 ஆகக் காணப்பட்டது. பெல்வத்தையில் மானாவாரியின் கீழும், ஹிங்குராணையில் நீர்ப்பாசனத்தின் கீழும் முறையே ரூபா 94,534 மற்றும் ரூபா 171,327 நிகர வருமானம் பெறப்பட்டதுடன், எத்திமலே மானாவாரியின் கீழ் ரூபா 111,697 ஆகவும் காணப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டில் செவனகல, பெல்வத்தை, கல்-ஓயா மற்றும் எத்திமலே சர்க்கரைத் தொழிற்சாலைகளில் ஒரு தொன் கரும்பின் வர்த்தக மதிப்பு முறையே ரூபா 41,189, ரூபா 39,682, ரூபா 36,553 மற்றும் ரூபா 40,617 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய, 2024 இல் ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட கரும்பின் வர்த்தக மதிப்பானது செவனகல நீர்ப்பாசனப் பிரிவில் 4.1 மில்லியனாகவும், பெல்வத்தை மானாவாரிப் பிரிவில் 1.9 மில்லியனாகவும், கல்-ஓயாவில் 1.9 மில்லியனாகவும் மற்றும் எத்திமலேவில் 2.03 மில்லியனாகவும் காணப்பட்டது. இது ஏனைய போட்டிப் பயிர்களின் (Competitive crops) வருமானத்தை விட மிக அதிகமாகும்.

- 2024 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 583,000 தொன் எனவும் அதன் மதிப்பு ரூபா 117 பில்லியன் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில்துறையின் மொத்த மதிப்பு ஷரூபா 31 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 0.12% ஆகும்.

- சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் (SRI) ஆராய்ச்சிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ள விளக்கக்காட்சி (Demonstration) மற்றும் விதைப் பெருக்க நிலப்பகுதிகள் (Multiplication plots) பராமரிக்கப்பட்டன.

- கந்தளாய; (Kantale) உப நிலையத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விதைப் பெருக்க நிலப்பகுதிகளின் (Multiplication plots) பராமரிப்பு மற்றும் அன்றாட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில், தொழில்நுட்பப் பரிமாற்ற மற்றும் விரிவாக்கல் (TTD) பிரிவானது ஆராய்ச்சிப் பிரிவுகளின் உதவியுடன், விவசாயிகள் மற்றும் சர்க்கரைத் தொழில்துறை பணியாளர்களுக்காக கரும்புச் செய்கை, பதப்படுத்துதல் மற்றும் அது சார்ந்த விடயங்கள் குறித்து 13 பயிற்சி / விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்து நடத்தியது. இதில் மொத்தம் 573 பேர் கலந்துகொண்டனர். அத்துடன், சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தின் (SRI) பல்வேறு பங்குதாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஆராய்ச்சிப் பிரிவுகளுடன் இணைந்து 23 பயிற்சிகள், கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் மாணவர்கள், முயற்சியாளர்கள் உட்பட மொத்தம் 666 பேர் கலந்துகொண்டனர்.

| 3. | உருவாக்கப்பட்ட மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை | 32691 | 33531 | 33561 | 34431 | 35531 | 36631 | 100 |
| 4 | உருவாக்கப்பட்ட புதிய மொத்த தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை | 264 | 800 | 1134 | 1300 | 1400 | 1500 | 142 |
| 5 | தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக வசதிகளை வழங்கிய கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை (தரச் சான்றிதழுக்கு) | 1604 | 1556 | 363 | 1815 | 2068 | 2321 | 23 |
| 6 | தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை (திறன்∴ இயலளவு∴ தொழில்நுட்பம்) | 3606 | 2489 | 1635 | 2609 | 2755 | 2901 | 66 |
| 7 | நிதியுதவி வழங்கப்பட்ட கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை (கடன் முன்மொழிவு முறையின் ஊடாக) | 5480 | 5981 | 6381 | 6938 | 7388 | 7838 | 107 |
| 8 | புதிய ரத்தின வைப்புகளின் ஆய்வு (அளவு) | 3 | 3 | 3 | 4 | 5 | 5 | 100 |
| 9 | ரத்தினங்கள் மற்றும் நகைகள் துறையில் புதிய ஆராய்ச்சி (அளவு) | 9 | 15 | 12 | 16 | 17 | 18 | 80 |

# அத்தியாயம் 05

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயலாற்றுகை

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் தொடர்பான செயலாற்றுகை

**5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக “**

| இலக்குÆ நோக்கங்கள் | குறிக்கோள்கள் | பெறுபேற்றின் காட்டிகள் | இன்றைய திகதியில் முன்னேற்றம் 2025 | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| **இலக்கு 9:** கைத்தொழிற்துறை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு – உறுதியான கட்டமைப்பைக் கட்டியெழுப்பல், உள்ளார்ந்த மற்றும் நிலைபேறான கைத்தொழில்மயமாக் கத்தை ஊக்குவித்தல் மற்றும் பதிலீடான புத்தாக்கம். | 9.2 உள்ளீர்த்தல் மற்றும் நிலைபேறான கைத்தொழிற்துறையின ரை ஊக்குவித்தல் மற்றும் கைத்தொழில் பிரிவின் தொழில் அளவு மற்றும் தேறிய தேசிய உற்பத்திக்கு வழங்கும் பங்களிப்பு என்பவற்றை 2030இல் குறைந்தபட்சம் 50மூ வீதத்தினால் அதிகரித்தல். | 9.2.1 மொத்த உள்;ர் உற்பத்தி மற்றும் தலா வருமானத்தின் விகிதாசாரத்திற்கு அமைவாக பெறுமதி சேர்த்தல் தயாரிப்பு | | | |
| | | • வணிக தயாரிப்புகளை ஆரம்பித்த கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை (கைத்தொழில் பேட்டைகள்) | | | 76 |
| | | • தர மேம்படுத்தல்Æ தரச் சான்றுபடுத்தல் தொடர்பாக உதவி வழங்கப்பட்ட தயாரிப்பு கைத்தொழிற்சாலைகளின் எண்ணிகை | 23 | | |
| | | தொழில்துறை பொருட்கள் ஏற்றுமதியில் 4மூ சதவீதமாக ரத்தினங்கள் மற்றும் நகைகளின் ஏற்றுமதி மதிப்பை பராமரித்தல் | | | 75 |
| | | 9.2.2 தொழில், வயது மற்றும் ஆண் பெண் தன்மைக்கேற்ற தயாரிப்பு தொழில்வாய்ப்புகள் மொத்த தொழில்வாய்ப்பின் விகிதத்தில். | | | |
| | | தொழில், வயது மற்றும் ஆண் பெண் தன்மைக்கேற்ற புதிதாக உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புகள் (கைத்தொழில் பேட்டை) | | | 142 |

| இலக்குÆ நோக்கங்கள் | குறிக்கோள்கள் | பெறுபேற்றின் காட்டிகள் | இன்றைய திகதியில் முன்னேற்றம் 2025 | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| | 9.3 விசேடமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சிறிய அளவு கைத்தொழில் மற்றும் வியபாரங்களுக்கு கிடைக்கும் நிதி வசதிகள் மற்றும் சந்தைகளுக்கு நுழைவதற்கான சந்தரப்பங்களை மேம்படுத்துதல் ஊடாக அந்த தொழில்முயற்சியாளர்களிள் பெறுமதியை பெறுமதி சேர் சங்கிலியில் மற்றும் சந்தைச் சங்கிலியில் ஒருங்கிணைத்தல். | 9.3.2 கடன் அல்லது கடன் கோட்டுடன் மேம்படுத்தப்பட்ட சிறியளவிலான கைத்தொழில்களின் விகிதம் | | | |
| | | • கடன் யோசனைத் திட்டத்தின் ஊடாக நிதியுதவி வழங்கப்படும் கைத்தொழில்.'. தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை | | | 107 |
| | 9.5 அறிவியல் ஆராய்ச்சியை மேம்படுத்தவும | 9.5.1. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செலவுகள் | | | |
| | | • இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையில் புதிய ஆராய்ச்சி | | | 80 |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் என்பவற்றை சுருக்கமாக விளக்குக:.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் தொடர்பாக அத்தியாயம் 5.1இ இலக்கு 9.2 இ9.3 மற்றும் 9.5 என்பவற்றில் நியாயமானளவில் விளக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 06

## மனிதவள விபரங்கள்

## 6.1. பதவியணி முகாமைத்துவம்

**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடங்கள் Æ (மிகை) ழூழூ |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 73 | 58 | 15 |
| மூன்றாம் நிலை | 6 | 4 | 2 |
| இரண்டாம் நிலை | 859 | 756 | 103 |
| ஆரம்ப நிலை | 126 | 91 | 35 |
| செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |

### 6.2 நிறுவனத்தின் செயாலற்றுகையை மனிதவளத்தின் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.

பதவி வெற்றிடங்களை பூர்த்திசெய்வதற்கு பொது நிர்வாக ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 6.3. மனிதவள அபிவிருத்தி

## உள்;ர் பயிற்சி நிகழ்ச்சிகள் - 2025

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | முழுமையான முதலீடு (ரூபா) | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய கொள்வனவு வழிகாட்டல்கள் | 9 | 2025.02.13 & 2025.06.12 | 112,500 .00 | உள்நாட்டு | புதிய கொள்வனவு வழிகாட்டல்கள் 2024 இன் நோக்கங்கள் மற்றும் நோக்கெல்லை, பொதுக் கொள்வனவு ஒழுக்கநெறிகள், கொள்வனவு ஆளுகை, கொள்வனவு முறைகள் மற்றும் ஏலங்களை அழைக்கும் நடைமுறைகள், கொள்வனவுத் திட்டங்கள் மற்றும் கொள்வனவு ஆவணங்கள், ஏலங்கள் திறப்புக்குழுக்கள், மதிப்பீட்டுக் குழுக்கள், கொள்வனவுக் குழுக்கள் மற்றும் ஏற்புக்குழுக்கள், ஒப்பந்தம் வழங்கல் மற்றும் ஒப்பந்த மேலாண்மை, அவசரக் கொள்வனவுகள் |
| 2 | அலுவலக உதவியாளர்களுக்கான உணவு பரிமாறும் ஒழுங்குமுறைகள் குறித்த பயிற்சித் திட்டம் | 50 | 2025.02.28 | 81,050 .00 | உள்நாட்டு | நிபுணத்துவ வரவேற்பு ஒழுங்குமுறைகள், பானங்கள் பரிமாறல், தரமான உணவு பரிமாறும் முறைகள், சுத்தம் மற்றும் சுகாதாரம், உபகரணங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு, வாடிக்கையாளர் சேவை ஒழுங்குமுறைகள் |
| 3 | அரச ஊழியர்களுக்கான சம்பள ஏற்பாடுகள் குறித்த பணிமனை | 2 | 2025.03.06 | 15,000 .00 | உள்நாட்டு | அரச சேவையின் சம்பள மற்றும் கொடுப்பனவு கட்டமைப்பு, சம்பளம் தொடர்பான நிறுவனக் கோவையின் விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள், சம்பளச் செயல்முறை தொடர்பான நிறுவன ரீதியான விடயங்கள், சம்பள ஏற்றங்களை வழங்குதல் மற்றும் மறுத்தல், தகைமை காண் தடைகள் / சம்பளமற்ற விடுமுறை மற்றும் சம்பள ஏற்றங்கள், சம்பள ஏற்ற நன்மைகள், பதவி உயர்வின் போதான சம்பளம், செயல்திறன் ஊதியம் மற்றும் கடமை கொடுப்பனவுகள். |
| 4 | அரச வாகனப் பராமரிப்பு | 2 | 2025.03.25 | 13,000 .00 | உள்நாட்டு | அரச வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகளைப் பதிவு செய்தல், வாகனங்களை முறையாகப் பயன்படுத்துதல், பராமரிப்பு, உதிரிப்பாகங்கள் கொள்வனவு செய்தல், சேதங்கள் மற்றும் இழப்புகளைக் கையாளுதல் மற்றும் துஷ்பிரயோகம் |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர்க ளின் எண்ணிக் கை | நிகழ்ச்சித்த ிட்டத்தின் காலவெல் லை (தினங்கள்) | முழுமை மயான முதலீடு (ரூபா) | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 5 | சாரதிகளுக்கான பயிற்சித் திட்டம் | 40 | 2025.03.27 | 84,550 .00 | உள்நாட்டு | சாரதிகளின் அடிப்படைப் பங்கு மற்றும் பொறுப்புக்கள், விபத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள், விபத்தின் பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், நிதிக் கட்டளைகள் (F.R.) 103, 104 பரிசோதனைகள் குறித்த விழிப்புணர்வு, கடமைகளுக்காக கூகுள் மெப்ஸ் (Google Maps) போன்ற நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவது பற்றிய அறிவு |
| 6 | இலங்கைக்கான பசுமை அபிவிருத்தி குறித்த பயிற்சி நெறி | 1 | 2025.07.16 - 2025.07.25 | - | உள்நாட்டு | பசுமை மற்றும் குறைந்த கார்பன் அபிவிருத்தி, காலநிலை மாற்றத்திற்கான பதில் நடவடிக்கைகள் மற்றும் ESG (Environmental, Social, and Governance) வெளிப்படுத்தல் ஆகியவற்றில் உலகளாவிய மற்றும் சீன அணுகுமுறைகளைப் புரிந்துகொள்ளுதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாற்றங்கள், ஒளிமின்னழுத்த (Photovoltaic) தொழில் துறை வளர்ச்சி மற்றும் வளிமண்டல மாசுக்கட்டுப்பாடு ஆகியவற்றை முன்னிலைப்படுத்துதல். அத்துடன் இது சுற்றுச் சூழல் திட்டமிடல், காலநிலை பாதிப்பு மதிப்பீடு, நீர் மாசு மேலாண்மை மற்றும் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துடன் ஒருங்கிணைந்த பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கிய கருவிகளையும் உள்ளடக்கியது. மேலதிகமாக, கடல்சார் பகுதி மேலாண்மை, கடல்சார் போக்குவரத்து மற்றும் கடலோர எரிசக்தி மேம்பாடு, சியாமெனின் (Xiamen) ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை அனுபவங்கள் மற்றும் "நீல உணவு" (Blue food) மற்றும் நிலையான நீர்வாழ் உயிரின வளர்ப்பின் வளர்ந்து வரும் போக்குகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கியதுடன், ஒருங்கிணைந்த கொள்கைகள், புத்தாக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த மேலாண்மை எவ்வாறு நெகிழ்வான மற்றும் நிலையான அபிவிருத்தியை மேம்படுத்தலாம் என்பதையும் விளக்கியது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | முழுமையான முதலீடு (ரூபா) | நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 7 | வேலை நடைமுறைகளை எளிமையாக்குதல் தொடர்பான பயிற்சித் திட்டம் I | 80 | 2025.08.18 | 21,025.00 | உள்நாட்டு | வேலை நடைமுறை எளிமையாக்கல் செயல்முறை |
| 8 | இரசாயன அச்சுறுத்தல்களைத் தணித்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 4 | 2025.08.28 | - | உள்நாட்டு | இலங்கையில் இரசாயனப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய அதிகார சபையின் பங்கு, வீட்டு உபயோக இரசாயனங்களின் பாதுகாப்பான பயன்பாடு மற்றும் இரசாயன அச்சுறுத்தல்களைத் தணித்தல் |
| 9 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வுப் பயிற்சித் திட்டம் | 100 | 2025.08.29 | 44,510.00 | உள்நாட்டு | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் தகவல் வழங்கும் நடைமுறை குறித்த விழிப்புணர்வு. |
| 10 | திட்ட முகாமைத்துவம் | 1 | 2025.08.22,28 & 2025.09.03,10, 17 | 20,000.00 | உள்நாட்டு | திட்டக் கருத்துருவாக்கம், திட்டமிடல் மற்றும் திட்ட முன்மொழிவுகளைத் தயாரிப்பதற்கான அறிவும் திறன்களும், திட்டச் செயல்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள். |
| 11 | வேலை நடைமுறைகளை எளிமையாக்குதல் தொடர்பான பயிற்சித் திட்டம் II | 70 | 2025.09.03 | 26,150.00 | உள்நாட்டு | வேலை நடைமுறை எளிமையாக்கல் செயல்முறை |
| 12 | அரசுத் துறையில் தகவல் தொழில்நுட்பம் (IT) சார்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்தல் | 1 | 2025.09.10 & 11 | 10,000.00 | உள்நாட்டு | IT கொள்வனவுக்கான அறிமுகம், தரப்படுத்தப்பட்ட ஏல ஆவணங்கள் (SBD), வன்பொருள் மற்றும் மென்பொருள் கொள்வனவு, செலவு கூறுகள், மதிப்பீட்டு முறைகள் மற்றும் அரச துறையின் உண்மை நிலவரங்கள் குறித்த நடைமுறைகள் |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | முழுமையான முதலீடு (ரூபா) | நிகழ்ச்சித்த ிட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 13 | அரச உத்தியோகத்தர்களுக்கான களஞ்சியசாலை முகாமைத்துவம் | 1 | 2025.10.03 | 6,500.00 | உள்நாட்டு | களஞ்சியசாலை முகாமைத்துவம் மற்றும் உற்பத்தித்திறன் கருவிகளின் பயன்பாடு, களஞ்சியசாலை மேலாளர்களின் பங்கு, களஞ்சியசாலை இருப்புப் பொருள் ஆய்வு நடைமுறை |
| 14 | மேம்படுத்தப்பட்ட எக்செல் (Advanced Excel) குறித்த பணிமனை | 30 | 2025.10.16 & 17 | 390,000.00 | உள்நாட்டு | எக்செல் (Excel) மற்றும் அதன் செயல்பாடுகளின் பயன்பாடு |
| 15 | பணியிட செயல்திறனுக்காக செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளை ஏற்றுக்கொள்வது குறித்த பணிமனை | 20 | 2025.10.28 | 140,000.00 | உள்நாட்டு | அலுவலக வேலைகளை எளிமையாக்க செயற்கை நுண்ணறிவு (AI) கருவிகளின் பயன்பாடு |
| 16 | ஆங்கில மொழியில் பட்டயப் படிப்பு | 1 | One Year | 92,000.00 | உள்நாட்டு | சேவை தேவையை நிறைவு செய்தல் |

## நேரடி வெளிநாட்டு பயிற்சி மற்றும் விஜயம் - 2025

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | டைம்ஸ் குழுமத்தின் (Times Group) 9-வது எட்நவ் (ETNOW) உலகளாவிய வணிக உச்சி மாநாடு. | 2 | 13.02. 2025 | 16.02. 2025 | - | வெளிநாடு | கௌரவ அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 2 | சர்வதேச மத்தியஸ்த அமைப்பை (IOMed) நிறுவுவதற்கான உடன்படிக்கையில் கையெழுத்திடும் விழா | 2 | 29.05. 2025 | 31.05. 2025 | 60,124.00 | வெளிநாடு | கௌரவ அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 3 | உலகப் பொருளாதார மன்றத்தின் 16 -வது புதிய வெற்றியாளர்களின் வருடாந்தரக் கூட்டம் 2025 | 1 | 22.06. 2025 | 27.06. 2025 | 812,006.87 | வெளிநாடு | கௌரவ அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 4 | கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிபுணர்களுக்கான ”கடந்த காலத்தைக் கையாளுதல்” குறித்த உரையாடல்கள் | 1 | 12.05. 2025 | 21.05. 2025 | - | வெளிநாடு | கௌரவ பிரதி அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 5 | ஆஸ்திரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தகத் துறையின் (DFAT) சிறப்பு விஜயத் திட்டம் | 1 | 21.06. 2025 | 29.06. 2025 | 115,581.02 | வெளிநாடு | கௌரவ பிரதி அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 6 | தெற்காசியா மற்றும் தென்கிழக்காசிய வணிக மேம்பாட்டு ஒத்துழைப்பு மாநாடு | 1 | 08.09. 2025 | 13.09. 2025 | 51,812.02 | வெளிநாடு | கௌரவ பிரதி அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |
| 7 | இலங்கை வணிக மாநாடு மற்றும் வலையமைப்பு அமர்வு | 1 | 25.09. 2025 | 29.09. 2025 | 885,394.58 | வெளிநாடு | கௌரவ பிரதி அமைச்சரின் உத்தியோகபூர்வ விஜயம் |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ருபா) உள்;ர; / வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 07-வது ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் அங்கீகார அமைப்பு (APO-AB) பேரவைக் கூட்டம் | 1 | 09.02. 2025 | 12.02. 2025 | 51,943 .07 | வெளிநாடு | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) இலங்கைக்கான பணிப்பாளராகப் பங்கேற்றேன் |
| 9 | தேசிய உற்பத்தித்திறன் அமைப்புகளுக்கான (NPOs) நிர்வாகத் தலைமைத்துவத் திட்டம் | 1 | 20.04. 2025 | 27.04. 2025 | 119,732 .00 | வெளிநாடு | உற்பத்தித்திறன் மேம்பாட்டை வழிநடத்தும் மற்றும் நிர்வகிக்கும் திறன் வலுப்படுத்தப்பட்டது் தேசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (NPO) உற்பத்தித்திறன் தலைமைத்துவ அறிவு மேம்படுத்தப்பட்டது் மற்றும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) உறுப்பு நாடுகளுக்கு இடையிலான உற்பத்தித்திறன் வலையமைப்பு (Networking) விரிவாக்கப்பட்டது. |
| 10 | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) 67-வது நிர்வாகக் குழு கூட்டம் | 1 | 19.05. 2025 | 23.05. 2025 | 52,161. 18 | வெளிநாடு | அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் (Budget), கொள்கை, உத்திகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அதன் உறுப்புரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்தினேன். மேலும், முந்தைய நிர்வாகக் குழு கூட்டங்களின் (Governing Body Meetings) தொடர் நடவடிக்கைகளின் முன்னேற்றம் மற்றும் சுயாதீன மதிப்பீட்டு பரிந்துரைகளை (Independent recommendations) நடைமுறைப்படுத்துவது குறித்தும் உறுதி செய்யப்பட்டது |
| 11 | சவூதி அரேபிய சந்தைக்கான வெளிச்செல்லும் வணிகத் தூதுக்குழு | 1 | 12.01. 2025 | 18.01. 2025 | 697,833 .90 | வெளிநாடு | சவூதி அரேபிய சந்தையின் நடத்தை மற்றும் இறுதிச் சந்தையில் நிலவும் தடைகள் (Bottleneck issues) குறித்து அறிந்துகொண்டேன். மேலும், இலங்கை தயாரிப்புகளுக்கான வாய்ப்புகள் மற்றும் அங்குள்ள மேம்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்தும் புரிதலைப் பெற்றேன். |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | நிலையான உணவு முறைகள் குறித்த பயிலரங்கு | 1 | 19.01. 2025 | 24.01. 2025 | 37,907.00 | வெளிநாடு | நிலையான உணவு முறைகளை (Sustainable Food Systems) உருவாக்குவதற்கான முக்கியமான வெற்றிக் காரணிகள் குறித்த மேம்பட்ட புரிதலையும், மற்றவர்களுக்கு அதனைச் செயல்படுத்துவதில் வழிகாட்டும் திறனையும் பெற்றேன். மேலும், பங்கேற்பாளர்களின் பொருளாதாரங்களில் நிலையான உணவு முறைகளை ஏற்றுக்கொள்வது குறித்தும் அறிந்துகொண்டேன். |
| 13 | செவனகல சர்க்கரை ஆலையின் (Sevanagala Sugar) 1-ஆம் இலக்க நீராவி விசையாழியின் (Steam Turbine No. 1) பழுதுபார்க்கும் செயல் முறையை ஆராய்தல். | 1 | 26.01. 2025 | 27.02. 2025 | 222,711.00 | வெளிநாடு | செவனகல சர்க்கரை ஆலையின் (Sevanagala Sugar) 1-ஆம் இலக்க நீராவி விசையாழியைப் (Steam Turbine No. 1) பழுதுபார்க்கும் செயல்முறையை ஆராய்தல். |
| 14 | செவனகல சர்க்கரை ஆலையின் (Sevanagala Sugar) 1-ஆம் இலக்க நீராவி விசையாழியைப் (Steam Turbine No. 1) பழுதுபார்க்கும் செயல்முறையை ஆராய்தல். | 1 | 16.02. 2025 | 27.02. 2025 | 253,308.00 | வெளிநாடு | செவனகல சர்க்கரை ஆலையின் (Sevanagala Sugar) 1-ஆம் இலக்க நீராவி விசையாழியைப் (Steam Turbine No. 1) பழுதுபார்க்கும் செயல்முறையை ஆராய்தல். |
| 15 | நிலையான வளர்ச்சிக்கான கொள்கை நிலப்பரப்பு குறித்த பல்தேசிய கண்காணிப்பு ஆய்வுப் பயணம் | 3 | 25.03. 2025 | 29.03. 2025 | 163,115.95 | வெளிநாடு | கொள்கை தலையீடுகள் (Policy interventions) மற்றும் அமலாக்க உத்திகள் குறித்த அறிவுத் தளத்தை விரிவுபடுத்துதல் மற்றும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) உறுப்பு நாடுகளிடையே காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான கொள்கை கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் ∴ வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி∴ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | யுனிடோ (UNIDO): பிராந்திய மதிப்பீட்டு திறன் மேம்பாட்டுப் பயிலரங்கு | 1 | 05.05. 2025 | 10.05. 2025 | 69,172.17 | வெளிநாடு | யுனிடோவின் (UNIDO - ஐக்கிய நாடுகள் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு) மதிப்பீட்டுக் கொள்கைகள் (Evaluation Principles) குறித்த அறிவைப் பெற்றேன். அத்துடன் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதில் உள்ள அனுபவங்கள் மற்றும் பார்வைகளைப் பரிமாறிக்கொண்டதன் மூலம், தேசிய மதிப்பீட்டுத் திறனை (National Evaluation Capacity) மேம்படுத்துவதற்குப் பங்களிப்பு செய்தேன். |
| 17 | வணிகக் கண்காட்சித் தூதுக்குழு விஜயங்கள்: ஏற்றுமதியாளர்களுக்கான சேவைகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் | 2 | 08.02. 2025 | 16.02. 2025 | 762,146.13 | வெளிநாடு | நாங்கள் 8 சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs) இந்த வெளிநாட்டுப் பயணத்திற்கு (Exposure visit) அழைத்துச் சென்றோம். அதன் மூலம் கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில், அவர்களில் இரண்டு நிறுவனங்கள் ஜெர்மனியில் நடைபெற்ற அனுகா (Anuga) 2025 கண்காட்சியில் காட்சிப்படுத்துநர்களாகப் (Exhibitors) பங்கேற்றன. ஒரு நிறுவனம் பயோ∴பாச் (BIOFACH) 2026 கண்காட்சியில் பங்கேற்கவுள்ளது. மற்றொரு நிறுவனம் ஐ∴போம் (IFOAM) அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. ஏனைய நிறுவனங்கள் தயாரிப்பு மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடுகள் (Compliances) போன்ற ஐரோப்பிய சந்தை நுழைவுக்கான முன்னேற்பாடுகளைச் செய்து வருகின்றன. இந்தப் பயிற்சியின் மூலம், இலங்கை ஏற்றுமதி சமூதாயத்திற்காக ”ஐரோப்பிய சந்தைக்கான வெளிப்பாட்டுப் பயணம்” (Exposure visit to EU market) என்ற புதிய சேவையை ஈடிபி (EDB) அறிமுகப்படுத்தியுள்ளது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் ∴ வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி∴ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 18 | கல்புட் (Gulfood) 2025 உணவு மற்றும் பானங்கள் கண்காட்சி | 1 | 15.02. 2025 | 22.02. 2025 | 804,982.90 | வெளிநாடு | நுகர்வோர் போக்குகள் (Consumer trends), புதுமையான தயாரிப்புகள், போட்டியாளர்களின் சலுகைகள், வளர்ந்து வரும் சந்தை மாற்றங்கள் மற்றும் சாத்தியமான சந்தைகள் (Potential markets) குறித்த மதிப்புமிக்க தகவல்களை என்னால் திரட்ட முடிந்தது. இந்தத் திறன் உலகளாவிய தொழில்துறை முன்னேற்றங்களைப் பகுப்பாய்வு செய்யவும், புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறியவும் துணைபுரிகிறது. |
| 19 | சர்வதேச உணவு மற்றும் பானங்கள் கண்காட்சி (IFE) | 1 | 15.03. 2025 | 21.03. 2025 | 921,858.75 | வெளிநாடு | பதப்படுத்தப்பட்ட உணவுகள் மற்றும் பொதியிடல் (Packaging) முறையில் வளர்ந்து வரும் புதிய போக்குகள் குறித்த நுண்ணறிவைப் பெற்றேன். உலகளாவிய ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்தும் புதுமையான விளம்பர உத்திகளைக் கற்றுக் கொண்டேன். இலங்கை உணவுப் பொருட்களுக்கான சாத்தியமான ஏற்றுமதி வாய்ப்புகளைக் கண்டறிந்தேன். சர்வதேச கொள்வனாளர்களுடனான வலையமைப்பை (Networking) மேம்படுத்தியதன் மூலம் நிறுவனத்தின் நற்பெயரை (Institutional visibility) அதிகரித்தேன். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலகளாவிய சந்தைகளுக்குத் தேவையான தரக்கட்டுப்பாடுகள் மற்றும் சான்றிதழ்கள் (Certifications) குறித்த புரிதலை வலுப்படுத்தினேன். சந்தை நுண்ணறிவுத் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் போட்டியாளர்களைப் பகுப்பாய்வு செய்தல் (Market intelligence and competitor analysis) தொடர்பான அறிவை மேம்படுத்திக் கொண்டேன். |
| 20 | தொழில்முனைவு (Startup) சூழல் மண்டலக் கொள்கை மேம்பாடு குறித்த பயிலரங்கு | 2 | 11.05. 2025 | 18.05. 2025 | 328,725.38 | வெளிநாடு | தோழில் முனைவு (Startup) சூழல் மண்டலங்களை வளர்ப்பதில் பொதுக் கொள்கைகளின் (Public policies) முக்கியத்துவம் குறித்த நுண்ணறிவைப் பெற்றேன். இது தொழில் முனைவோரின் வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் கொள்கை கட்டமைப்புகளை வடிவமைக்கும் திறனை எனக்கு வழங்கியது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் ∴ வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி.∴ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 21 | உற்பத்தித்திறனுக்கான கொள்கை வகுப்பில் ”நடத்தைசார் நுண்ணறிவு” (Behavioral Insights) குறித்த மாநாடு | 5 | 20.04. 2025 | 23.04. 2025 | 273,797.33 | வெளிநாடு | கொள்கை வகுப்பதில் (Policymaking) ”நடத்தைசார் நுண்ணறிவுகள்” (Behavioral Insights) மற்றும் அவற்றின் பயன்பாடுகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது குறித்த மேம்பட்ட புரிதலைப் பெற்றேன். மேலும், உறுப்பு நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது கொள்கை வகுப்பில் நடத்தைசார் நுண்ணறிவுகளை ஒருங்கிணைப்பதற்கான நடைமுறைப் பரிந்துரைகளையும் (Actionable recommendations) கண்டறிந்தேன் |
| 22 | ஜைக்கா (JICA) திட்டத்தின் கீழ் ”ஜப்பானிய சந்தையில் ICT / BPM நிறுவனங்களை ஊக்குவித்தல்” - ஜப்பான் ஐடி வீக் (Japan IT Week) | 2 | 20.04. 2025 | 26.04. 2025 | 1,257,427.22 | வெளிநாடு | கொள்கை வகுப்பதில் (Policymaking) ”நடத்தைசார் நுண்ணறிவுகள்” (Behavioral Insights) மற்றும் அவற்றின் பயன்பாடுகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது குறித்த மேம்பட்ட புரிதலைப் பெற்றேன். மேலும், உறுப்பு நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது கொள்கை வகுப்பில் நடத்தைசார் நுண்ணறிவுகளை ஒருங்கிணைப்பதற்கான நடைமுறைப் பரிந்துரைகளையும் (Actionable recommendations) கண்டறிந்தேன். |
| 23 | சீனாவின் தொழில்துறை மற்றும் கனிம வளத் துறைக்கான ஆய்வுப் பயணம் | 2 | 20.04. 2025 | 25.04. 2025 | 74703.76 | வெளிநாடு | சீனாவின் அரசுக்குச் சொந்தமான நிறுவனத்திற்குச் சொந்தமான மிகப்பெரிய ஒற்றை டைட்டானியம் (Titanium) ஆலை, சிமெண்ட் ஆலை, உலகின் மிகப்பெரிய சூரிய மின்சக்தி (Photovoltaic) நிலையம், அரிய மண் பாலிஷ் பவுடர் (Rare earth polishing powder) ஆலை மற்றும் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் (R&D facilities) ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தேன். |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட் டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையா ன முதலீடு (ருபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித் திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | HKTDC ஹொங்கொங் பரிசுப் பொருட்கள் மற்றும் பிரீமியம் கண்காட்சியில் (Hong Kong Gifts & Premium Fair) ஈடிபி (EDB) அரங்கு அமைத்தல் மற்றும் அதில் பங்கேற்பதற்கா ன இலங்கை வர்த்தகத் தூதுக்குழுவை ஒழுங்கமைத்தல் | 1 | 25.04 .2025 | 01.05 .2025 | 966,738.25 | வெளிநாடு | உலகளாவிய கொள்வனாளர்களின் விருப்பத்தேர்வுகள் (Buyer preferences), வளர்ந்து வரும் வடிவமைப்புப் போக்குகள் மற்றும் நிலைத்தன்மை தேவைகள் (Sustainability requirements) குறித்த நேரடி நுண்ணறிவுகளையும், மேம்பட்ட சந்தை தகவல்களையும் பெற்றேன். அத்துடன் வலையமைப்பு (Networking) மற்றும் வர்த்தக வசதி திறன்களையும் (Trade facilitation skills) வலுப்படுத்தினேன். கண்காட்சி மற்றும் வர்த்தக மேம்பாட்டில் உள்ள சிறந்த நடைமுறைகளை, குறிப்பாக ஒரு காட்சி அரங்கை (Stall) எவ்வாறு திறம்பட நிர்வகிப்பது என்பது குறித்துக் கற்றுக்கொண்டேன். இது இலக்கு சார்ந்த சந்தை மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவும், சர்வதேசக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்காக ஏற்றுமதியாளர்களைச் சிறந்த முறையில் தயார்படுத்தவும் துணைபுரிகிறது |
| 25 | தைபெக்ஸ் அனுகா ஆசியா (Thaifex Anuga Asia) 2025 கண்காட்சிக்கு இணையாக தொழில் நுட்ப வெளிப்பாடு மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டம். | 2 | 25.05 .2025 | 01.06 .2025 | 1,294,637 .46 | வெளிநாடு | ஆதாயங்கள் மற்றும் அறிவு (Gains & Knowledge):<br>சந்தை வெளிப்பாடு (market exposure), உலகளாவிய போக்குகள் பற்றிய நுண்ணறிவு (global trend insights), திறன் மேம்பாடு (capacity building), பிணையத் தொடர்பு (networking) மற்றும் புத்தாக்கக் கற்றல் (innovation learning) ஆகியவற்றின் மூலம் வர்த்தகக் கண்காட்சி மற்றும் தொழில்நுட்ப வெளிப்பாடு ஆகிய இரண்டுமே மிகப்பெரிய அளவில் பயனடைந்தன. நிறுவன மற்றும் வளர்ச்சி தாக்கம் (Institutional & Development Impact): வர்த்தகக் கண்காட்சி மற்றும் தொழில்நுட்ப வெளிப்பாடு ஆகிய இரண்டுமே தேசிய ஏற்றுமதி மேம்பாட்டு நோக்கங்களுக்கான ஒரு மூலோபாயக் கருவியாகவும் (strategic tool), வர்த்தகம், புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை குறித்த எதிர்காலக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கான ஒரு கற்றல் தளமாகவும் செயல்பட்டன. காலப்போக்கில், இத்தகைய கண்காட்சிகளின் தொடர்ச்சியான வெற்றிகரமான பதிப்புகள், பொருளாதாரச் செயல்பாடு மற்றும் நிறுவனத் திறனை வலுப்படுத்துவதுடன், உலகளாவிய தொடர்புகளுடைய மற்றும் புத்தாக்கத்தால் இயங்கும் மீள்திறன் (resilient) கொண்ட உணவுத் தொழில்துறையை உருவாக்க உதவும். |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத் தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 26 | உற்பத்தித்திற ன் மேம்பாட்டிற்கா ன செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தரவு பகுப்பாய்வு (Data Analytics) குறித்த பயிற்சி வகுப்பு. | 1 | 04.05. 2025 | 10.05. 2025 | 102,593 .59 | வெளி நாடு | செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பெருந்தரவு பகுப்பாய்வு (Big data analytics) பற்றிய ஆழமான புரிதல், செயற்கை நுண்ணறிவு சார்ந்த கருவிகள் மற்றும் காட்சிப்படுத்தல் நுட்பங்களைப் (visualization techniques) பயன்படுத்தி சிக்கலான தரவுகளை எவ்வாறு வகைப்படுத்தி பகுப்பாய்வு செய்வது, மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க தகவலறிந்த முடிவுகளை எடுக்க செயற்கை நுண்ணறிவு மற்றும் காட்சித் தகவல்தொடர்பு (visual communication) ஆற்றலை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியது. |
| 27 | SIAL கனடா 2025 கண்காட்சி, B2B (வணிகங்களு க்கிடையிலான ) திட்டம் மற்றும் சந்தை விழிப்புணர்வு அமர்வு | 1 | 24.04. 2025 | 04.05. 2025 | 1,365,619 .74 | வெளி நாடு | இயற்கை, தாவர அடிப்படையிலான, ஆரோக்கியம் சார்ந்த மற்றும் நிலையான தயாரிப்புகளின் புதிய சந்தைப் போக்குகள் குறித்த அறிவு பெறப்பட்டது. வாங்குபவர்களின் எதிர்பார்ப்புகள், ஒழுங்குமுறைத் தேவைகள், சான்றிதழ்கள், லேபிளிடுதல் மற்றும் விலை நிர்ணயக் கட்டமைப்புகள் குறித்த நேரடி அனுபவம் கிடைத்தது. இலங்கைத் தயாரிப்புகளின் போட்டித்தன்மை மற்றும் கனடிய சந்தையில் நுழைவதற்குத் தேவையான மேம்பாடுகள் குறித்த நுண்ணறிவுகளும் எட்டப்பட்டன.<br>கனடிய வாங்குபவர்கள், விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள், வணிகச் சபைகள் மற்றும் புலம்பெயர்ந்த வணிகக் குழுக்களுடனான பிணையத் தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டன. கனடிய தரநிலைகள், இணக்கப்பாடுகள் மற்றும் சந்தைத் தேவைகள் குறித்து ஏற்றுமதியாளர்களுக்கு ஆலோசனை வழங்கும் EDB-இன் திறன் மேம்படுத்தப்பட்டது. மேலும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட சந்தை நுழைவுத் திட்டங்கள் மற்றும் துறை சார்ந்த ஏற்றுமதி மேம்பாட்டு முயற்சிகளை வடிவமைக்கும் திறன் மேம்பட்டதோடு, எதிர்கால வர்த்தக நிகழ்வுகளுக்கான தயாரிப்புத் தெரிவு, பொதியிடல் மற்றும் சந்தைப்படுத்துதல் முறைகளும் வலுவூட்டப்பட்டன. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித்திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | இயற்கை மற்றும் அங்கயவப் பொருட்கள் கண்காட்சி (NOPEX) 2025 வணிகக் கண்காட்சி | 1 | 10.05. 2025 | 15.05. 2025 | 802,251. 15 | வெளி நாடு | இயற்கை மற்றும் அங்கக (organic) தயாரிப்புகளின் சமீபத்திய உலகளாவிய போக்குகள் குறித்த நேரடி அனுபவம் பெறப்பட்டது. இதில் சுத்தமான சிட்டையிடல் (clean-label), மருத்துவக் குணமுள்ள உணவுகள் (functional foods), தாவர அடிப்படையிலான புத்தாக்கங்கள், நலவாழ்வுத் தயாரிப்புகள் (wellness products), நிலையான பொதியிடல் (sustainable packaging) மற்றும் அறநெறி சார்ந்த கொள்முதல் (ethical sourcing) ஆகியன உள்ளடங்கும். வளர்ந்து வரும் பிரத்யேக சந்தைப் பிரிவுகள் (niche categories) மற்றும் புதிய தயாரிப்புகள் குறித்த நுண்ணறிவுகளும், ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய (EU) சந்தைகளின் நுகர்வோர் விருப்பங்கள் குறித்த புரிதலும் எட்டப்பட்டன. மேலும், ஐக்கிய இராச்சியத்தின் வணிகச் சூழல் மற்றும் கலாச்சாரத்தைப் புரிந்துகொண்டதோடு, அங்குள்ள வர்த்தக வாய்ப்புகளும் அடையாளம் காணப்பட்டன |
| 29 | நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சுற்றுலாவை (Sustainable Inclusive Tourism) மேம்படுத்துதல் குறித்த பயிலரங்கு. | 1 | 02.06. 2025 | 07.06. 2025 | 83,849 .67 | வெளி நாடு | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (Asian Productivity Organization) உறுப்பு நாடுகளிடையே மிகவும் நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான கொள்கைகளும் முன் முயற்சிகளும் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன் மேலும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் நிலையான / பசுமை சுற்றுலாவுக்கான ஒரு தரநிலையும் உருவாக்கப்பட்டுள்ளது. |
| 30 | 29-வது குன்மிங் (Kunming) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கண்காட்சி | 2 | 17.06. 2025 | 26.06. 2025 | 2,332,296 .60 | வெளி நாடு | இலங்கை பங்கேற்பாளர்கள் வணிகக் கட்டளைகளை (business orders) உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக, இரத்தினக்கற்களைப் பரிசோதிப்பதற்கும் மற்றும் அவற்றின் மதிப்பைத் தீர்மானிப்பதற்கும் வசதியாக இரத்தினக்கல் பரிசோதனை ஆய்வகத்திற்கு (Gem Testing Laboratory) ஏற்பாடு செய்யப்பட்டது. |
| 31 | மத்திய கிழக்கு ரப்பர் மற்றும் டயர் கண்காட்சி | 1 | 15.06. 2025 | 21.06. 2025 | 657,707. 65 | வெளி நாடு | தயாரிப்பு மற்றும் சந்தைப் போக்குகள் குறித்த அறிவு பெறப்பட்டதுடன், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இறப்பர் துறைக்கான பயனுள்ள ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டங்களை வகுப்பதற்காகப் போட்டியாளர்களின் சந்தை நுணுக்கங்கள் (competitor intelligence) ஆராயப்பட்டு சேகரிக்கப்பட்டன |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித்திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | பசுமை உற்பத்தித்திறன் (Green Productivity) குறித்த பயிற்சி வகுப்பு. | 1 | 08.06. 2025 | 21.06. 2025 | 104,702. 50 | வெளி நாடு | உள்ளூர் தொழில்துறைகளின் போட்டித்தன்மை மற்றும் மீள்திறனை மேம்படுத்துவதோடு, சுற்றுச் சூழல் பாதிப்புகளைக் குறைப்பதன் மூலம் அவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது குறித்த அறிவு பெறப்பட்டது. |
| 33 | 20-வது சீன சர்வதேச சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கண்காட்சியில் (CISMEF) இலங்கை அரங்கு | 1 | 25.06. 2025 | 01.07. 2025 | 904,127. 32 | வெளி நாடு | EDB மற்றும் IDB ஆகியவற்றால் ஒருங்கிணைக்கப்பட்ட 46 சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) பிரதிநிதிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதுடன், இலங்கையின் ஏற்றுமதித் துறை, சீனா - இலங்கை இடையிலான வர்த்தகம் மற்றும் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்த விளக்கக்காட்சியும் (Presentation) நிகழ்த்தப்பட்டது. |
| 34 | கம்போட் மிளகு (Kampot Pepper) தற்போதைய தடயமறியும் அமைப்பு (Traceability System) குறித்த பங்குதாரர்களின் ஆய்வு. | 2 | 22.06. 2025 | 27.06. 2025 | 162,226. 00 | வெளி நாடு | கம்போடியாவின் நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகம் (Institutional Synergy and Governance), கம்போட் மிளகிற்காக (Kampot pepper) பயன்படுத்தப்படும் தர உத்தரவாதம் மற்றும் தடமறியும் முறைமை (Quality Assurance and Traceability system), மற்றும் கம்போட் மிளகை ஊக்குவிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி மூலோபாயம் (Marketing and Export Strategy) குறித்த அறிவு பெறப்பட்டது |
| 35 | தாக்க அறுவடை மன்றம் - அனைவரையும் உள்ளடக்கிய வணிகங்களில் முதலீடு செய்தல் (Impact Harvest Forum - Investing in Inclusive Businesses) | 1 | 02.07. 2025 | 05.07. 2025 | - | வெளி நாடு | பல்வேறு துறைகளிலும் அனைவரையும் உள்ளடக்கிய வணிகங்களில் (inclusive businesses) முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்த அறிவு பெறப்பட்டது. மேலும், முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் வசதிப்படுத்துவதற்கும், வணிக மாதிரிகளை மேம்படுத்துவதற்கும், முதலீட்டாளர்கள், அரச நிறுவனங்கள், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையே வலையமைப்பை (networking) உருவாக்கிப் பங்காளித்துவங்களை ஆராய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித்திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 36 | சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை (ESG) மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) நோக்கி வணிகத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்த பணிமனை (Workshop on Driving Business toward ESG and the SDGs) | 1 | 28.07. 2025 | 02.08. 2025 | 100,430. 62 | வெளி நாடு | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) பசுமை உற்பத்தித்திறன் (Green Productivity) கருத்துருவைப் பரப்புதல் மற்றும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் உறுப்பு நாடுகளில் தங்களது வணிகத் திட்டங்களில் நுளுபு (சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுமை) மற்றும் SDG (நிலையான வளர்ச்சி இலக்குகள்) கொள்கைகளை உள்ளடக்கிய நிறுவனங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகியன எட்டப்பட்டன. |
| 37 | 2025-ஆம் ஆண்டிற்குப் பிந்தைய ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (Asian Productivity Organization) தொலைநோக்குப் பார்வை குறித்த உயர்மட்ட மூலோபாயப் பணிமனை. | 1 | 07.07. 2025 | 12.07. 2025 | 38,437 .50 | வெளி நாடு | 2026-ஆம் ஆண்டிற்கான ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை புதிய தொலைநோக்குப் பார்வையுடன் ஒருங்கிணைத்தல் 2026-இல் APO திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களின் பொருத்தம், செயல்திறன், வினைத்திறன், நிலைத்தன்மை மற்றும் தாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் APO செயலகத்திற்கும் உறுப்பு நாடுகளின் தேசிய உற்பத்தித்திறன் அமைப்புகளுக்கும் (NPOs) இடையிலான நடைமுறைப்படுத்தல் ஏற்பாடுகளை வலுப்படுத்துதல் ஆகியன எட்டப்பட்டன. |
| 38 | டிஜிட்டல் தீர்வுகள் மூலமான வட்டப் பொருளாதாரம் (Circular Economy) குறித்த பணிமனை | 1 | 14.07. 2025 | 19.07. 2025 | 46,207 .96 | வெளி நாடு | வட்டப் பொருளாதாரத்தில் (Circular Economies) டிஜிட்டல் தொழில்நுட்பங்களின் பங்கு குறித்த மேம்பட்ட அறிவு, அவற்றைச் செயல்படுத்துவதற்கான உத்திகள் மற்றும் சவால்கள் பற்றிய விரிவான புரிதல், மற்றும் டிஜிட்டல் வட்டப் பொருளாதாரத்தைப் பின்பற்றுவதற்கான கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியன எட்டப்பட்டன. மேலும், பசுமை உற்பத்தித்திறனுடன் (Green Productivity) இணக்கமான நிலையான வள மேலாண்மைக்கான தீர்வுகளும் அடையாளம் காணப்பட்டன. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையான முதலீடு (ருபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சித்திட்டதின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 39 | வர்த்தக ஊக்குவிப்பு அமைப்புகளின் தலைமைத்துவ உரையாடல் – உலகளாவிய சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) அமைச்சர்கள் மட்டத்திலான கலந்துரையாடல். | 1 | 19.07. 2025 | 26.07. 2025 | 69,062. 23 | வெளி நாடு | இலங்கை சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (SMEs) ஆதரவளிக்கும் வகையில், அவற்றின் வளர்ச்சி, போட்டித்தன்மை மற்றும் நிலைத்தன்மைக்கான உலகளாவிய சிறந்த நடைமுறைகள் குறித்த விரிவான புரிதல் எட்டப்பட்டது. அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், சர்வதேச முகவர் நிலையங்கள் மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு (TPO) தலைவர்களுடனான உயர்மட்ட சர்வதேச தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டதன் மூலம் எதிர்கால ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படும் சந்தை அணுகல் ஆதரவு, ஏற்றுமதித் தயார்நிலை, மதிப்புச் சங்கிலி மேம்பாடு மற்றும் புத்தாக்கம் போன்ற வெற்றிகரமான ஏற்றுமதி ஊக்குவிப்பு மாதிரிகள் குறித்த நேரடி அனுபவம் பெறப்பட்டது. மேலும், இலங்கையில் அறிமுகப்படுத்த அல்லது வலுப்படுத்தக்கூடிய SME நிதி வசதி, திறன் மேம்பாடு மற்றும் அரச-தனியார் பங்களிப்பு (PPP) ஆகியவற்றுக்கான உலகளாவிய வழிமுறைகள் குறித்த நுண்ணறிவுகளும் பெறப்பட்டன. |
| 40 | உயர்ந்த உற்பத்தித் திறனுக்காக உற்பத்தித் துறையைச் சேவை மயமாக்கல் (Servicification of Manufacturing Sector) குறித்த பயிற்சி நெறி. | 1 | 10.08. 2026 | 16.08. 2025 | 104,994 .22 | வெளி நாடு | ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் உற்பத்தித் துறையில் அதிக உற்பத்தித்திறன் மற்றும் போட்டித்தன்மையை முன்னெடுப்பதற்கான ஒரு மூலோபாயமாக, சேவைமயமாக்கலை (servicification) எவ்வாறு ஏற்றுக்கொள்வது என்பது குறித்த அறிவு பெறப்பட்டது. |
| 41 | பசுமைச் சுற்றுலாத் துறையில் நிலையான நடைமுறைகள் குறித்த பணிமனை (Workshop on Sustainable Practices in Green Tourism) | 1 | 03.08. 2025 | 08.08. 2025 | 38,780. 00 | வெளி நாடு | பசுமைச் சுற்றுலா நடைமுறைகளைச் செயல்படுத்துவதை எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்த அறிவு பெறப்பட்டதுடன், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) மேம்படுத்தப்பட்ட பசுமைச் சுற்றுலாத் தரநிலையும் உருவாக்கப்பட்டது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத்தி ன் காலவெல்லை (தினங்கள்) | | முழுமை யான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தp/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | திறன்மிகு உற்பத்தி (Smart Manufacturing) மற்றும் டிஜிட்டல் விநியோகச் சங்கிலிகள் (Digital Supply Chains) குறித்த பல்தேசிய அவதானிப்பு ஆய்வுப் பயணம். | 1 | 12.08. 2025 | 16.08. 2025 | 38,500. 00 | வெளி நாடு | திறன்மிகு உற்பத்தி (Smart Manufacturing) குறித்த மேம்பட்ட புரிதல், டிஜிட்டல் விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பு (digital supply chain integration) பற்றிய நுண்ணறிவுகள், மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய சிறந்த வழிமுறைகள் மற்றும் உத்திகளை அடையாளம் காணுதல் ஆகியன எட்டப்பட்டன. மேலும், கூட்டுமுயற்சி மற்றும் பிணையத் தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டதோடு, இவற்றைச் செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்களும் (action plans) வகுக்கப்பட்டன. |
| 43 | சீனா சர்வதேச காகித தொழில்நுட்பக் கண்காட்சி (CIPTE) மற்றும் யுண்டா (Yunda) தொழிற்சாலை விஜயம். | 1 | 12.08. 2025 | 18.08. 2025 | 254,268 .00 | வெளி நாடு | வாழைச்சேனை காகித ஆலைக்கான (Valachchenai paper factory) “வோயித் போர்டு“ (எழவைா டிழயசன) இயந்திரத்தின் இயந்திரவியல் மேம்பாடுகள் மற்றும் இயந்திரத்தின் உற்பத்தித் திறனை 52 GSM இலிருந்து 360 GSM வரை அதிகரிப்பதற்கான முறைகள் மற்றும் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவது குறித்த அறிவு பெறப்பட்டது. |
| 44 | உறுப்பு நாடாக இல்லாத ஒரு நாட்டிற்கான புத்தாக்க உணவுப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்க ள் குறித்த ஆய்வுப் பயணம் (Study Mission to a Nonmember Country on Innovative Technologies for Food Security). | 1 | 14.09. 2025 | 21.09. 2025 | 152,817 .65 | வெளி நாடு | உறுப்பு நாடாக இல்லாத ஒரு நாட்டிலிருந்து சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுதல், புத்தாக்க விவசாயத் தொழில்நுட்பங்கள் குறித்த அறிவை விரிவுபடுத்துதல், மீள்திறன் கொண்ட உணவு அமைப்புகளுக்காக (resilient food systems) நிலையான உணவு உற்பத்தியை சாத்தியப்படுத்துதல் மற்றும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) உறுப்பு நாடுகளில் அனைவருக்கும் சத்தான உணவு கிடைப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல் ஆகியன எட்டப்பட்டன. |
| 45 | தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளத்திறன் பயன்பாட்டிற்காக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக ளுக்கு (MSMEs) நிதி வசதிக்கான அணுகலை மேம்படுத்துவது குறித்த பணிமனை. | 1 | 18.08. 2025 | 23.08. 2025 | 46,245. 94 | வெளி நாடு | பசுமை உற்பத்தித்திறன் (GP) கட்டமைப்பை புதிய துறைகளுக்கு விரிவுபடுத்துதல், ஆசிய - பசிபிக் பிராந்தியம் முழுவதும் உள்ள நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (MSMEs) வணிக வளர்ச்சிக்கு நிதிசார் கருவிகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) முக்கிய பங்களிப்புகள் மூலம் தலையீடு தேவைப்படும் இடைவெளிகளைக் கண்டறிதல் ஆகியன எட்டப்பட்டன. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத்தி ன் காலவெல்லை (தினங்கள்) | | முழுமை யான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 46 | வாழ்க்கை முறை (Lifestyle) மற்றும் சேவைத் துறைகளில் சேவை உருமாற்றத் தலைமைத்துவம் குறித்த பணிமனை | 1 | 31.08. 2025 | 05.09. 2025 | 46,458. 56 | வெளி நாடு | வாழ்க்கை முறை மற்றும் சேவைத் துறைகளை உருமாற்றுவதில் தலைமைத்துவம் (leadership), வணிக செயல்முறை மறுசீரமைப்பு (BPR) மற்றும் மேலாண்மைத் தத்துவங்களின் முக்கியத்துவம் குறித்த அறிவு பெறப்பட்டது. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தலைமைத்துவம் ஆகியவை வணிகத் தடங்கல்களைக் கையாள்வதிலும் மாற்றத்தை முன்னெடுப்பதிலும் ஏற்படுத்தும் தாக்கம் குறித்த புரிதலும், மதிப்பு சார்ந்த மற்றும் உற்பத்தித்திறன் மிக்க எதிர்காலத் தொழில்களுக்கான உதாரணங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. |
| 47 | திறன்மிகு உற்பத்தி நிபுணர்களுக்கான (Smart Manufacturing Specialists) பயிற்சி நெறி. | 1 | 07.09. 2025 | 13.09. 2025 | 54,130. 78 | வெளி நாடு | திறன்மிகு உற்பத்தி (Smart Manufacturing) தொடர்பான ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) சிறப்பு மையத்தின் (COE) நற்பெயர் மற்றும் அங்கீகாரம் வலுப்படுத்தப்பட்டது. மேலும், தொழில்துறையில் திறன்மிகு உற்பத்தித் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றைச் செயல்படுத்தும் உத்திகள் குறித்த மேம்பட்ட புரிதல் எட்டப்பட்டதுடன், பயிற்சி பெற்ற பங்கேற்பாளர்கள் உறுப்பு நாடுகளின் சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிடையே (SMEs) திறன்மிகு உற்பத்தியை ஊக்குவிப்பார்கள். |
| 48 | மோட்டார் வாகனத் துறையில் நிகர-பூஜ்ஜிய உமிழ்வு (Net-Zero Emission) இலக்குகளை அடைவதற்கான சிறந்த ஒழுங்குமுறை நடைமுறைகள் குறித்த பணிமனை. | 2 | 22.09. 2025 | 27.09. 2025 | 137,698 .27 | வெளி நாடு | பல்வேறு மின்சார வாகன (xEV) தெரிவுகளுக்கு இடையிலான முக்கிய வேறுபாடுகள் மற்றும் அவை உற்பத்தித்திறன், ஆற்றல் திறன் மற்றும் உமிழ்வு ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்த மேம்பட்ட புரிதல் பெறப்பட்டது. அதேவேளையில், மோட்டார் வாகனத் துறைக்காக ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) உறுப்பு நாடுகளில் மிகவும் பயனுள்ள கொள்கைகளை வடிவமைக்க, சிறந்த ஒழுங்குமுறை நடைமுறை (Good Regulatory Practice) கருவிகளின் பயன்பாடு வலுப்படுத்தப்பட்டது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத்தி ன் காலவெல்லை (தினங்கள்) | | முழுமை யான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 49 | 2025-ஆம் ஆண்டு நடைபெற்ற 12-ஆவது FOODEX SAUDI கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பு. | 1 | 19.09. 2025 | 26.09. 2025 | 696,437 .19 | வெளி நாடு | இலங்கை அரங்கிற்குள் (Sri Lanka Pavilion) EDB-க்கான பிரத்யேகக் கூடமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் பங்கேற்ற சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி (SME) நிறுவனங்களின் தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதற்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புக் காட்சித் தளமும் அமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வின் விளைவாக, பங்கேற்ற நிறுவனங்களுக்கு மதிப்புமிக்க வணிக விசாரணைகள் (business inquiries) கிடைத்தன் இது வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பிற்கான வெளிப்படையான வாய்ப்புகளை வழங்கியது. திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் தொடர் நடவடிக்கைகள் என ஒவ்வொரு நிலையிலிருந்தும் கற்றுக்கொண்டதன் மூலம் கணிசமான அனுபவமும் நுண்ணறிவுகளும் பெறப்பட்டன. |
| 50 | இலங்கை ஆடைத் தொழில்துறைக்கான தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் 2025 சீனா சர்வதேச தையல் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் கண்காட்சிக்கான (CISMA 2025) நேரடிப் பார்வைக்கான பயணம். | 1 | 22.09. 2025 | 29.09. 2025 | 827,797 .79 | வெளி நாடு | உலகளாவிய தொழில்நுட்பப் போக்குகள் குறித்த விரிவான புரிதல் பெறப்பட்டது. இலங்கை ஆடைத் துறை சார்ந்த சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் (SMEs) தொழில்நுட்பத் தேவைகள் குறித்த அறிவு மேம்படுத்தப்பட்டது் இந்த அறிவானது EDB-இன் கொள்கை திட்டமிடல் மற்றும் SME அபிவிருத்தி திட்டங்களுக்கு மிகவும் அவசியமானதாகும். இந்த நேரடி அனுபவமானது, இணைக்கப்பட்ட உற்பத்தி முறைக்கு (connected manufacturing) மாறுதல், உற்பத்தித்திறனை மையமாகக் கொண்ட தொழிற்சாலை தள அமைப்பில் மாற்றங்களைச் செய்தல் மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்புகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றில் இலங்கை உற்பத்தியாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டல்களை வழங்க EDB-க்கு உதவுகிறது. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் காலவெல்லை (தினங்கள்) | | முழுமை யான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 51 | 2025 தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா டிஜிட்டல் ஒத்துழைப்பு மாநாடு மற்றும் தொழில் மற்றும் வர்த்தக வழங்கல் மற்றும் தேவை பொருந்தும் நிகழ்வு. | 4 | 27.08. 2025 | 30.08. 2025 | 93,245. 75 | வெளி நாடு | டிஜிட்டல் ஒத்துழைப்பு உரையாடல், டிஜிட்டல் தேச ஒத்துழைப்பு, டிஜிட்டல் விவசாயம், தொழில்துறை, கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், போக்குவரத்து மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence). |
| 52 | பொதுத்துறை உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான டிஜிட்டல் மாற்றம் மற்றும் ஒழுங்குமுறை தொழில்நுட்பம் (RegTech) குறித்த மாநாடு. | 3 | 30.09. 2025 | 03.10. 2025 | 93,300. 00 | வெளி நாடு | அரசுத் துறையின் டிஜிட்டல் மாற்றத்தில் (digital transformation) ஒழுங்குமுறைத் தொழில்நுட்பத்தின் (Regulatory Technology - RegTech) அடிப்படைகள் மற்றும் நன்மைகள் குறித்த புரிதல் பெறப்பட்டது. மேலும், புத்தாக்கமான ஒழுங்குமுறை தீர்வுகளை ஆராய்தல் மற்றும் ஒழுங்குமுறைத் தொழில்நுட்ப ஆட்சியின் கீழ் அரசுத் துறை நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான எல்லைகடந்த ஒத்துழைப்புகளில் (cross-border collaboration) ஈடுபடுதல் ஆகியன எட்டப்பட்டன. |
| 53 | சீனச் சந்தையில் இலங்கைச் இலவங்கப்பட்டை மற்றும் ஏனைய நறுமணப் பொருட்களை ஊக்குவிப்பதற்கான வெளிநோக்கிய வர்த்தகத் தூதுக்குழு. | 2 | 15.09. 2025 | 24.09. 2025 | 147,000 .00 | வெளி நாடு | சீனச் சந்தை மற்றும் அங்கிருக்கும் நுகர்வோர் நடத்தை குறித்த நேரடி அனுபவம் பெறப்பட்டது. சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான தகுதிகள் மற்றும் தயார்நிலை குறித்த புரிதல் எட்டப்பட்டதுடன், சீன அதிகாரிகளைத் தொடர்பு கொள்வதன் மூலம் சாத்தியமான ஏற்றுமதியாளர்களுக்கான சந்தை இணைப்புகளை (market linkages) வழிநடத்த முடிந்தது. சீன நிறுவனங்கள் விவசாயத் தயாரிப்புகளுக்குப் பயன்படுத்தும் ஆழமான மதிப்பு கூட்டல் (value addition) முறைகள் மற்றும் சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதில் உள்ள தடைகள் ஆகியவை கண்டறியப்பட்டன. |

| | நிகழ்ச்சி த்திட்டம் | பயிற்சி வழங்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தி ன் காலவெல்லை (தினங்கள்) | | முழுமையா ன முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 54 | உலகக் கண்காட்சி 2025 | 1 | 24.09. 2025 | 30.09. 2025 | 1,132,951 .05 | வெளி நாடு | சர்வதேச விளம்பர நிகழ்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துவதில் நடைமுறை அனுபவம் பெறப்பட்டது. நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல், பங்குதாரர்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்களுடன் (Trade Chambers/Associations) இணைந்திருத்தல் மற்றும் ஜப்பானிய வணிகத் தளங்களில் இலங்கைத் தயாரிப்புகளை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கான எனது திறன் மேம்படுத்தப்பட்டது. இலங்கை ஏற்றுமதியாளர்களைப் பொருத்தமான ஜப்பானிய வாங்குபவர்களுடன் எவ்வாறு இணைப்பது, தொடர் நடவடிக்கை முறைகளை (follow-up mechanisms) உருவாக்குவது மற்றும் நீண்டகால வணிகத் தொடர்புகளை ஆதரிப்பது ஆகியவற்றைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள இந்த அனுபவம் உதவியது. குறிப்பாக, இலங்கையின் ஏற்றுமதியை ஜப்பானுக்கு விரிவுபடுத்துவதற்காக மேம்படுத்தப்பட வேண்டிய சாத்தியமான துறைகள், தயாரிப்புத் தேவைகள் மற்றும் கூட்டுமுயற்சி வாய்ப்புகள் ஆகியவை கண்டறியப்பட்டன. |
| 55 | உலகக் கண்காட்சி 2025 | 1 | 20.09. 2025 | 11.10. 2025 | 1,771,762. 91 | வெளி நாடு | சர்வதேச விளம்பர நிகழ்வுகளை ஒருங்கிணைப்பதில் நடைமுறை அனுபவம் பெறப்பட்டதுடன், முக்கிய ஏற்றுமதித் துறைகளுக்கான பிணையத் தொடர்பு வர்த்தக வழிகாட்டல்களை உருவாக்குதல் (Trade lead generation) மற்றும் B2B வணிக இணைப்புகளை ஏற்படுத்துவதில் நிபுணத்துவம் வலுப்படுத்தப்பட்டது. உலகளாவிய கண்காட்சித் தரநிலைகள், புத்தாக்கமான காட்சிப்படுத்தல் தொழில்நுட்பங்கள் மற்றும் பயனுள்ள நாட்டு-நாமநாமக் குறிப்பு (Country-branding) உத்திகள் குறித்த ஆழமான புரிதல் எட்டப்பட்டது. ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகம், JETRO, SLBCJ மற்றும் ஜப்பானிய வர்த்தக அமைப்புகளுடன் வலுவான கூட்டாண்மைகள் உருவாக்கப்பட்டன. குறைந்த செலவில் உயர்தர வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வழங்கும் நிறுவனத் திறன் மேம்படுத்தப்பட்டதுடன், ஜப்பானில் உள்ள ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கான சந்தை நுண்ணறிவு விரிவுபடுத்தப்பட்டது. நீண்டகால ஒத்துழைப்பிற்கான உலகளாவிய வலைப்பின்னல்கள் பலப்படுத்தப்பட்டதோடு, நிறுவனத்திற்குள் தலைமைத்துவம், தகவல் தொடர்பு மற்றும் மேலாண்மைத் திறன்களும் வலுவூட்டப்பட்டன. |

| | நிகழ்ச்சித்திட்டம் | பயிற்சி வழங்கப் பட்டவர் களின் எண்ணி க்கை | நிகழ்ச்சித்திட்டத்தி ன் காலவெல்லை (தினங்கள்) | | முழுமை யான முதலீடு (ரூபா) உள்;ர் / வெளியூர் | நிகழ்ச்சி த்திட்ட தின் தன்மை | பூர்த்தி/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 56 | உலகக் கண்காட்சி 2025 | 1 | 25.09. 2025 | 30.09. 2025 | 994,663 .45 | வெளி நாடு | ஜப்பானிய முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகள், தரநிலைகள் மற்றும் ஆர்வமுள்ள துறைகள் குறித்த தெளிவான புரிதல் பெறப்பட்டது. ஜப்பானிய வர்த்தகச் சபைகள், சங்கங்கள் மற்றும் தொழில்துறைத் தலைவர்களுடனான உயர்மட்டத் தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டன. எதிர்கால முதலீட்டு ஊக்குவிப்பு முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கும், இலங்கை ஏற்றுமதியாளர்களுக்குச் சிறந்த முறையில் வசதிகளைச் செய்து கொடுப்பதற்குமான அறிவு மேம்படுத்தப்பட்டது. பிணையத் தொடர்பு நிகழ்வில் (networking event) பங்கேற்ற இலங்கை நிறுவனங்களிடமிருந்து நேரடிப் பின்னூட்டங்கள் (feedback) பெறப்பட்டன் இது மேம்படுத்தப்பட்ட ஆதரவு வழிமுறைகள், இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் மற்றும் ஜப்பானிய சந்தையில் நீண்டகால வர்த்தகப் பங்களிப்புகளை உருவாக்குவதற்கு வழிவகுத்தது. |
